
# கொக்குவில் இந்துக் கல்லூரி 100வது ஆண்டு விழா
## "மகுடம்" 16வது ஆண்டு விழா சிறப்பு மலர்



Founder
Mr. E. Chelliah

CENTENARY YEAR நூறாவது ஆண்டுவிழா

கற்றதொழுகு

1910 - 2010












1910 - 2010

# KOKUVIL HINDU COLLEGE CENTENARY YEAR 2010 AND "MAHUDAM" 16TH ANNUAL CELEBRATION

Kokuvil Hindu College Old Students' Association - Canada

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday - March 27, 2010

# ஆயுட்காப்புறுதி

நிம்மதியான வாழ்க்கைக்கு ஒரு நிரந்தரத்தீர்வு

# LIFE INSURANCE

**RESP, RSP Funds**

**Non-Medical Insurance, Life Insurance,**

**Disability, Critical-Illness, Mortgage Insurance,**

RBC Insurance

INDUSTRIAL ALLIANCE
INSURANCE AND FINANCIAL SERVICES INC.

**Menan Rasanayagam**

**மேனன் இராசநாயகம்**

காப்புறுதி முகவர்

ROYAL BROKERS
INSURANCE & INVESTMENT SOLUTIONS

**416-564-2008**



Canada Life™ | Manulife Financial | Assumption Life | Unity Life of Canada

**80 Nashdene Road, Unit 26, Toronto, ON. M1V 5E4 Tel : 416-298-4722 Fax : 416-298-4664**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் இந்துக் கல்லூரி

## பழைய மாணவர் சங்கம் - கனடா

1994 □ 2010

பெருமையுடன் வழங்கும்

# கல்லூரியின் 100வது ஆண்டு சிறப்பு விழா

பிரதம விருந்தினர்

திரு. திருமதி. அ. முத்துலிங்கம்
Mr. & Mrs. A. Muthulingam
(B.Sc, Chartered Accountant, Management Accountant)

பழைய மாணவர் சங்கம் - கனடா வழங்கும்

வருடாந்த கலை நிகழ்ச்சி

# மகுடம் 2010

16வது ஆண்டு நிகழ்ச்சி
முத்தமிழ் கலைகளின் சங்கமம்

பிரதம விருந்தினர்

திரு. திருமதி. படிகலிங்கம் ஞானேந்திரன்
Mr. & Mrs. Padigalingam Gnanendran

(MD, FFARCS, FRCPC)

கல்லூரியின் 100வது ஆண்டு சிறப்பு நிகழ்ச்சி
**March 27th** சனிக்கிழமை மாலை 5.00 மணி
**J & J Swagta Convention Centre**
**415 Hood Road, Markham, Ontario, L3R 3W2.**

மகுடம் 2010 கலை நிகழ்ச்சி
**May 1st** சனிக்கிழமை மாலை 5.00 மணி
கனடா ஐயப்பசுவாமி கோயில் கலை மண்டபம்
**635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என்றும் பசுமை நிறைந்த உடன் மரக்கறி, மீன், இறைச்சி, வகைகளில் ஓர் புரட்சி”

# NEW SPICELAND
## SUPER MARKET

NEW SPICELAND SUPER MARKET

*Fast, Friendly Efficient Service*







உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்களையும்

மற்றும் உடன் மரக்கறி, இறைச்சி, மீன் வகைகளையும்

பெற்றுக்கொள்ள எங்களிடம் வாருங்கள்

வகை வகையான பழங்களுடன் பூஜைக்குரிய பொருட்களும்

எம்மிடம் மிகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்



போதியளவு வாகனத் தரிப்பிடம்

கடையின் பின்புறமாகவும் உள்ளது.

நியூ ஸ்பைசிலாண்ட் சுப்பர் மார்க்கட்

**5790 SHEPPARD AVE. E., UNIT 4, 5 & 6**

**SCARBOROUGH, ON TEL: 416-292-9769**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் இந்துக் கல்லூரி கீதம்

1910 - 2010

தெளிதரு கலை பயில் பல மாணவர் தேர்
கொக்குவில் இந்துக் கல்லூரி
கொக்கூர்க்கு இந்துக் கல்லூரி நீ தீபம்
கிராமத்துக் கொண்மணி மகுடம்
நின துயர் கலை முறை நிதம் நிதம் பெற்றோம்
நின தருள் யாமினி மறவோம்
நீயே வித்தையின் உறையுள் நினதே எங்களின் உயர்வு
நின தடி ஏத்து வோமே!

**Chors**

நின தருள் மிகு மொழி நமதே பொருளாம் நீ தரு ஞான மதீதம்
ஜெயஹோ! ஜெயஹோ! ஜெயஹோ! ஜெய ஜெய ஜெய ஜெயஹோ!
நீ தரு ஞான மதீதம்
அறிவுச் சுடர் கொண்டறம் பொருளின்பம்
தழுவும் வாழ்வினைத் தந்தாய்
கற்றன ஒழுகும் சீருறு வழி நீ
காட்டினை நீடுக எனவே
அற்புத நடமாடமலன் அடிமன னொடு வழிபடுவோம்
வழிமுறை மிளிர்க நின் நாமம்!

**Chors**

நின தருள் மிகு மொழி நமதே பொருளாம் நீ தரு ஞான மதீதம்
ஜெயஹோ! ஜெயஹோ! ஜெயஹோ! ஜெய ஜெய ஜெய ஜெயஹோ!
நீ தரு ஞான மதீதம்
உள்ளத் துறுதி தருவா யுன்றன்
பாரம் பரியம் பேண
பூமியில் நீபெறு நல்லிசை மேலாம்
பெருமிதம் மாணவர்க் கென்றும்
முயல்குவம் நீயுயர் வழிகள் முழுமன னொடு மகிழ்வாக
கொக்குவில் இந்து நமதே! கொக்குவில் இந்து நமதே!

**Chors**

நின தருள் மிகு மொழி நமதே பொருளாம் நீ தரு ஞான மதீதம்
ஜெயஹோ! ஜெயஹோ! ஜெயஹோ! ஜெய ஜெய ஜெய ஜெயஹோ!
நீ தரு ஞான மதீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தமாக வீடு
# சந்தோசமாக வாழ்க்கை
# எப்போதும் தொடர...



**PROPERTY MAX®**

**Realty Inc. Brokerage**

203-3321 McNicoll Ave.,
Toronto, ON., M1V 5B3
Bus : 416-291-3000 24 Hr Pager
Home : 905-415-0088
Fax : 416-298-9963
E-mail : parathan_n@hotmail.com
Web : www.propertymaxrealty.com



**Parathan Navaratnam**

**Dir : 416-450-9221**

Sales Representative
1st Office in Canada



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டு விழாக்குழு – 2010

1910 - 2010

திரு. சி. எஸ். சண்முகநாதன்
தலைவர்

1910 - 2010

## நூலாக்கக்குழு

திருமதி. சுகிர்தலட்சுமி சுப்பிரமணியம்
திருமதி. சத்தியபாமா மகேந்திரன்
திருமதி. சாந்திலா ரவிச்சந்திரன்
திருமதி. நாமகள் சிவகுமார்
திரு. நமசிவாயம் மகேந்திரன்
திரு. இரத்தினகோபாலபிள்ளை உதயகுமார்
திரு. நாகலிங்கம் பாலகுமார்

## கலை கலாச்சாரக்குழு

திரு. ஆனந்தராஜா பிறேமானந்தன்
திருமதி. ஜெயலோஜினி பரராஜசிங்கம்
திரு. சின்னத்துரை நிமலேந்திரன்
திருமதி. ஜெயராணி பூபாலசிங்கம்
திரு. தேவராசா ஸ்ரீறங்கன்
திரு. எஸ். ஜே. ராம்பிரசன்
திரு. இ. ராஜ்மோகன்

## நிதிக்குழு

திரு. சின்னத்துரை குகனேந்திரன்
திரு. தேவராசா ரபிமோகன்
திரு. யோகராஜா தவலிங்கம்
திரு. ஏகாம்பரம் ஜெயராஜா
திரு. மாணிக்கநடராசா ஜெகன்மோகன்
திரு. இராமசாமி லோகன்
திரு. வல்லிபுரம் ஜெகநாதன்

## தகவல் தொழில்நுட்பக்குழு

திரு. பொன்னம்பலம் இரவிச்சந்திரன்
திரு. சந்திரம் இராசநாயகம்
திரு. சங்கரசிவம் சம்பத்குமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகுடம்

## சிறப்புற நடைபெற எமது வாழ்த்துக்கள்

# EMBASSY GROCERIES

Speciallzing In Indo-Canadian & SriLankan Fine Food

QUALITY IS OUR BUSINESS

தரம்



- Lotto
- Phone Cards
- Gift Items
- Cigarettes
- TTC Tickets
- Key Cutting
- Newspapers
- Pooja Items

EMBASSY


எங்களிடம் பசுமைமிக்க தரமான காய்கறி வகைகள் மற்றும்
மளிகைப் பொருட்கள் யாவும் மொத்த விலையில்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

YOU HAVE TRIED THE REST, NOW TRY THE BEST.

TEL: 416-332-8451
5200 Finch Ave., East. Unit #101, #102, #103
Scarborough, Ontario
Middlefield & finch




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



March 27, 2010


# A PERSONAL MESSAGE FROM THE PREMIER

On behalf of the Government of Ontario, I am delighted to extend warm greetings to the members of the Jaffna/Kokuvil Hindu College Old Students' Association – Canada as they mark the 100th anniversary of the college's founding and celebrate the community's cultural heritage at Makudam 2010.

Ontario's strength comes from its diversity. We are a proud collection of different ancestries, histories, languages and beliefs. I would like to thank the members of the Hindu community for its many invaluable contributions to the social, cultural and economic life of our province.

Makudam 2010 provides an ideal opportunity for members of the Hindu community to celebrate their rich traditions. I congratulate everyone involved, including organizers with the Jaffna/Kokuvil Hindu College Old Students' Association, whose hard work and dedication have made this exciting event possible.

Please accept my best wishes for a memorable anniversary celebration and a highly successful show.



**Dalton McGuinty**
**Premier**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage

**BUYING OR SELLING**
**RESIDENTIAL LISTING**
**COMMERCIAL LISTING**
**AND ALL MORTGAGES**

We Bring Canada's Leading Leanders To You!
PMCI
PROPERTY MORTGAGE CANADA INC

# Buy Low! $ell High!!!


All Your Real Estate Needs.........
All Your Mortgage Needs.........

For continuing service in real estate and mortgage

***Call SUN @ 416-948-0693***

**Servicing**
**Since 1997**



Sun Sanmugathas
Broker
416-948-0693
www.thesunhomes.com

**RELY ON EXPERTS!!!**

# 416-948-0693

Please Mention PROPERTY/MAX When Enquiring About Properties!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Mayor

# DAVID MILLER

## A Message from the Mayor

**It is with pleasure that I extend greetings and a warm welcome to everyone attending The Centenary Year and Makudam 2010 hosted by Kokuvil Hindu College Old Students Association (Canada).**

**Makudam is a cultural show that recognizes the achievements of former students and their contributions to the technological, medical, academic and economic fields. I commend the former students of Kokuvil Hindu College for their tremendous generosity and for their efforts in funding scholarships, purchasing books and much needed office equipment for libraries.**

**Toronto is a caring and compassionate city and we are proud of the individuals and organizations that make a difference. The philanthropic spirit of the College is heart-warming and I thank you all for caring and giving.**

**On behalf of Toronto City Council, I congratulate and thank the organizers and all those involved in making *Makudam 2010* possible. Please accept my best wishes for a memorable celebration.**

**Yours truly,**

**Mayor David Miller**

TORONTO

City Hall • 100 Queen Street West • 2nd Floor • Toronto, Ontario M5H 2N2
Telephone: 416-397-CITY • Fax: 416-696-3687 • E-mail: mayor_miller@toronto.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரின் சமய, சமூக, கலாச்சாரப் பணிகள் மேன்மேலும் தொடரவும் "மகுடம்" சிறப்புற நடைபெறவும் எமது நல்லாசிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

# ஸ்ரீ ஐயப்ப சுவாமி இந்து குருபீடம்





**சிவஸ்ரீ பால ஜெகனிவாசக் குருக்கள்**

(ஜெகனி ஐயா -நல்லூர்), கனடா ஐயப்பன் ஆலய பிரதம குருக்கள், திருமண பதிவாளர், சோதிடர்

திருமணம், பதிவுத் திருமணம், பூப்புனித நீராட்டு விழா, புண்ணியாக வாசனம், வீடு குடிபுகுதல், கடைத் திறப்பு விழா, தோஷபரிகார சாந்திகள், கணபதி ஹோமம், லஷ்மி ஹோமம், நவக்கிரக ஹோமம், சிரார்த்தம், சத்திய நாராயண பூஜை, போன்றவற்றையும்,

கல்யாணப் பொருத்தம் பார்த்தல், ஜனன ஜாதகம் கணித்தல், சுபமுகூர்த்த நிர்ணயம் போன்ற ஜாதக தேவைகட்கும்,

முத்து மணவறை, வில்லு மணவறை, ஆலத்திப் பொருட்கள், மணமாலை ஒழுங்குகள் போன்ற அனைத்து தேவைகளையும் சிறந்த முறையில் நிறைவேற்றிக்கொள்ள எம்மை அழையுங்கள்.

**பால சிவர்தனி சுபாலயா**

**Tel.:416-335-3131, 416-277-8162**

**Pager:416-328-1144**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MARKHAM

**Logan Kanapathi**
*Councillor - Ward 7*

January 12th, 2010.

# *MESSAGE FROM MARKHAM COUNCILLOR WARD 7*

I would like to congratulate the Jaffna/Kokuvil Hindu College Old Students' Association on celebrating the tenth year of "Makudam". This year is especially important as your organization celebrates your school's Centenary Year and Makudam 2010.

On behalf of Members of Council and the Town of Markham, I am very pleased to extend our best wishes and greetings to you on this eventful year of celebration.

Our community has been immeasurably enriched by organizations such as the Jaffna/Kokuvil Hindu College Old Students' Association where communities can grow through reflection of our past achievements and unite through our diverse similarities.

As Councillor, I am proud of your efforts to continue to be a strong unitary force in the Tamil community. I wish you continued success in all your future endeavours as your organization continues to grow and contribute to the beautiful diversity of Canada.

Sincerely,

Logan Kanapathi
Councillor Ward 7



**The Corporation of the Town of Markham** • 101 Town Centre Boulevard, Markham, Ontario L3R 9W3
905-479-7748 • Fax: 905-479-7763 • email: lkanapathi@markham.ca • Website: www.markham.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Message from Trustee Neethan Shan



I am delighted and honoured to extend my heartfelt congratulations to members of Jaffna Kokuvil Hindu College Old Students' Association Canada on their joyful celebration of over sixteen years of great service to the communities both in Canada as well as in Tamil Eelam and the centenary celebration of the college.

This year, Makudam 2010 celebrates the centenary and marks the successful completion of many years of community building that members of your association have been actively involved in. I commend you for your great contribution towards building a suitable learning environment for the students in Kokuvil. Keeping your past school a place well-equipped with resources such as auditorium, computer lab and library is an honourable task and you have done in an incredibly remarkable manner. I am also pleased to know that many deserving students from Kokuvil are being supported in their post secondary education as well.

It is the work of not-for-profit organizations such as yours that keeps the society cohesive and our democracy functional.

To conclude, I once again congratulate everyone involved with the Kokuvil Hindu College Old Students' Association Canada. Please accept my best wishes for continued growth and success in the coming years.

Warmest Regards,

*Neethan Shan*
**Trustee – York Region Public School Board**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் பூரிக்க மங்களகரமான மனையைத் தேர்ந்தெடுங்கள்



வீடு வாங்கவும் விற்க்கவும்
குறைந்த வட்டி விகிதத்தில்
மோட்கேஜ் ஒழுங்கு செய்வதற்கும்
அழையுங்கள்

## Ravi. Paramu

**Broker**

HOMELIFE
HIGHER STANDARDS

BUS: (416) 298-3200    CELL: (416) 262-4176

**HOME LIFE TODAY REALTY INC.BROKERAGE**
**31 PROGRESS AVENUE SUIT #210 TORONTO ON M1P 4S6**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம விருந்தினரின் வாழ்த்துச் செய்தி



ஒரு பெரிய இசை மேதை தன் 55வது வயதில் இசை விழா ஒன்றில் கலந்துகொண்டார். அவருடைய தோடி ராகம் புகழ் பெற்றது. அரை மணி நேரமாக அன்று அவர் தோடி ராகத்தை ஆலாபனை செய்தார். சங்கீதம் கற்கவேண்டும் என்று அடங்கா ஆசை கொண்ட ஒரு பத்து வயதுப் பையனும் சபையில் இருந்தான். விழா முடிந்ததும் சிறுவன் இசை மேதையை அணுகி "ஐயா, சங்கீதம் படிக்கவேண்டும் என்று எனக்கு நிறைய விருப்பம் உள்ளது. தோடி ராகத்தை உங்களைப்போலவே நுணுக்கமாக பாட ஆசைப்படுகிறேன். அதற்கு நான் எவ்வளவு காலம் பயிற்சி செய்யவேண்டும்" என்றான். இசை மேதை சிறுவனைக்கனிவுடன் பார்த்துச்சொன்னார், "நான் ஐந்து வயதிலிருந்து இசை பயில ஆரம்பித்தேன். ஐந்து நிமிடம் முன்புதான் பயிற்சியை முடித்தேன்." சிறுவன் திகைத்துப்போய் நின்றான். இசை மேதை சொன்னது என்னவென்றால் கற்பதற்கு ஆரம்பம்தான் உண்டு, முடிவு இல்லை. கல்வி தொடர்ச்சியானது, ஒருவரும் நான் எல்லாம் படித்து முடித்துவிட்டேன் என்று சொல்வது கிடையாது. கடைசி நாள் வரை உலகப் பிரசித்தி பெற்ற விஞ்ஞானி அயின்ஸ்டீன் தன் அறிவை விருத்தி செய்துகொண்டேயிருந்தார் என்று சொல்வார்கள்.

ஒரு சில மாணவர்களுடன் 1910ம் ஆண்டு ஆரம்பித்த சின்னக் கட்டிடம் நான் படிக்கத் தொடங்கிய காலத்தில் கீழே மணலும் மேலே ஓலைக்கூரையுமாக மாறிவிட்டது. அதன் பின்னர் வந்த தலைமை ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், கொடையாளர்கள் என்ற பலருடைய ஆதரவில் பள்ளிக்கூடம் வளர்ந்தது. இன்று இரண்டு மாடிக்கட்டிடங்களுடன் பரந்து விரிந்த கொக்குவில் இந்துக் கல்லூரி வளாகத்தில் ஏறக்குறைய 1800 மாணவர்கள் படிக்கிறார்கள், எழுபதுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கல்வி கற்றுத்தருகிறார்கள்.

மனித வாழ்க்கையில் ஒருவர் நூறு வருடங்களைக் காண்பது அரிதானது. எங்கள் கல்லூரியின் நூறாவது ஆண்டு பிறந்த தினத்தைக் கொண்டாடும் இந்த வருடத்தில் நாங்கள் வாழக்கிடைத்தது பெரும் பேறு என்று நினைக்கிறேன். கல்வியை "கேடில் விழுச்செல்வம்" என்கிறார் வள்ளுவர். அழிக்க முடியாத கல்விச் செல்வம் நாளாந்தம் பெருகுவது. மனனம் செய்வதை ஊக்குவிப்பது அல்ல, எப்படிச் சுயமாகச் சிந்திப்பது என்பதை கற்றுத் தருவதுதான் ஒரு நல்ல கல்விக்கூடம். அதை இத்தனை வருடங்கள் நிறைவாகச் செய்து வந்தது எங்கள் கல்லூரி. நான் படிக்கும் காலத்தில் ஒரு நாள் கேத்திர கணிதப் பாடத்தில் ஒரு கணக்கை என்னால் செய்யமுடியவில்லை. அதை எடுத்துக்கொண்டு ஆசிரியரிடம் சென்றேன். "நான் உனக்கு இதை அரை நிமிடத்தில் செய்து காண்பிப்பேன். அப்படி நான் செய்தால் உன் சொந்த மூளையில் யோசித்து விடையை கண்டுபிடிக்கும் மகிழ்ச்சியை நீ இழந்துவிடுவாய். மறுபடியும் யோசி" என்றார் ஆசிரியர். விடையை நானே கண்டுபிடித்தபோது பெரு மகிழ்ச்சி கிட்டியது. அந்த ஆசிரியரின் அறிவுரையை நான் இன்றைக்கும் மறக்கவில்லை. இசை மேதை சொன்னதுபோல கற்பது எப்போதும் முடிவதில்லை. பள்ளிக்கூடத்தில் நாங்கள் சிறுவயதில் கற்றுக்கொள்ளும் சிந்தனைப் பயிற்சி ஒருவரின் வாழ்நாள் முழுக்கத் தொடருகிறது.

இன்று எங்கள் கல்லூரியின் நூறாவது ஆண்டு விழாவில் அங்கே படிப்பித்த அத்தனை ஆசிரியர்களையும் அன்புடன் நினைத்துக்கொள்கிறேன். அதன் வளர்ச்சிக்கு பாடுபட்ட அத்தனை பேருள்ளங்களையும் வணங்குகிறேன். எங்கள் கல்லூரி இன்னும் பல நூற்றாண்டுகள் காணவேண்டும் என வாழ்த்துகிறேன்.

அ. முத்துலிங்கம்

ரொறொன்ரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With best compliments from

# GREENLANDS CONVENIENCE STORE

## GREAT GROCERY GOODS




இலங்கை , இந்திய, கனேடிய
உணவுப் பொருட்கள் மற்றும் உடன்
மீன், இறைச்சி, மரக்கறி வகைகள்
அனைத்தும் ஒரே இடத்தில்....



*** FRESH TROPICAL FINE FOOD**
*** FISH & MEAT**
*** MILK**
*** VEGETABLE**
*** FRUITS**
*** SMOKE & GIFT**
*** LOTTO**
*** TTC TICKETS**






உங்கள் சகல தேவைகளையும் ஒரே இடத்தில் பூர்த்தி
செய்ய நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம்
"கிறீன்லன்ட்ஸ்" கொன்வீனியன்ஸ் ஸ்ரோர்

**Tel.: (416) 609-3333**

**5633 Finch Ave. East #7 & 8**

**Scarborough, Ontario**

**(Tapscott & Finch)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவர் செய்தி.........



பழைய மாணவர் சங்கங்களில் முதலாவதானது 1944ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கொழும்புக் கிளையாகும். ஐம்பது ஆண்டுகளின் பின் 1994இல் தொடங்கப்பட்ட கனடாக் கிளையின் பதினாறாவது ஆண்டு நிறைவின் போது 2010இல் கல்லூரியின் நூறாவது ஆண்டுப் பெருவிழாவும் சேர்ந்துள்ளது. பழைய மாணவர்களாகிய எங்கள் எல்லோருக்கும் மிகுந்த மகிழ்ச்சியையும், பெருமிதத்தையும் தருகின்றது. இந்நூற்றாண்டு விழாவைப் பற்றிக் கேட்டறியவும் நேரில் பார்த்துப் பங்கு கொள்ளவும் கிடைத்த இவ் அரியபேறு எமக்கெல்லாம் கிடைத்தற்கரியது.

கடந்த இரண்டு ஆண்டு காலப் பகுதியில் எமது கனடாக் கிளைச் சங்கம் அதன் யாப்பிற்கமைய இயற்றிய செயற் திட்டங்களை மீட்டுப் பார்க்கிறோம். கல்லூரியின் சகலதுறை முன்னேற்றத்துக்கும், இங்கு வாழ்கின்ற பழைய மாணவர்களின் பிள்ளைகளின் தமிழ், சமய, கணித, ஆங்கில அறிவு மேம்பாட்டுக்காகவும், உடல் நலத்துக்காகவும் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் என்பனவற்றை வருடா வருடம் நடாத்தி வருகிறோம். இதனால் விளையாட்டுப் போட்டிகளில் பெரியோர்கள் தம் முன்னைய திறமைகளை வெளிப்படுத்தவும், கல்வி மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் சிறார்கள் தமது திறமைகளை வெளிக்கொணரவும் பெரிதும் உதவுகின்றன. பெரியோர், சிறியோர் என்ற பேதமின்றி ஒன்றாகக் கூடி மகிழும் நாட்கள் இவை.

2009ஆம் ஆண்டில் வழமையான போட்டிகள் மற்றும் பரிசளிப்பு விழா நடைபெற்ற போதும் எம் தாயகத்தில் நிலவிய அசாதாரணமான சூழ்நிலை காரணமாக "மகுடம் 2009" கலைவிழா நடாத்த முடியாது போயுள்ளது. ஆனால் இவ்வாண்டு 2010இல் இவ் விழாவும், கல்லூரியின் நூற்றாண்டு விழாவும் விசேஷமாக நடை பெறுகின்றன. இவ் ஆண்டு கல்லூரியின் மகத்தான ஆண்டு. இச் சந்தர்ப்பத்தில் கல்லூரிக்கு ஒரு புதுப் பொலிவு தேவை. இதற்கான உதவியை கல்லூரி நிர்வாகம் எம்மை நாடிய போதெல்லாம் அவர்களின் வேண்டுகோள்களைப் பூர்த்தி செய்துள்ளோம். கட்டிடத் திருத்த வேலைகள், சுவர்களுக்கு வர்ணம் பூசுதல், கல்லூரி வளாகத்தை விஸ்தரித்தல், மாணவர்களின் கல்வி மற்றும் விளையாட்டுத்துறை என்பவற்றின் மேம்பாட்டுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தல் ஆகிய திட்டங்களுக்கு உதவுகிறோம். கல்வியிலும், விளையாட்டுத் துறையிலும் எம் கல்லூரி மாணவர்கள் ஏனைய கல்லூரிகளுடன் சரி நிகரான நிலையில் உள்ளனர் என்பது மனநிறைவைத் தருகின்றது.

எமது கல்லூரியின் வளர்ச்சியில் பழைய மாணவர்களின் பங்கு அளப்பரியது. இச் சந்தர்ப்பத்தில் கல்லூரிப் பழைய மாணவரும் பிரபல வர்த்தகருமாகிய மாணிக்கம் சுப்பிரமணியம் அவர்களின் மகத்தான சேவையைக் குறிப்பிட வேண்டும். அவரைக் கல்லூரிச் சமூகம் போற்ற வேண்டும். பல வகுப்பறைகளைக் கொண்ட மூன்று மாடிக் கட்டிடத்தை தன் பெற்றோர் நினைவாகக் கட்டித் தந்துள்ளார். விளையாட்டுத் துறையை வளர்க்க விளையாட்டரங்கொன்று அமைத்துத் தரவுள்ளார். இன்னும் பல பழைய மாணவர்கள் தனிப்பட்ட முறையில் கல்லூரி மாணவர்களின் பல்துறை அபிவிருத்திக்கும் உதவி உள்ளனர், இவ்வரிய முயற்சிகளுக்கு ஒத்தாசை வழங்கிய அனைவரையும் நன்றியுடன் நினைவு கூருகிறோம். கல்லூரியும் பல சாதனைகள் படைத்து முன்னேற்றப் பாதையில் வீறுநடை போடுகின்றது.

வளர்ந்து வரும் யுகத்தில் விஞ்ஞானரீதியில் ஏற்படும் மாற்றத்துக்கு அமைய கல்வி முறையில் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. அவ்வகையில் எம் கல்லூரி மாணவர்களையும் மாற்றங்களுக்கு அமைய கல்வி அறிவை வளர்க்க வேண்டும். இக் குறிக்கோளை அடைய கல்லூரி மேல்நிலை அடைந்து சிறந்த, சமூகம் போற்றும் நற்பிரஜைகளாக மாணவர்களை ஆக்கி, கல்விமான்களாக்கி நாடு போற்ற வாழ வழிகாட்டிட பழைய மாணவர்களாகிய நாம் முன்னின்று உழைப்போம். எங்களுடன் சேர்ந்து செயலாற்றி உதவிய அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

வணக்கம்.

**சி. சு. சண்முகநாதன்**
தலைவர்
கொ.இ.க.ப.மா.ச – கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராசி இல்லாத வீடு? ராட்சசி
ராசி உள்ள வீட்டுக்கு? ராஜ் சசி!

# BUYING OR SELLING OF YOUR PROPERTY

## RESIDENTIAL – COMMERCIAL – INVESTMENTS

30 years Experience in Construction Cost Consulting and Project Management with reputable consulting firm in Canada

## Why SELL with RAJ SASI?

- Sell your home at Actual Market Value at **LOWEST** Commission
- Your house **SOLD** within 90 days or **NO** commission
- Sell your Property at Actual Market Value!

## When you BUY Property through Raj Sasi

- Actual Market Evaluation of your Property-**FREE**
- Receive **BONUS** to cover your moving cost & lawyer fee
- Best selection of your **DREAM HOUSE** at your **PREFERED** location
- Someone you can **TRUST** and **RELY** on

**For your FREE Consultation**

# Call: Raj Sasi



**Raj Sasi Rajanayagam, PQS**
Sales Representative
**Direct: 416- 524 -1459**
Email: raj_sasinayagam@hotmail.com

PROPERTY MAX®
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டில் எம் கடன்...



குடிசையிலிருந்து வானுயுயர்ந்த கட்டிடம் வரை வளர்ந்து, நூறு ஆண்டுகளை நிறைவு செய்து, ஈழத்தமிழர் கல்வி வரலாற்றில் ஆழத் தடம் பதித்திருக்கின்றது கொக்குவில் இந்துக்கல்லூரி!

அந்தக் கல்லூரியில் கால் பதித்த அனைவரும் பெருமிதம் கொள்கின்ற ஆண்டு இது. எழுத்தறிவித்த கல்விக்கழகத் தாயை மடி தவழ்ந்த புதல்வர்கள் போற்றி வாழ்த்துகின்ற பொழுது இது!

நூறு ஆண்டுகளாய் எம் ஊரின் பெருமையை உலகறியச் செய்து கொண்டிருக்கும் ஒளிவிளக்கு எம் கல்லூரி! எத்துணைப் பெருமை எமக்கு. நாம் 'ஓடி, ஆடி, கல்விகற்ற' வளாகத்திற்கு நூறு வயது!

ஆய கலைகளையும் பயிற்றுவிக்கும் எமதருமை கல்லூரித்தாய் வானம் உள்ளவரை வாழ எழில் கொண்டு வாழ்த்துவோம்!

வாழ்த்துவதோடு முடிந்து விடுகின்றதா எமது கடமை? எம் வாழ்வை வளப்படுத்த தன்னை ஈந்த அன்னைக்கு வெறும் வாழ்த்துகளை மட்டும் வழங்கினால் போதுமா?

கல்லூரியில் கற்றறிந்த பல முன்னோர் மறைந்து விட.. கற்றறிந்த கல்விமான்கள் இவ்வுலகில் பரவியிருந்து சிறப்பிக்க.. கற்பதற்காக ஒரு தலைமுறை புதிதாகப் பிறக்கவிருக்கின்றது. இடையே ஆண்டுதோறும் மாணவர்கள் ஆய கலைகளைக்கற்ற வண்ணமுள்ளனர். இப் பயணம் முடிவற்றுத் தொடர்வது. ஏறி இறங்கியவுடன் மறந்து மறைந்து போவதற்கு இது தொடர் வண்டிப் பயணம் அல்ல. உயிரோடு ஒட்டித் தொடர்கின்ற பயணம்!

வாழ்த்துச் சொல்வதில் மட்டுமல்ல, கல்லூரியை வாழ வைக்கும் பணியிலும் எம் தொடர் பங்களிப்பு இருத்தல் வேண்டும். வளம் மிக்க கல்விச் சூழலும், அரசு வழங்கும் உதவிகளும் வலு இழந்திருக்கும் காலம் இது. மூன்று தசாப்தகாலமாக வகைதொகையற்ற இடர்களுடன் கல்லூரியின் பயணம் தொடர்ந்தது.. தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

கொக்குவில் இந்துவின் மைந்தர்களாகிய நாம், வளம் மிக்க நாடுகளில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். பல்வகை நிகழ்வுகளுக்காக ஆண்டுதோறும் கூடுகின்றோம். பிறந்த மண்ணுக்கான கடமைகளைச் செய்கின்றோம். அக்கடமைகளில் ஒன்றாக கல்லூரிக்கான பணிகளை நிரந்தரமாக்குவோம். இதுவரை இணையாதிருக்கும் கொக்குவில் இந்துவின் மைந்தர்களுக்கு அழைப்பு விடுப்போம். அனைவரையும் இணைத்துக்கொண்டு, அன்னையின் மடியில் தவழும் பிள்ளைகளின் கல்வி சிறப்புற உதவுவோம். மூன்றாவது மில்லேனியத்தில் வாழ்ந்துவரும் நாம் இப்பூமிப்பந்தின் அனைத்து வளங்களையும் எம் கல்லூரித்தாயின் மடியில் கொண்டுவர உழைப்போம்!

ஈழத்தமிழரின் உயர் மூலதனம் கல்வியே. அழிவற்ற இக் கல்விச் செல்வம்தான் எம்மை, எம் இனத்தை அன்றும், இன்றும், என்றும் உயர்த்தும். அச் செல்வம் தொடர்கின்ற தலைமுறைகளுக்கும் சிறப்பாகக் கிடைக்க எம்மால் இயன்றதைச் செய்வோம். இத்துணை பெருமைமிக்க கல்லூரியை நூற்றாண்டு காண வைத்த அனைத்து கொக்குவில் இந்துவின் மைந்தர்களையும் நன்றியுடன் வாழ்த்துவோம்.

நன்றி

பொன்னம்பலம் இரவிச்சந்திரன்
செயலாளர் - கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்மன வானில் சிறகு விரிக்கும் எண்ணப்பறவை ……



தமிழீழத் திருநாட்டின் தலையாக அமைந்த யாழ்ப்பாணக்குடா நாட்டில் நகரத்தின் பண்பியலும், கிராமத்தின் பண்பியலும் தன்னகத்தே கொண்டதாக அமைந்த ஊர்தான் கொக்குவில். கொக்குவிலிற்கு பொருமை சேர்த்து அதன் "குறியீடாக", அதன் "மணிமகுடமாக" இன்று திகழ்வது கொக்குவில் இந்துக் கல்லூரியே என்று கூறுவது சாலச்சிறந்ததாகும். 2010ம் ஆண்டு என்பது கொக்கூரில் வாழ்ந்த, வாழ்கின்ற மக்களுக்கு ஓர் உன்னத ஆண்டாகும். காரணம் கொக்குவில் இந்துக் கல்லூரி அன்னை அகவை நூறு கண்ட ஆண்டல்லவா!

கல்லூரித் தாயானவள் தான் கடந்து வந்த நூறு ஆண்டுகளிலும் தன் அரவணைப்பில் வளர்ந்த மாணவச் செல்வங்களுக்கு மொழி, கலை, கலாச்சாரங்களை ஊட்டி வளர்த்ததுடன் சிறந்த கல்வி அறிவையும், நற்பண்புகளையும் புகட்டி தமிழீழத் திருநாட்டிலும், வெளிநாடுகளிலும் ஒப்பற்ற பல அறிஞர்களையும், கலைஞர்களையும், வித்துவான்களையும், விளையாட்டு வீரர்களையும் உருவாக்கி பெருமை கொண்டு நிற்கிறாள். அன்னைமடி வளர்ந்த பிள்ளைகள் இன்று தாம் வாழும் நாடுகளிலெல்லாம் கல்லூரித் தாயின் பெயரால் பழைய மாணவர் சங்கங்களை நிறுவி அவளின் உயர்ச்சிக்காய், அவளின் வளர்ச்சிக்காய், அவளின் மேன்மைக்காய் அயராது உழைத்து வருகின்றனர்.

கடந்து சென்ற பதினைந்து ஆண்டுகளாக கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடாக் கிளையானது கல்லூரி அன்னையின் வளர்ச்சிக்காக, அவளது மடியில் தவழும் மாணவச் செல்வங்களின் உயர்ச்சிக்காக பழையமாணவர்களதும், முன்னாள் ஆசிரியர்களதும், கல்லூரி நலன் விரும்பிகளதும் பெரும் பங்களிப்புடன் அயராது உழைத்து வருவதுடன், அவர்களுக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் அன்னை காட்டிய வழிநின்று மொழி, கலை, கலாச்சார விழுமியங்களை பேணும் வகையிலும், அறிவு ஆற்றலை ஊட்டும் வகையிலும் வருடா வருடம் கலைநிகழ்ச்சிகளையும், கல்விசார் போட்டிகளையும், விளையாட்டுப் போட்டிகளையும் நடாத்தி வருகின்றது. இச் சங்கத்தில் நானும் ஒரு அங்கத்தவனாக இருந்து என்னை வளர்த்த, வழிகாட்டிய எனதன்னைக்கு என்னாலான தொண்டுகளைச் செய்து வருவதனைப் பெரும் பாக்கியமாகக் கருதுவதுடன், இச் சந்தர்ப்பத்தை எனக்களித்த பழைய மாணவர் சங்கத்திற்கு என் நன்றிகளை இவ்விடத்தே கூறுவதுடன், மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று இச் சங்கம் கொக்குவில் இந்துக் கல்லூரி அன்னைக்கு விழா எடுத்து நிற்கின்றது. இந் நூற்றாண்டு விழாவானது எல்லா வகையிலும் சிறப்புற்று விளங்க வேண்டுமென வாழ்த்துவதுடன், என்நிலை உயர்த்திய அன்னையவள் இன்னும் பல்லாயிரம் ஆண்டுகள் சிறப்புறத் திகழ்ந்து என் இனமும், சந்ததியும் உயர்வுற வழிகாட்டிட கல்லூரியின் காவற் தெய்வமாக விளங்கும் கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணியர் அருள் வேண்டி அன்னையவள் நெடிதுவாழ வாழிய! வாழிய!! வாழியவே!!! என வாழ்த்துகிறேன்.

**ஆனந்தராஜா பிரேமானந்**

கலை,கலாச்சாரப் பொறுப்பாளர்

கொ.இ.க.ப.மா.சங்கம் - கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் இந்துக் கல்லூரி
# J/KOKUVIL HINDU COLLEGE


Principal:
A.Ahiladas. M.Ed. SLTS.

Deputy Principals:
K.Mohanathas. Sp.Trd (Maths). N.Dip (Maths). SLTS.

T.P : 021 222 2646
060 221 4017
E.mail : kokuvilhindu@yahoo.com

கொக்குவில்.
KoKuvil,
(Sri Lanka)

Date : ......../......../ 200....



## நூற்றாண்டு விழாவுக்கான கல்லூரி அதிபரின் செய்தி

எமது கல்லூரி நூற்றாண்டு விழாவுக்கான செயற்பாடுகள் முழுவீச்சுடன் செயற்பட்டுக் கொண்டு இருக்கும் இவ்வேளை, கனடா பழைய மாணவர் சங்கம் தமது நாட்டில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாட இருக்கும் நற்செய்தியைக் கேட்டு அகமகிழ்கின்றேன், வாழ்த்துகின்றேன்.

எமது கல்லூரியின் பழைய மாணவர்கள் உலகின் பல பாகங்களிலும் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் அனைவரும் தமது அறிவுக் கண்ணைத் திறந்த தாய்க் கல்லூரியை அரவணைத்து வளர்த்து வருகின்றனர். பல நாடுகளிலும் பழைய மாணவர் சங்கம் என்ற அமைப்பை உருவாக்கி அதன்மூலம் பெரும் பங்களிப்பைச் செய்து வருகின்றனர். 1994ஆம் ஆண்டில் கனடாவில் உதயமாகிய பழைய மாணவர் சங்கம், அதிகளவு உறுப்பினர்களை உள்வாங்கி இருப்பதுடன், பல்துறை சார்ந்த பணிகளை வெற்றிகரமாகச் செய்து வருவது பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். இச்சங்கம் காத்திரமான பல பணிகளை மேற்கொள்வதற்கு ஆற்றல், அனுபவம், தேர்ச்சிமிக்க தலைமைத்துவமே காரணம் எனலாம்.

கனடாவாழ் கொக்குவில் இந்துவின் மைந்தர்கள் கல்லூரியின் சமய, கலாச்சார, விழுமிய, பாரம்பரிய பண்பாடுகளைப் பின்பற்றுவதிலும், பேணுவதிலும், பாதுகாப்பதிலும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். இளம் சந்ததியினர் இப்பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்காக “மின்சார இரவு” என்ற கலைநிகழ்ச்சியின் மூலம் இவர்கள் உள்வாங்கப்படுவது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

தங்கள் நாட்டில் சைவத்தையும், தமிழையும் வளர்க்கும் நோக்குடன் 1995ஆம் ஆண்டு முதல் பேச்சு, கட்டுரை, பண்ணிசை, வாசிப்பு, உறுப்பெழுத்து, சொல்வதெழுதுதல், கணித ஆங்கில அறிவை மேம்படுத்தல் போன்ற துறைகளில் போட்டிகளை நடாத்தி பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி வருவது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். பழைய மாணவர்களின் உறவை மேம்படுத்தவும், தொடர்பைப் பேணவும், முன்னைநாள் அதிபர்கள், ஆசிரியர்கள் போன்றவர்களை நன்றியுடன் பாராட்டவும் கொக்குவில் இந்துவின் “மகுடம்” என்ற நிகழ்வை நடாத்தி வருவதன் மூலம் பழைய மாணவர்கள், அவர்களின் பிள்ளைகளை இயல், இசை, நாடகம் போன்ற துறைகளினூடாக செயன்முறை ஆக்கத்திறன்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டு வருகின்றது. பழைய மாணவர்களின் பிள்ளைகள் மத்தியிலும் பெற்றோரின் பாடசாலை, கிராமம், பண்பாடு, விழுமியங்கள் பற்றிய எண்ணங்களையும், தாயக உறவுகள் பற்றிய செய்திகளையும் இத்தகைய விழாக்கள் வலுப்படுத்துவனவாக அமையும். இதன் மூலம் தாயகத்தின் கலை, கலாச்சார, பாரம்பரியங்களை வளர்த்தெடுப்பதில் விசையூட்டப்படுவது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

தமிழப் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் துடுப்பாட்டம், உதைபந்து, வலைப்பந்து, கரப்பந்து, அணிநடை போன்ற போட்டிகளில் பங்கு பற்றி தொடர் சம்பியன் கிண்ணத்தைப் பெற்று கல்லூரிக்குப் பெருமை தேடித் தந்துள்ளீர்கள். எமது கல்லூரி மாணவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சாகமடைய வைத்துள்ளதுடன், மாணவர்கள் இத்தறையில் வீச்சுடன் செயற்பட உந்து சத்தியாக அமைந்துள்ளது. எமது தமிழ்ப் பாரம்பரியத்துக்கே உரித்தான வந்தாரை வரவேற்கும் பண்பு, இன்பதுன்பங்களில் கலந்துகொள்ளல் போன்ற செயற்பாடுகளின் மூலம் பண்பாட்டு உணர்வுகளைப் பாதுகாத்து வருவது மெச்சத்தக்கதொன்றாகும்.

எமது கல்லூரியின் கல்வி அபிவிருத்திக்காக தங்கள் சங்கம் மூலமம், தனிப்பட்ட பழைய மாணவர்கள் மூலமும், காத்திரமான பங்களிப்பைச் செய்து வருகின்றீர்கள்.

- கல்லூரியில் கல்வி பயிலும் வறிய மாணவர்களை இனங்கண்டு கற்றலை ஊக்குவிப்பதற்காக **63** மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றது.

- தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து உயர்புள்ளி பெற்ற மாணவர்களை கல்லூரியில் இணைக்கும் நோக்குடன் 2008ஆம் ஆண்டு முதல் தலா **பத்து** மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு **33** மாணவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை இன்றுவரை வழங்கப்பட்டு வருகின்றது.

- மாணவர்களின் ஆங்கில அறிவுத்திறன், கணினி செயற்பாடுகளுக்கு தேவையான நிதியை வழங்கி வருவதுடன் ஆங்கில அறிவுத்திறன் வளர்ச்சியில் தங்கள் பிள்ளைகளுடன் இணைந்த வகையில் போட்டிகளை நடாத்தி பரிசளிப்பு விழாவில் பரிசில்களும் வழங்கப்பட்டு வருகின்றது.

- கல்லூரியின் பௌதீக வள விரிவாக்கத்திலும், புனரமைப்பிலும் தங்கள் சங்கம் பெரும் பங்காற்றி வருகின்றது. கல்லூரியின் மைதான புனரமைப்பு, மைதானத்துக்கான காணிக் கொள்வனவு, ஹன்டி பேரின்பநாயகம் கட்டிடப் புனரமைப்பு, C.K. கந்தசுவாமி படிப்பகத்திற்கான கணினித் தொகுதி தளபாடக் கொள்வனவு போன்றவற்றிற்கு பெருமளவு நிதி வழங்கி உள்ளீர்கள்.

- கொக்குவில் இந்துக் கல்லூரி நம்பிக்கை நிதியத்தின் நிரந்தர வைப்பில் இருந்து பரிசுநாள் நிகழ்வுகள், விளையாட்டுத்துறை செயற்பாடுகள், பல்வேறு புலமைப்பரிசில்கள் போன்றன வழங்கப்பட்டு வருகின்றன.

- கனடாவில் வதியும் பல பழைய மாணவர்கள் நேரடியாகவே கல்லூரியின் அபிவிருத்தியில் உதவி வருகின்றனர். இவர்கள் அனைவரையும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவுகூருகின்றேன்.

| **செயற்பாடுகள்** | **நிதி வழங்கியோர்** | **தொகை** |
|---|---|---|
| நம்பிக்கை நிதிய புலமைப்பரிசில் | கனடா பழைய மாணவர் சங்கம் | 1,837,419.00 |
| காணிக் கொள்வனவு, விளையாட்டு மைதானம் | கனடா பழைய மாணவர் சங்கம் (1997 – 2010) | 3,864,800.00 |
| புனரமைப்பு – மைதானம், ஹன்டி பேரின்பநாயகம் கட்டிடம் | கனடா பழைய மாணவர் சங்கம் (2007 – 2009) | 554,000.00 |
| C.K.கந்தசுவாமி படிப்பகம் - கணினி, தளபாடம் | கனடா பழைய மாணவர் சங்கம் (2007 – 2008) | 1,500,000.00 |
| நம்பிக்கை நிதியம் - விளையாட்டுத்துறை | கனடா பழைய மாணவர் சங்கம் (1994 – 1995) | 500,000.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நம்பிக்கை நிதியம் தரம் 6, தரம் 7 புலமைப்பரிசில் | கனடா பழைய மாணவர் சங்கம் (2007 – 2009) | 380,000.00 |
| நம்பிக்கை நிதியம் - புலமைப்பரிசில் | கனடா பழைய மாணவர் சங்கம் (2003 – 2004) | 715,000.00 |
| ஆங்கில வகுப்பு உபகரணக் கொள்வனவு | கனடா பழைய மாணவர் சங்கம் (2007 – 2008) | 90,000.00 |
| கணினிகள் பராமரிப்பு, நூற்றாண்டுவிழா நிர்வாகச் செலவு | கனடா பழைய மாணவர் சங்கம் (2004 – 2005) | 155,500.00 |
| விளையாட்டு ( கிரிக்கட், சதுரங்கம்), பரிசளிப்பு விழா (தரம் 7) | திரு.திருமதி.ரகு சுகன்யா தேவராஜா குடும்பம் (2007 – 2010) | 1,872,559.44 |
| பரிசளிப்பு விழா (தரம் 12) | கலாநிதி திரு.திருமதி சுதாகர் நகுலேஸ்வரி | 115,000.00 |
| விளையாட்டு மைதான விரிவாக்கம் | திரு.மா.ஜெயமனோகரன்(கனடா) (2010) | 1,000,000.00 |
| பரிசளிப்பு விழா | திரு.அ.முத்துலிங்கம் (கனடா) (2009) | 106,000.00 |
| பரிசளிப்பு விழா | திரு.யோகசுந்தரம் நவரட்ணம் & அனுசியாதேவி யோகசுந்தரம் (கனடா) (2009) | 200,000.00 |
| **கனடாவிலிருந்து அனுப்பப்பட்ட மொத்தப்பணம்** | | **ரூபா 12,890,278.44** |

இன்று அமைதியான சூழல் நிலவுகின்றது. தங்கள் தாயகத்தின் உறவுகளை காணபதற்காகப் பலர் புலம்பெயர் நாடுகளில் இருந்து வருகைதந்து கல்லூரியை தரிசித்துச் செல்கின்றனர். எமது கல்லூரியின் நூற்றாண்டு நிகழ்வுகள் யூலை மாதம் பிற்பகுதியில் நடைபெற உள்ளது. இந்நிகழ்வுகளில் கனடாவாழ் பழைய மாணவர்கள் கலந்து சிறப்பிக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றேன். உங்களால் நடாத்தப்படும் கல்லூரியின் நூற்றாண்டு விழா சிறப்புற நடைபெற இறையருள் வேண்டி என் செய்தியை நிறைவு செய்கின்றேன்.

நன்றி.

அ. அகிலதாஸ்
அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி.
கொக்குவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “நூற்றாண்டு விழா மலர்” மிளிர நல்வாழ்த்துக்கள்



கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்வி பயிலும் வாய்ப்பைப் பெற்றமையை பேறாகக் கொள்வதா! கல்வி கற்ற கல்லூரியிலேயே ஒரு தசாப்த காலம் அதிபராகப் பணியாற்றும் பேறு பெற்றமையைப் பெருமையாகக் கொள்வதா!! கல்வி கற்ற கல்லூரியின் நூற்றாண்டு விழாவிற்கு வாழ்த்துக் கூறுவதனை பெரும் பேறாகக் கொள்வதா!!! இவை யாவற்றையும் பெற்றவன் என்ற வகையில் எமது கல்லூரித் தாயின் பழைய மாணவர் சங்க கனடாக்கிளை கொண்டாடும் “நூற்றாண்டு விழா” மற்றும் அதனையொட்டி வெளியிடப்படும் “நூற்றாண்டு மலர்” ஆகியவற்றிற்கு வாழ்த்துக் கூறுவதில் மிக்கமகிழ்ச்சி அடைகிறேன்.

கொக்குவில் இந்துக் கல்லூரி தனது நூறாவது ஆண்டில் வானளாவ உயர்ந்து நிற்கின்றது என்றால் அது கொண்டிருக்கும் பௌதிகவளங்கள், உயர்ந்த நிலையில் பேணப்படும் கல்வித்தரம், சிறந்த பரீட்சைப் பெறுபேறுகள், விளையாட்டுத்துறையின் வளர்ச்சி, வலுவான இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் யாவும் காரணங்களாக அமைந்துள்ளன. இத்தகைய பெருமையைப் பெறுவதற்குக் காரணகர்த்தாக்களாக இருந்தவர்களுள் பழைய மாணவர்கள் பெரும்பங்கினை வகிக்கின்றனர். அந்த வகையில் கனடாவாழ் பழைய மாணவர்களின் பங்களிப்பும் முக்கிய பங்கு வகிப்பதனை யாவரும் அறிவர். இதற்கு மேலும் மெருகூட்டுவதாக இன்று கொண்டாடப்படும் நூற்றாண்டு விழாவும், மலர் வெளியீடும் அமைகின்றன.

இந்த நல்ல நிகழ்வினை நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்த கல்லூரிப் பழைய மாணவர்களைப் பாராட்டுவதுடன், விழா மலர் சிறப்பாக மிளிரவும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். எங்கள் கல்லூரித்தாய் மேலும் பல நூற்றாண்டுகளைத் தாண்டி பெயரோடும் புகழோடும் திகழவேண்டுமெனவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பொ. கமலநாதன்
இளைப்பாறிய அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Kokuvil Hindu College is hundred years old & Kokuvil Hindu College Old Students' Association – Canada is sixteen years old



*Kokuvil Hindu College Old Students' Association Canada has been conducting cultural shows "Makudam" annually since the year 2000. The cultural events are different types of dances by the children of our old students, debates, and dramas by the members of the association. The venue for the first "Makudum 2000" was the Atlanta Party Hall. In subsequent years the number of cultural items increased, the participants were larger in number and the halls had to be large. The functions turned out to be on an elaborate scale. An added lustre to the show was the presence of an old student of ours as the chief guest. We follow the school tradition in this respect. Our past students are qualified and well-paced in life and wish to be associated with this school. They happily and willingly honour our invitation to be the chief guests at the "Makudam". Their memories are kindled and they relive their past days. The present day students are fortunate enough to get help from these benevolent old students who are of assistance to them in their education and all other spheres of activities.*

*The cultural events provide an opportunity to bring out and exhibit the talents of our old students and their children. We are happy and proud to see them perform on the stage, show their organising capacity and take part in all the activities of the association. They come to know about their parents' homeland and their school. The magazine published on that day has an account of all the activities for that year, the students' performance in studies, sports and other extra-curricular activities, articles on various topics by the past students and their children, the development in the school and other useful information about the school.*

*The year 2010 is a special one since "Makudam 2010" coincides with the centenary celebration of the school. Through the hundred years, the school has grown in various spheres under the management of capable principals and devoted teachers. The dream of the founder Mr. E. Chelliah has come true. The school is fortunate to have efficient principals. After the first headmaster Mr. E. Chelliah, Mr. S. Taiagarajah took over but after a short tenure of office left to join the inspectorate. Mr. M. Karthigesu's period is eventful since the school celebrated the silver jubilee in 1937. The school was upgraded and named Kokuvil Hindu College and he was the first Principal. Other than the first school hall – The Chelliah Hall _ Mr. Karthigesu got a new block put up to serve as the General Science room and class rooms.*

*Another principal who left a mark and lasting names at K.H.C is Mr. V. Nagalingam – popularly called Shakespeare Nagalingam. The college playground - Nagalingam grounds – is named after him since he helped to acquire the land. The "Linga Lights" carnival in 1950 took place to honour him. Mr. S. Handy Perinbanayagam, already a well-known person in Jaffna brought honour to K.H.C along with him when he took over the school. The school grew in many ways. On his retirement, Mr. C. K. Kanthaswami – the first science graduate in the school assumed duties as Principal and maintained the status of the school and today K.H.C stands proud as one with the leading schools in Jaffna.*

*The students, past and present owe much to their Alma Mater. Let us remember the past, give our best to the present and plan ahead for the future. The centenary comes once in one's lifetime. So let us make the celebration a success and have lasting pleasant memories. May God bless the school and the O.S.A*

**Mrs. S. Supramaniam**
**Former President, K.H.C.O.S.A – Canada.**
**(1994 April to 1998 April)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் இந்து நமதே .........



கொக்குவில் இந்துக் கல்லூரி எமக்கு அறிவூட்டி சமூகத்தில் பலர் மதிக்கும் வகையில் வளர்த்தெடுத்த எம் கல்வித்தாய், 100வது ஆண்டு பூர்த்தியை கொண்டாடும் வேளையில் எமக்கும் கல்லூரிக்கும் உள்ள நீண்டகாலத் தொடர்பை எண்ணிப் பார்க்கிறோம். பள்ளிப் பருவம் ஒருவர் வாழ்வில் ஒரு முக்கியமான ஆனந்தம் நிறைந்த பருவம். துள்ளித்திரிந்து நல்லாசிரியர்களிடம் கல்வி கற்று அவர்களின் அறிவுரைகளைக் கேட்டு நம் அறிவை வளர்த்து நல்லவர்களாகி விளையாட்டுத் துறையிலும் எம்மை ஈடுபடுத்தி உடலாரோக்கியத்தைப் பேணி கல்லூரியை விட்டு வெளியேறும்போது நல்லறிவு பெற்ற நற்பிரஜைகளாக விளங்குகின்றோம். கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் என்று கூறிக்கொள்வதில் பெருமை அடைகின்றோம். எம் கல்லூரி இலட்சினையில் "கற்றதொழுகு" என்னும் வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. வள்ளுவர் பெருமானின் வாய்மொழியும் அதுவே. அதன்படி நாம் ஒழுகி எம் கல்லூரிக்குப் பெருமை சேர்க்க வேண்டும்.

1910ம் ஆண்டு திரு E. செல்லையாவினால் ஸ்தாபிக்கப்பட்ட கொக்குவில் இந்து ஆங்கிலப் பாடசாலை சிறு கொட்டிலில் ஆரம்பமாகி, படிப்படியாக வளர்ச்சி பெற்று தற்போழுது மாடிக் கட்டிடங்களைக் கொண்ட ஆயிரக்கணக்கில் மாணவர்கள் கல்விபயிலும் கொக்குவில் இந்துக் கல்லூரி எனப் பெயர் பெற்று யாழ்ப்பாணத்திலுள்ள முதல்த்தரக் கல்லூரிகளில் ஒன்றாக திகழ்கின்றது. இந்நிலைக்கு எம் கல்லூரியை உயர்த்தியவர்கள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், ஆதரவாளர்கள் ஆகியோரே. ஒவ்வொரு அதிபரும் கல்லூரியைப் பொறுப்பேற்று சகல துறைகளிலும் உயர்வடையச் செய்துள்ளனர். 100ஆண்டுகள் பல தடைகளைத் தாண்டி உயர்நிலை அடைந்துள்ளது.

எமது கிராமத்திலும், அயற் கிராமங்களிலும் வாழும் சிறார்கள் நீண்ட தூரம் நடந்து சென்று கல்வி பயிலவேண்டிய சிரத்தையை மனதிற் கொண்டும், மதமாற்றம் செய்யப்படும் நிலையிலிருந்து சிறுவர்களைத் தடுக்கவும் கொக்குவிலில் உள்ள மூன்றாம் கட்டை என்னும் இடத்தில் காங்கேசன்துறை வீதிக்கு அருகே அமைந்த திரு.அப்பாக்குட்டி அவர்களின் வீட்டு முன்திண்ணையில் திரு.என்.செல்லப்பா மாஸ்டர், தாவடியைச் சேர்ந்த திரு.சோமஸ்கந்தர் ஆகியோரால் சில மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இத் தனியார் பாடசாலை மாணவர் அதிகரிப்பின் காரணத்தால் புதுக்கோயிலின் வடக்கு வீதிக்கு இடம் பெயர்ந்து சென்று இயங்கி வந்தவேளை அதனை பெரியார் திரு. E. செல்லையா அவர்கள் தனதும் தனது உறவுகளதும் நிலங்களை தானமாக வழங்கி இக் கல்விச் சாலையை அரசால் அங்கீகரிக்கப்பட்ட கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையாக அதன் ஸ்தாபகராக, தலைமை ஆசிரியராக இருந்து இன்று எம் கல்லூரி இந்த உயர்விற்குவர அடித்தளம் இட்டு அரிய சேவையைச் செய்துள்ளார். அவரின் உயர்ந்த குறிக்கோளின்படி பல கிராமப்புற மாணவர்கள் சைவமும், தமிழும் தழைத்தோங்க உரியமுறையில் கல்வி புகட்டப்படுகின்றனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கிளைகள் பல நாடுகளிலும் உள்ளன. கனடாக்கிளை தன் செயற்பாடுகளை விஸ்தரித்துக் கொண்டு வருகின்றது. வழமையான போட்டிகளுடனும், வெளிக்கள விருந்துகளுடனும் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தும், "மகுடம்" என்ற கலைவிழா நடப்பாண்டுக் கடைசிப் பகுதியில் 2000ம் ஆண்டிலிருந்தும் நடைபெற்று வருகின்றன. கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவுவதே எம் நோக்கம். எம் கல்லூரி நூற்றாண்டுவிழா கொண்டாடும் இவ்வேளையில் நாமும் அதில் பங்கு கொள்ள வாய்பு உண்டானதையிட்டு பெருமை கொள்கிறோம். கற்கை நெறிகள் விரிவடைந்து வரும் காலகட்டத்தில் மாணவர்கள் உள்ளனர். அதற்கேற்ப அவர்களை வழிப்படுத்த வேண்டிய தேவையும் உள்ளது. அவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு பழைய மாணவர் சங்கங்களின் உதவி தேவையாக உள்ளது. அதை வழங்கி கல்லூரி உயர்நிலை அடையச் செய்வோம். மேலும் பல துறைகளிலும் வளர்ச்சி அடைந்து கிராமத்தின் மணிமகுடமாகத்திகழ இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

வெற்றிவேல் இராஜகுலேந்திரன்
முன்னைநாள் தலைவர்
கொ.இ.க.ப.மா.ச - கனடா
(1999-2001).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இதய ஏட்டில் பதித்துவைத்த வாசகம் ஆசிச் செய்தியாய்...



ஈழத் திருநாட்டின் தலையாம் யாழ்ப்பாணத்தின் புகழை உலகெங்கும் பரப்பும் விடயங்களில் முதன்மையானது கல்வியே. சிறந்த கல்விமான்களை உருவாக்கும் பணியில் தன்னை இணைத்துக் கொண்ட கொக்குவில் இந்துக் கல்லூரி நூறாம் ஆண்டில் அடியெடுத்து வைத்திருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.

சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகப் போற்றிய ஆறுமுக நாவலரின் பாதையில் தமிழ் சமூகத்தினரிடையே அவர்களது கலாச்சார விழுமியங்களுக்குப் பங்கமேற்படாத வகையில் சமய அறிவையும் கல்வியறிவையும் புகட்டும் உன்னதமான பணியை பல்வேறு இக்கட்டான காலப்பகுதிகளிலும் தொடர்ந்து செய்து வரும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவன் நான் என்று கூறிக் கொள்வதில் பெருமையடைகின்றேன்.

தாயகத்தின் கவலை தரும் போர்ச் சூழல் காரணமாக வேர் விட்டு வளர்ந்த யாழ்ப்பாணத்தை விட்டு அடியோடு பெயர்க்கப்பட்டு புகலிட நாடுகளில் வாழ வேண்டிய சூழல் எம்மில் பலருக்கும் ஏற்பட்ட போதும் எமது தமிழ் மொழியையும் தமிழ்ப் பண்பாட்டையும் விட்டு வழுவாது இருப்பதற்கு கொக்குவில் இந்துக் கல்லூரி எம் அடி மனதில் பதித்து விட்ட நற்பண்புகளும் பழக்க வழக்கங்களுமே காரணம் என்பதில் மாறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியாது.

புலம் பெயர்ந்த நாடுகள் பலவற்றிலும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்கள் பரந்து வாழ்வது மட்டுமன்றி பழைய மாணவர் சங்கங்களை அமைத்து கல்லூரிக்குத் தமது பங்களிப்பைத் தொடர்ந்து வழங்கி வருவது பாராட்டுக்குரியது.

அந்த வகையில் கனடாவில் இயங்கும் பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து பணியாற்றக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பாக்கியமாகக் கருதுகிறேன். 2001 இற்கும் 2003 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இச் சங்கத்தின் தலைவராக இருந்து என்னால் முடிந்தளவு பணிகளை கொக்குவில் இந்துக் கல்லூரிக்குச் செய்ய முடிந்ததையிட்டு மனம் மகிழ்கிறேன்.

தொடர்ந்தும் கொக்குவில் இந்துக் கல்லூரி தமிழ் சமூகத்திடையே காத்திரமான பங்களிப்புகளை வழங்கும் ஒரு கல்விக் கூடமாக தன் பணியைப் பன்னெடுங்காலம் ஆற்ற எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டுகிறேன்.

திரு. சி.குகதாசன்
முன்னைநாள் தலைவர்
(ஏப்பிரல் 2001- ஏப்பிரல் 2003)
பழைய மாணவர் சங்கம் (கனடா).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழிய வாழிய வாழியவே

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடாக்கிளை வருடா வருடம் பல நிகழ்ச்சிகளை நடாத்திக் கொண்டு வருகின்றது. ஆனால் இந்த வருடம் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பத்தாவது தசாப்த அகவையை முன்னிட்டு இங்கு நடைபெற இருக்கும் நூற்றாண்டு விழாவிற்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன்.

நாம் எமது நாட்டை விட்டு தொலை தூரம் சென்றாலும் எமக்கெல்லாம் கல்வியை ஊட்டி வளர்த்தெடுத்த எமது கல்லூரி நூறு ஆண்டுகளை பூர்த்தி செய்கின்றது எனும்போது என் உள்ளம் சிலிர்க்கின்றது. எனது சிந்தனையில் இருந்து வருவது என்னவென்றால் நாம் அனைவரும் இளமைப் பருவத்தின் பெரும் பகுதியை தாயகத்தில் கழித்து, கல்லூரியின் பெறுபேறுகள், வளர்ச்சிகள், நன்மைகள் போன்றவற்றை கண்டு களித்துள்ளோம். ஆனால் கடந்த இரண்டு தசாப்தங்களாக வெளிநாடுகளில் வாழும் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகளின் உதவியுடன் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து உலகளாவிய ரீதியில் பல நாடுகளில் பழைய மாணவர் சங்கங்களை உருவாக்கி கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவி வருகின்றோம். அது மட்டுமன்றி கனடாவில் இளையோர் அமைப்பை சில வருடங்களுக்கு முன்பாக உருவாக்கி உள்ளோம். அவர்களும் தங்களது பணிகளை எதிர்காலத்தில் எமது கல்லூரிக்கு வழங்குவார்கள் என நம்புகின்றேன். நாம் அனைவரும் ஒன்றுபட்டு இவ் அமைப்பை நெறிப்படுத்தி வளர்க்க வேண்டும்.

எமது பழைய மாணவர் சங்க கனடா கிளையானது தாயக மண்ணின் பாரம்பரியத்தை பேணிக் கொள்வதற்காகவும் கல்லூரித் தாயின் நினைவாகவும் கல்வி, கலை கலாச்சார நிகழ்வுகள், ஒன்றுகூடல் போன்றவற்றை வருடா வருடம் நடாத்தி வருகின்றது. குறிப்பாக மகுடம் என்ற விழாவில் பழைய மாணவர்களையும் அவர்களது வாரிசுகளையும் மேடையேற்றி, பல தரமான கலை கலாச்சார நிகழ்ச்சிகளையும் ஒருங்கிணைத்து வெற்றிகரமாக நடாத்துவதுடன் எமது கல்லூரியை மறவாது வெவ்வேறு தேவைகளையும் பூர்த்தி செய்து வருவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

1994ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது சங்கம் இன்று எமது கல்லூரி நூற்றாண்டு விழாவினை எழிலுற கனடாவில் நடாத்துவது எம் அனைவரின் ஒற்றுமையையும், எமது கல்லூரியில் கொண்டுள்ள அளவுகடந்த பற்றையும் வெளிக்காட்டுவது மட்டுமல்லாது எமது கல்லூரிக்கு நாம் அனைவரும் செய்யும் நன்றிக் கடனும் ஆகும்.

நூறு ஆண்டுகளை பூர்த்தி செய்யும் எமது கொக்குவில் இந்துக் கல்லூரி அனைத்து துறைகளிலும் முதன்மை பெற்று விளங்கிக் கொண்டிருப்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். எமது கல்லூரி எம் மாணவர்களுக்கும், சமுதாயத்திற்கும் பல வழிகளிலும் தனது சேவைகளை வழங்கி வருகின்றது. இத்தகைய எம் கல்லூரியினது நூற்றாண்டு விழாவினை சிறப்புற நடாத்த இருக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க கனடா கிளையினருக்கும், தாயகத்தில் வெகு விமரிசையாக இவ்விழாவை அரங்கேற்ற ஒழுங்குகள் செய்யும் நிர்வாக குழுவினருக்கும், கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், அலுவலர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், நலன் விரும்பிகள் அனைவருக்கும் இவ்விழா சிறப்புற நடைபெற மனமார வாழ்த்துகின்றேன். இந்த நூற்றாண்டு விழா இன்னும் பல ஆயிரம் நூற்றாண்டுகளாக மலர வேண்டும் என்று இறைவனை வேண்டி மேலும் எமது கொக்குவில் இந்துக் கல்லூரி அன்னையை வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றேன்.

நன்றி.

**திரு. யோ. தவலிங்கம்**
முன்னைநாள் தலைவர்
(2003/2004)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க வாழ்க பல்லாண்டு காலம் வாழ்க.



1994ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது சங்கம் படிப்படியாக வளர்ச்சி கண்டு வந்தது. எமது சங்கம் முதல் முதலில் இளம் பராயத்தினருக்கான பேச்சு, பண்ணிசைப் போட்டிகளையும் அனைவருக்குமான ஒன்றுகூடல் நிகழ்வுகளையும் இன்றுவரை மிகத் திறம்பட நடாத்தி வருகின்றது. இப்படிமுறை வளர்ச்சிக்கு முடி சூடுவது போல் அமைந்தது 2000ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மகுடம் என்ற கலை நிகழ்ச்சிகளுடன் கூடிய மலர் வெளியீட்டு விழா. 2001ம் ஆண்டு இந் நிகழ்ச்சியில் சிறிது தொய்வு ஏற்பட்ட போதும் 2002ம் ஆண்டிலிருந்து சிறந்த மேடை அமைப்புக்களை கொண்ட ஒரு சிறந்த கலை நிகழ்ச்சியாகவும் மலர் வெளியீடாகவும் நடைபெற்று வருகின்றமை பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

2004ம் ஆண்டு நடைபெற்ற எமது முன்னாள் அதிபர் திரு. C.K கந்தசுவாமி அவர்களின் ஆத்ம சாந்தி பிரார்த்தனை வைபவத்தில் 500க்கும் மேற்பட்ட எமது கல்லூரி பழைய மாணவர்கள் சமூகமளித்திருந்தனர். குறிப்பாக 1940-1948 இடைப்பட்ட கால பழைய மாணவர்களின் வருகை கணிசமான அளவு இருந்தது. இந்நிகழ்வு எமது சங்கத்திற்கு புத்துயிர் பெற வழிவகுத்தது.

தொடர்ந்து நடைபெற்ற பேச்சு பண்ணிசைப் போட்டிகளுடன் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களையும் இணைத்து நடாத்தியதனால் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றியிருந்தது ஓர் சிறப்பு அம்சமாகும்.

2005ம் ஆண்டு நடைபெற்ற மகுடம் நிகழ்வில் அனைத்து பழைய மாணவர்களினது சந்ததியினருக்கும் சந்தர்ப்பம் வழங்கி 240ற்கும் மேற்பட்ட இளம் கலைஞர்களை மேடை ஏற்றி, குறித்த நேரத்தில் மண்டபம் நிறைந்த பார்வையாளர்களுடன் இந் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு மிகச்சிறப்பாக நிறைவேறியது. இந் நிகழ்வு மிகச் சிறப்பாக நடைபெற்றதற்கு பின்னணியில் முன்னைநாள் தலைவர்கள், எமது சங்க அங்கத்தவர்களின் பூரண மனமொத்த ஒத்துழைப்பும் தான் காரணமாகும்.

எமது சங்கத்தின் நீண்டகால எதிர்பார்ப்பான இளையோர் அமைப்பு உருவாக்கப்பட்டு "மின்சாரஇரவு" என்ற பெயருடன் கலைநிகழ்ச்சிகளுடன் கூடிய இராப்போசன விருந்தும், மலர் வெளியீடும் சங்கத்தினதும், பெற்றோர்களினதும் மேற்பார்வையில் இனிதே அரங்கேற்றப்பட்டது. இவ் அமைப்பானது நான்கு வருடங்கள் வளர்ச்சி கண்டு வந்தபோதும் 2008/2009 ஆண்டு கால பகுதியில் தாயகத்தில் இடம்பெற்ற அனர்த்தத்தினால் இயங்காமல் போனதுடன் தற்சமயம் செயல் இழந்து இருப்பது மிகவும் மனவருத்தத்திற்குரிய விடயமாகும். நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து இவ்வமைப்பிற்கு புத்துயிர் வழங்க வேண்டும். இப்பாரிய கடமையை நாம் செய்யத் தவறின் எமது இளைய சமுதாயத்தை யார் வழி நடாத்துவார்கள்?

2010ம் ஆண்டு எமது கல்லூரி நூற்றாண்டு விழா காணும் இவ் வேளையில் நாம் அனைவரும் ஒன்று திரண்டு கட்டிட அமைப்பு வசதிகள், கல்வித் தரம், ஏனைய செயற்திட்டங்கள் என அனைத்திலும் எமது கல்லூரி முதல் நிலையடைய வேண்டுமென திடசங்கற்பம் பூணுவோமாக.


இறுதியாக எமது சங்கத்தின் தொடர்ந்து வரும் நிகழ்ச்சிகள் அனைத்தும் வெற்றிகரமாக நடைபெற அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென கோரி இந் நிகழ்ச்சிகள் வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

திரு. சி. குகனேந்திரன்.
முன்னைநாள் தலைவர்
(2004 ஏப்பிரல் - 2006 ஏப்பிரல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் மனதின் எதிரொலி....



எமது பழைய மாணவர் சங்கம் 1994ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை திறம்பட இயங்கி வருகின்றது. அந்த வளர்ச்சிப் பாதையில் முதல் தலைவராக பதவி வகித்த திருமதி சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் 1999ம் ஆண்டு வரை திறம்பட நிர்வகித்து வந்தார். இவரது காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட வெளிக்கள விருந்தும், அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கான கல்விசார் போட்டிகளும் இன்றுவரை நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து தலைவர் பொறுப்பேற்ற திரு. வெ. இராஜகுலேந்திரன் அவர்கள் ஒரு படி மேலாக மகுடம் என்ற பெயரில் கலை நிகழ்வுடன் கூடிய இராப்போசன விருந்தையும் ஆரம்பித்து வைத்தார். அவரை தொடர்ந்து தலைவராக பதவியேற்ற திரு. சி. குகதாஸன் அவர்கள் மகுடம் நிகழ்வை ஒரு கலை கலாச்சார நிகழ்வாக புதுப் பொலிவுடன் வெற்றிகரமாக மேடை நிகழ்வாக அரங்கேற்றினார். அந்த மேடை நிகழ்ச்சிகளை தொடர்ந்து வெற்றிகரமாக நடாத்தினார் அடுத்து வந்த தலைவர் திரு. யோ. தவலிங்கம் அவர்கள். பின்னர் எமது சங்கம் சிறிது சோர்வடைய தொடங்கிய காலத்தில் தலைவர் பொறுப்பை பொறுப்பேற்ற திரு. சி. குகனேந்திரன் அவர்கள் தனது அயரா உழைப்பினால் மிகத்திறம்பட நிர்வகித்து வந்தார்.

தற்போதைய தலைவர் திரு. சீ. எஸ் சண்முகநாதன் அவர்களுடைய முதல் வருடத்தில் எமது தாயக மண்ணில் நடைபெற்ற மிக மோசமான நிலமைகளினால் மகுடம் 2009 நிகழ்வை நடாத்த முடியாத நிலமைக்கு தள்ளப்பட்டோம். எனவே இவ்வருடம் அவருடைய தலைமையில் நூற்றாண்டு விழாவும், மகுடம் 2010ம் மிகச் சிறப்பாக நடைபெற எம்மாலான முழு ஒத்துழைப்பையும், ஆதரவையும் நாம் அனைவரும் வழங்க வேண்டும் என தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

எமது சங்கம் 1994ம் ஆண்டு முதல் இன்றுவரை எமது பாடசாலையின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றி உள்ளது. இவ் விபரங்கள் எமது மகுடம் சஞ்சிகையில் வருடா வருடம் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன.

எமது கல்லூரியின் தற்போதைய அதிபராக பதவி வகிக்கும் திரு. அ. அகிலதாஸ் அவர்கள் துரித கதியில் கல்லூரியின் அபிவிருத்தியில் ஈடுபட்டு வருவதை 2009 பரிசளிப்பு விழா மலர், "நித்திலம்" என்ற காலாண்டு இதழ் மற்றும் அதிபர் அனுப்பி வைத்துள்ள இறுவெட்டுக்களிலிருந்தும் காணக்கூடியதாக இருக்கின்றது. எமது கல்லூரி இவ்வருடம் நூற்றாண்டு விழாவை மிக சிறப்பாக கொண்டாட திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றது. இவ்விழா மிக சிறப்பாக நடைபெற வெளிநாடுகளில் உள்ள பழைய மாணவர் சங்கங்கள், முன்னைநாள் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும், முடிந்தால் நூற்றாண்டு விழாவிற்கு சமூகமளித்து சிறப்பிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

எமது சங்கத்தின் வளர்ச்சிக்கு உதவி புரிந்த குறிப்பாக விளம்பரங்கள், நன்கொடைகள் தந்து உதவிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இறுதியாக எமது கல்லூரி நூற்றாண்டு விழா காணும் இவ்வருடத்தில் எமது சங்கத்தின் நிகழ்வுகளான நூற்றாண்டு விழா, மகுடம் 2010, பண்ணிசைப்போட்டி, வெளிக்கள விருந்து அனைத்தும் சிறப்புற நடைபெற வாழ்த்தி எங்கள் அனைவரது ஒத்துழைப்பையும் வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி.

**மாணிக்கநடராசா ஜெகன்மோகன்.**

முன்னாள் தலைவர்

(2006 ஏப்பிரல் - 2008 ஏப்பிரல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைக்க.........நினைக்க.....இன்பம் பெருகுதே!....

## இனிமை பொங்குதே!!



## காலப்பகுதி 1960 - 1995

இளமையை வாழ்வின் வசந்த காலம் என்பார்கள். இனிய கனவுகளும் இலட்சியங்களும் இளமையின் முக்கிய அம்சங்களாகும். கல்லூரி வாழ்க்கையை முடித்துக்கொண்டு வாழ்க்கைக்குள் காலடி எடுத்துக் வைத்தகாலம். ஆமாம்! 'எனது வாழ்க்கையே இதுதான்' என்றே தெரியாமல் பல்வேறு வித உணர்ச்சிகளுடன் அதிபரின் அறைக்குள் நுழைந்தேன். சிரித்த முகத்துடன் திரு. சி. கே. கந்தசாமி அமர்ந்திருந்தார். அந்த அற்புதமான காட்சி இன்றும் மனதில் பசுமையாக இருக்கின்றது. அவர் கூறிய அறிவுரை இன்றும் நினைவில் இருக்கின்றது. சுருக்கமாகவும் தெளிவாகவும் அவர் விளக்கமளித்தார். உமக்கு இங்கு கற்பிப்பது விருப்பமாக இருந்தால் வரவு இடாப்பில் கையொப்பமிட்டு பதவியேற்பு கடிதத்தையும் கொடுத்துவிட்டு கடமையை ஆரம்பிக்கலாம் என்றார். அந்த நாள் என் வாழ்வின் பொன்னாளாகும். 15-11-1960 என்ற அந்த நாள் எனது வாழ்வில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்தது. எனது வாழ்க்கையே கொக்குவில் இந்துதான் என்பதை நான் அன்று தெரிந்திருக்கவில்லை.

அன்று முதல் நான் 1999இல் இளைப்பாறும் வரை நடந்ததில் எதைச் சொல்வது? ஒவ்வொன்றுமே எனக்கு முக்கியமானவை தான். அவற்றுள் சிலவற்றை எழுத முனைகின்றேன்.

நான் கற்பித்த முதல் வகுப்பு ஆறாம் வகுப்பு. ஒரு புதிய பிரிவை 'F' உருவாக்கி என்னையே வகுப்பாசிரியராக்கி பொறுப்பையும் தந்தார்கள். சில மாதங்கள் வகுப்பறை இருந்த இடம்...... விளையாட்டு மைதானத்தின் மூலையில் கல்லூரியின் ஒரு காலத்தின் மாணவர் வசிப்பிடத்தின் (hostel) உணவருந்தும் இடமே அந்த வகுப்பறையாகும். கொக்குவில் இந்துக்கல்லூரியில் சிலகாலம் இத்தகைய மாணவர் வசிப்பிடம் இருந்ததே இன்று பலருக்குத் தெரியாது. ஆங்கிலமும் புவியியலும் அவர்களுக்கு நான் கற்றுக் கொடுத்தேன்.

க.பொ.த.ப சாதாரண வகுப்பு முதல் முதலாக பொருளியல் பாடத்தை தமிழில் கற்பிக்க எனக்கு ஆணையிடப்பட்டது. 'G' என்ற வகுப்பு உருவாக்கப்பட்டு அதன் வகுப்பாசிரியராகவும் பொறுப்புத்தரப்பட்டது. கொக்குவில் இந்துவின் வரலாற்றில் பொருளியல் பாடத்தை முதலில் கற்பித்த பெருமை கிடைத்தது. இன்று வர்த்தகத்துறைக் கல்வியில் கொக்குவில் இந்து முன்னணி வகிப்பதற்கு அன்று அடித்தளம் போடப்பட்டது. அந்த வகுப்பு மாணவர்கள் மிகவும் திறமைசாலிகள். தங்களுக்கு விடப்பட்ட சவாலை மிகத் திறமையாக எதிர்கொண்டார்கள். பொதுப்பரீட்சையில் சுமார் இருபது மாணவர்கள் சிறந்த சித்திகளைப் பெற்றனர். ஆயினும் அவர்களுக்கு உயர்வகுப்பில் வர்த்தகம் கற்பிக்க வகுப்புகள் ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் சிலர் வர்த்தகப்பாடங்கள் கற்க வேறு கல்லூரிகளுக்குச் சென்றார்கள். எமது கல்லூரியிலும் வர்த்தக வகுப்பு ஆரம்பிக்க வேண்டும் என்ற எனது வேண்டுகோள் ஏற்கப்படவில்லை. நானோ விடாது எனது வேண்டுகோளைத் தொடர்ந்தேன். எனது காரணங்களை திரு.சி.கே.கே. ஏற்றுக்கொண்டார். அடுத்த வருடம் எமது கல்லூரியில் முதன் முதலாக வர்த்தக வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. பொருளியலை கற்பிக்கும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. வர்த்தகம் கற்க வேறு பாடசாலைகளுக்குச் சென்ற மாணவர்கள் பலர் உடனே மீண்டும் எமது கல்லூரிக்கு வந்தார்கள். ஒரு வருடகாலத்தை தியாகம் செய்து வகுப்பில் சேர்ந்தார்கள். அவர்களில் பலர் பல்கலைக்கழகத் தெரிவு பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். அவர்களில் இருவர் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்களாக இருக்கின்றார்கள் என்பது பெருமைக்குரிய விடயமாகும்.

நான் அதிபராக பொறுப்பேற்றகாலத்தில் கலைப்பிரிவு மாணவர்களை கட்டாயம் வரலாற்றை ஒரு பாடமாக கற்கவேண்டும் என வற்புறுத்தி நடைமுறைப்படுத்தினேன். சில மாணவர்களுக்கு விருப்பமில்லை. எனினும் நான் அவர்களை உடன்பட வைத்தேன். நானே அவர்களுக்கு இந்திய வரலாற்றைக் கற்பித்தேன். திரு. சிவகுமார் இலங்கை வரலாற்றைக் கற்பித்தார். வரலாற்றை பாடமாக எடுத்த மாணவர்களுக்கு விசேட சலுகை கொடுத்து பல்கலைக்கழக அனுமதி வழங்கப்பட்டது. இவ்வாறு அனுமதி பெற்ற பலமாணவர்கள், 'சேர்'! வரலாறு எடுத்த படியால் தான் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. 'நன்றி'. என்று கூறியதை மறக்கமுடியுமா? அதுமாத்திரமில்லை. இருபத்திமூன்று மாணவர்கள் ஒருவருடத்தில் பல்கலைக்கழக அனுமதி பெற்றுச்சாதனையும் படைத்தார்கள்.

நான் அதிபராக இருந்த காலத்தில் 2003ஆம் ஆண்டில் கல்விக் கண்காட்சியொன்றை நான்கு நாட்கள் நடாத்தினோம். பலபாடசாலைகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் திரள் திரளாக வந்தமை வரலாற்று நிகழ்வாகும். அக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வெளிவந்த நாளேடுகள் கண்காட்சியை பாராட்டி எழுதியதைக் குறிப்பிட வேண்டும். மாணவர்களும் ஆசிரியர்களும் எமது கண்காட்சியைப் புகழ்ந்தார்கள். எமது கல்லூரியின் திறமையை பலரும் உணரும்படி செய்தது கண்காட்சியின் ஒரு பெறுபேறாகும்.

கொக்குவில் இந்து என்றால் சாரணியம் என்று சொல்லும் அளவிற்கு எமது சாரணர்கள் சாதனை படைத்தார்கள். 1965ஆம் ஆண்டில் ஒரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடத்தில் இருபத்தியொரு சாரணர்கள் 'இராணிச் சாரணர்களாகி' வரலாறு படைத்தார்கள். ஆங்கில தேசிய நாளிதழ்கள் இச்சாதனையை 'பெட்டியிட்டு' செய்தியாக வெளியிட்டன. நானும் திரு. கணேசலிங்கமும் இருபத்தியொரு சாரணர்களையும் இராணிச்சின்னம் பெற கொழும்புக்கு அழைத்துச் சென்ற நிகழ்ச்சி இன்னமும் நினைவில் பசுமையாக இருக்கின்றது. மீண்டும் 1969 ஆம் ஆண்டு பன்னிரண்டு இராணிச் சாரணர்களை உருவாக்கி இராணிக் கொடியை வென்றமை குறிப்பிடத்தக்கதாகும். எமது சாரணர்கள் தமது திறமையினால் பெரும் புகழ் ஈட்டினார்கள்.

எமது கல்லூரியில் 'கனிஸ்ட கடேற்' படையினை உருவாக்கி டியத்தலாவை பாசறைக்கு அழைத்துச் சென்ற நிகழ்ச்சி மறக்க முடியாததாகும். இப்படையின் முதலாவது பொறுப்பாசிரியராக இருந்தமை குறித்து மிகுந்த பெருமையடைகின்றேன்.

எமது கல்லூரியில் ஆண்களுக்கான 'பான்ட்' வாத்தியக்குழுவை உருவாக்கி அரங்கேற்றியது கண்களில் பசுமையாக காட்சி தருகின்றது. அப்போதைய கல்விப்பணிப்பாளர் இக்குழுவின் அரங்கேற்றச் செயல்பாட்டினை மிகவும் பாராட்டிப் பேசினார்.

மாணவிகளுக்கு முதல் முதலாக கூடைப்பந்தாட்டத்தை பயிற்றுவித்து அணியொன்றை உருவாக்கியது. குறிப்பிடத்தக்கதாகும். கூடைப்பந்தாட்டத் திடல் அப்போது கல்லூரியில் இருக்கவில்லை. வேறு பாடசாலைத்திடல்களில் பயிற்சி பெற்றே எமது கல்லூரி அணி போட்டிகளில் பங்கு பற்றியது. எமது முதலாவது போட்டி யாழ். பல்கலைக்கழகத்திடலிலேயே தான் நடைபெற்றது. உதைபந்தாட்டம் என்றாலே 'கொக்குவில் இந்து' என்று சொல்லும் அளவிற்கு எமது கல்லூரி பெரும் சாதனைகளைப் படைத்திருந்தது.

எமது கல்லூரி ஆரம்பகாலத்திலிருந்தே உதைபந்தாட்டப் போட்டிகளில் பெரும் புகழ் ஈட்டி வந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். நான் பயிற்சியாளராக இருந்தகாலத்தில் 1970 இல் இறுதிப்போட்டியில் மகாஜனாக்கல்லூரியைச் சந்தித்தோம். முதல்முறை போட்டி சமநிலையில் முடிவுற்றது. இரண்டாவது தடவையும் விளையாடும்படி பணிக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் போட்டி மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. போட்டி முடிய இன்னமும் பத்து நிமிடங்கள் தான் இருந்தது. மகாஜனாக்கல்லூரி ஒரு கோல் கூடுதலாகப் பெற்றிருந்தது. மகாஜனா வெற்றி என்று கூறிக் கொண்டே இரசிகர்கள் மைதானத்தை விட்டு வெளியேறத் தொடங்கினார்கள். திடீரென்று சந்திரநாதன் ஆவேசத்துடன் அடித்த பந்து விரைந்து எழுந்து விண்ணென்று சென்று கோலுக்குள் நுழைந்தது! இது தான் கொக்குவில்! நாம் இணை சம்பியன் ஆனோம்.

திரு. கணேசலிங்கம் பயிற்சியாளர். 1975 இல் பல்லாயிரக்கணக்கான இரசிகர்கள். கொக்குவிலும் மகாஜனாவும் மோதிக் கொண்டிருந்தன. சம நிலையில் போட்டி! சிவராசா அடித்த பந்து வேகமாக விரைந்து வளைந்து கோலுக்குள் நுழைந்தது. கொக்குவில் வெற்றி... சம்பியன்! பல வருடங்களாக சம்பியன் விருது பெற்ற மகாஜனாவைத் தோற்கடித்தது வரலாற்றுச் சம்பவம்! தட்டாதெருச்சந்தியில் இருந்து மேளதாளத்தோடு விளையாட்டு வீரர்களை, தோளிலேயே சுமந்து கொண்டு கொக்குவில் இந்து வரை கொண்டு வந்த காட்சியை மறக்க முடியுமா?'

கொக்குவில் இந்துவின் ஆசிரியர்களில் விளையாட்டு பயிற்சியாளர்களாக (COACH) சிலரே இருந்தாலும் அவர்கள் அத்தனைபேரும் பிரபலமானவர்களாகவே காணப்பட்டார்கள். திருவாளர்கள் சபாலிங்கம், பாலகிருஷ்ணன், கணேசலிங்கம், மகேந்திரன், ரி. வில்வராசா ஆகியோர் பெரிதும் குறிப்பிடத்தக்கவர்கள். ஆசிரியராக இருந்திராவிட்டாலும், விளையாட்டுத்துறையின் 'உதயசூரியன்' 'பரமானந்தம் மாஸ்டர்' என்றால் மிகையாகாது. திருமதி. ஏகாம்பரம் பல காலம் விளையாட்டு ஆசிரியையாக இருந்தவர். விளையாட்டுப் பொறுப்பாசிரியராக இருந்த திரு. T. புவனசுந்தராசா ஒருமுறை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர். இவர் இலண்டன் பழைய மாணவர் சங்கத்தில் முதல் தலைவராக இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். பழைய மாணவர்கள் பலர் எமது கல்லூரியின் பயிற்சியாளர்களாகவே இருந்திருக்கின்றார்கள். எமது கல்லூரியின் விளையாட்டுத்துறையில் மிகவும் திறமை வாய்ந்தவர்களாக விளங்கிய செல்வராசா, ஞானஸ்கந்தா, ரஞ்சித்குமார், பாலகுமார், உமாசங்கர், செல்வநாதன், சந்திரநாதன், கோகுலன், சத்தியகலா, திருமதி குணரத்தினம் போன்றோரை மறக்க முடியாது. முழுநேர பயிற்சியாளராக இருந்த காலஞ்சென்ற பவசிங் தனக்கென விளையாட்டு உலகில் பிரபலமான பெயர் பெற்றவர். இத்தகைய பழைய மாணவர்களை நாம் மறக்க முடியாது. எமது பழைய மாணவர்களாக இராத பிற கல்லூரிகளில் பிரபல்யம் வாய்ந்தவர்களாக விளங்கிய திரு. திருக்குமார், திரு. கந்தசாமி, திரு. துரைசிங்கம் ஆகியோர் துடுப்பாட்டத்திற்கும் (Cricket), திரு. சச்சிதானந்தன், திரு. கலாதரன் ஆகியோர் உதைபந்தாட்டத்திற்கும் சில காலங்களில் பயிற்சியாளர்களாக இருந்துள்ளனர்.

மாணவர்கள் படிப்பில் மாத்திரம் ஈடுபட்டால் போதும் என்றே பலபெற்றோர்கள் விரும்பியிருந்த காலத்தில் மாணவர்களை விளையாட்டில் ஈடுபட வைப்பது பெரும் பாடாகவே இருந்தது. விளையாட்டிலும் கல்வியிலும் ஈடுபாடு கொண்டிருந்த மாணவர்கள் தமது கல்லூரியிலும் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார்கள் என்றால் மிகையாகாது. கனடா பழைய மாணவர் சங்கத்தின் தலைவர்களாக இருந்தவர்கள் பலர் பிரபலமான விளையாட்டு வீரர்கள் என்பதைப் பார்க்கும் போது மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கின்றது. எமது கல்லூரிக்காக சேவை செய்து வரும் பல பழையமாணவர்கள் விளையாட்டுத்துறையில் முன்னணி வகித்தவர்கள் என்பதில் பெருமகிழ்ச்சியே.

ஆசிரியராக மேலும் அதிபராகவும் கொக்குவில் இந்துவில் கடமையாற்றியதால் நான் பெற்ற பயன் மாணவர்கள் எல்லோரும் பிள்ளைகளானது தான்!. கடல் கடந்து கனடாவில் வந்த போது ஓடோடி வந்து பலவழிகளில் உதவியாக இருந்தவர்களை நினைக்க நினைக்க இனிமையாக இருக்கின்றது. இவர்களின் இந்த உயர்ந்த பண்பிற்கு வித்திட்டது எமது தாயாகிய......கொக்குவில் இந்துக் கல்லூரியே!

**சுடர். இ. மகேந்திரன்**
**முன்னாள் அதிபர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நூற்றாண்டில் கொக்குவில் இந்து அன்னை**



அன்னையாம் கொக்குவில் இந்துக் கல்லூரியை ஸ்தாபித்த காலஞ்சென்ற திரு. இ. செல்லையா அவர்களின் பாதக்கமலங்களை வணங்கி இச்சிறு தொகுதியை சமர்ப்பிக்கிறேன்.

2010ம் ஆண்டு எமது கல்லூரித்தாய் தனது நூறாண்டில் காலடி எடுத்து வைக்கின்றாள். பல்லாயிரம் மாணவச் செல்வங்களை வளர்த்தெடுத்து யாழ்ப்பாணத்தில் தன்னிகரில்லா பள்ளிக்கூடமாக விளங்கும் எமது கொக்குவில் இந்துக் கல்லூரி தனது நூறாவது ஆண்டில் கால் பதிப்பதில் கொக்குவில் இந்துவின் பிள்ளைகள் யாவரும் பூரிப்படைவதில் சந்தேகமே இல்லை.

கல்வியும், தமிழர்தம் கலாச்சாரமும், ஒழுக்கமும் கண்ணெனப் போற்றும் கல்லூரியின் பாரம்பரியம் கல்லூரிக்கெனத் தனித்துவமான அடையாளமாய் மிளிர்வது பெருமிதத்திற்குரியது.

உலகெங்கும், திசையெங்கும் உந்தன் பிள்ளைகள் நாங்கள் நிமிர்ந்து வாழ்வதற்கு இன்றுவரை வழிகாட்டும் அன்னையாய் நீயே இருக்கின்றாய்.

கற்றதொழுகு எனும் அந்த மந்திரத்தைப் பற்றிச் சுழர்கிறது எங்கள் வாழ்வு. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கும் உந்தன் பணி தொடர எனதும், எனது குடும்பத்தினரதும் வாழ்த்துக்கள்.

நாகேஸ்வரி துரைராஜசிங்கம்
முன்னைநாள் ஆசிரியை
கொக்குவில் இந்துக் கல்லூரி.

# Kokuvil Hindu College Logo

**The emblems in it are:**

**Om, Lamp, Conch, Wheel, Lotus**

| | | |
|---|---|---|
| **Om** | - | the mystic symbol |
| **Lamp** | - | denotes growth of knowledge |
| **Conch** | - | denotes softness and purity |
| **Wheel** | - | **denotes charity** |
| **Lotus** | - | denotes wealth, beauty, and esteem |
| **Kattathozhuhu** | - | code of conduct |

**பாடசாலைச் சின்னமும் அதன் தத்துவமும்**

எமது கல்லூரிச் சின்னத்தில் பின்வரும் அம்சங்கள் உள்ளன அவையாவன:

**ஓம், விளக்கு, சங்கு, சக்கரம், தாமரை, கற்றதொழுகு என்ற வாசகம் என்பனவாகும்.**

| | | |
|---|---|---|
| **ஓம்** | - | இந்து சமயப் பண்பாட்டில் ஒழுக்கத்தை குறிக்கின்றது. |
| **விளக்கு** | - | அறிவை வளர்த்தலைக் குறிக்கின்றது. |
| **சங்கு** | - | மென்மையையும், தூய்மையையும் குறிக்கின்றது. |
| **சக்கரம்** | - | தர்ம சிந்தனையை உணர்த்துகின்றுத |
| **தாமரை** | - | செல்வத்தையும், அழகையும், உயர்வையும் உணர்த்துகின்றது. |
| **கற்றதொழுகு** | - | கற்க வேண்டியவற்றை ஐயந்திரிபறக் கற்று அதன்படி ஒழுக வேண்டும் என்பதை உணர்த்துகின்றது. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Kokuvil Hindu College**

# OLD STUDENTS' ASSOCIATION

# கொக்குவில் இந்துக்கல்லூரி

## பழைய மாணவர் சங்கம்

O.S.A.T.P No. 021-222 5088
e-mail : kkcosa@yahoo.com

Kokuvil Hindu College
Kokuvil,
Sri Lanka.

***Prisedent:***

Mr. A. Panchalingam
(Rtd. Principal)
Kopay Road,
Urumpirai East,
Urumpirai.
T.P: 021-222-3754

***General Secretary:***

Mr. S. Rajadurai
165, Ramalingam Road
Thirunelvely,
Jaffna.
T.P: 021-222-6607

***Treasurer:***

Mr. P. Kamalanathan
(Rtd. Principal)
"Umapathy"
Chunnakam South,
Chunnakam.
T.P: 060-221-4044

***Vice President:***

Mr. A. Ahiladas
Principal,
Kokuvil Hindu College.
T.P: 021-222-2646

Mr. T. Dheverajah
Mr. P. Maheswaran
Mr. R. Sivalingam (J.P)
Mr. S. Kunaratnam
Mr. T. Sagathevan
Mr. P. Chanthiranathan

***Asst.Secretary:***

Mr. S. Varatharajeswaramuthali
Mrs. Malini Vathanathan

***Audit*:**

Mr. T. Piruthiviraj
Mr. N. Navaratnarasa (G.S)

**பூத்துக் குலுங்கும் நந்தவனம் கண்டு பூரித்து நிற்கும் என்மனம்**

**இதயம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்**



கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கனடா) எமது கல்லூரியின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாட இருக்கும் இவ்வேளையிலே அவர்களினால் வெளியிடப்படும் நூற்றாண்டு மலருக்கு எனது வாழ்த்துக்களையும் இச்செய்தியினையும் வழங்குவதில் பெரும் உவகை அடைகின்றேன்.

எமது பிரதேசத்திலே பல பாடசாலைகள் நூற்றாண்டினைக் கடந்த நிலையில் பொலிவிழந்து, நலிந்து காணப்படுகின்றன. எனினும் எமது அன்னை அன்றிலிருந்து (1910) இன்றுவரை **"நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக"** புதுப்பொலிவுடன் வளர்ந்து வந்துள்ளாள். நூற்றாண்டு காலப்பகுதியில் பல இடையூறுகள், தடைகள் ஏற்பட்ட போதிலும் அவற்றையெல்லாம் தாண்டி அன்னை இன்று கம்பீரமாகத் தோற்றமளிப்பது எமக்கெல்லாம் மகிழ்ச்சி ஊட்டுகின்றது.

எமது கல்லூரிக்கு ஏற்பட்ட சோதனைகள், வேதனைகள் ஏராளம். ஓலையினாலான கூரைகள் எத்தனை எரிக்கப்பட்டன. இந்திய அமைதிப் படையினால் எத்தனை கட்டிடங்கள் சேதமாக்கப்பட்டன. இதனால் மாணவர் கற்பதற்கான வகுப்பறை வசதிகள் பாதிக்கப்பட்டன.

நான்கு பரப்புக் காணியில் ஸ்தாபிக்கப்பட்ட எமது கல்லூரி இன்று நான்கு ஏக்கர் காணி விஸ்தீரணத்துடன் காட்சி அளிக்கின்றது. ஒரு சில மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட எமது பாடசாலை இன்று 2000 க்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்டுள்ளது. அதேபோல் வகுப்பறைக் கட்டிடங்கள், விளையாட்டுமைதானம், நவன கணனி அறைகள் என கல்லூரி மாணவர்களுக்கு அளிக்கும் வசதிகள் பலவாகும். இந்த நூற்றாண்டு வருடத்தில் நாம் இதனை நினைத்துப் பெருமைப்படலாம். கல்லூரிக்கு இத்தனை வசதிகளும் கிடைப்பதற்கு எமது கல்லூரிச் சமூகம் பெரும் பங்காற்றியுள்ளது. இப்பங்களிப்பு பாடசாலையன் ஆரம்பம் தொட்டு இன்றுவரை இடம்பெறுகின்றது.

அந்த வகையில் கனடா பழைய மாணவர் சங்கம் கல்லூரியின் மேம்பாட்டிற்கு ஆற்றிய, ஆற்றி வருகின்ற சேவைகள் மகத்தானவை. கல்விசார், பௌதீகவளம்சார் துறைகளில் கணிசமான பங்களிப்பினை அண்மைய காலங்களில் கனேடிய பழைய மாணவர் சங்கம் ஆற்றி வருவது கண்கூடு.

இந்த நூற்றாண்டு வருடத்தில், கனேடிய பழைய மாணவர் சங்கத்தின் சேவை கல்லூரி அன்னைக்குத் தொடர எனது ஆசிகளையும், வாழ்த்துக்களையும் வழங்குகின்றேன்.

அ. பஞ்சலிங்கம.
முன்னாள் அதிபர்
தலைவர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்.

**Members**

Mr. S. V.Mahendran
Mr. T. Jeyakumar
Mr. T. R. Balasundaram
K. Balasupramaniyam
Mr. S. Sachcithananthasivam
Mr. R. Rasalingam (G.S)
Mr. K. Ambikaipakan (G.S)
Mrs. N. Mathanasurenthiran
Mrs. M. Punithavathi
Mr. M. Mahenthirarasa
Mrs. K. Thevarasa
Mr. S. Thurairatnam
Mr. S. SelvaranganMr.
Mr. R. Partheepan
Miss. S. Nalini



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Kokuvil Hindu College
## OLD STUDENTS' ASSOCIATION TRUST
## கொக்குவில் இந்துக் கல்லூரி
## பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம்

O.S.A T.P No: 021-2225088 Kokuvil Hindu College, Kokuvil, Jaffna


President:
Mr. P. Kamalanathan
Retd. Principal:
*"Umapathy"*
Chunnakam South,
Chunnakam,
060-221 4044

General Secretary:
Mr. R. Selvanathan. J. P,
Maniar Pathy Lane,
Kokuvil West, Kokuvil
T.P. 021-2222928

Treasurer:
Mr. S. Sriganeshan,
Prop: Parni Drugs House
T.P: 021-2223540

Committee Members:
Mr. A. Panchalingam,
Retd. Principal
T.P: 021-2223754
Mr. R. Magendran
Retd. Principal
T.P: 021-2223837
Mr. M. Subramaniyam
T.P: 01-590630
Mr. S. V. Mahendran
T.P: 0777-710942
Mr. S. Varatharageswara-
mudali




**கல்லூரியின் நூறாவது அகவை கொண்டாடும்**
**கனடா பழைய மாணவர் சங்கத்திற்கு**
**எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்.**



கனடா பழைய மாணவர் சங்கமானது வருடாவருடம் ஒன்றுகூடல் நிகழ்வினை ஏற்பாடு செய்து அதனைப் பெருவிழாவாகக் கொண்டாடி வருவது வழக்கம். அதற்கமைய இவ்வருடம் இச்சங்கம் பதினாறாவது அகவை காணும் இச்சந்தர்ப்பத்தில் கல்லூரியின் நூற்றாண்டினையும் காணுகின்றமை மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். இவ்வாண்டு நடைபெறும் "மகுடவிழா" கல்லூரியின் "நூற்றாண்டு மகுடமாகவும்" திகழ்கின்றது.

கனடா பழைய மாணவர் சங்கமானது கல்லூரி நம்பிக்கை நிதியத்தினூடாக ஆற்றுகின்ற சேவைகள் எமது வருடாந்த வாழ்த்துச் செய்திகளினூடாக தெரிவிப்பது வழக்கம். மேற்படி சங்கத்தின் சேவைகள் விரிவுபடுத்தப்பட்டு பலதுறைகளுக்கும் ஆற்றிக்கொண்டு இருக்கின்றன. நிதியத்தினூடாக புலமைப்பரிசில் கொடுப்பனவுகளில் ஆரம்பிக்கப்பட்ட சங்கமானது இப்போது கணனி, ஆங்கிலத்திறன், தமிழ்த்திறன் மற்றும் புலமைப்பரீட்சையில் அதியுச்சப்புள்ளிகள் பெற்ற மாணவர்களை ஊக்குவிக்கும் திட்டமான நிதிக்கொடுப்பனவுகள் போன்றவற்றை மேம்படுத்தியுள்ளன. இதற்கு மேலாக கல்லூரியின் பௌதீகவளங்களை பெற்றுக்கொள்ளும் முகமாக பெரும் நிதிகளையும் தந்துதவியுள்ளனர். இவ்வாண்டு க.பொ.த.ப (உயர்தர)ப் பரீட்சையில் அதியுயர் புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழகம் புகுவதற்கு காத்திருக்கும் பலர் கனடாப் பழைய மாணவர் சங்கத்தின் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் உதவி பெற்றவர்கள் என்பதைக் கூறுவதில் தங்கள் சங்கம் பெருமையடைகின்றது என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றோம். இதுவரைக்கும் அறுபத்தி இரண்டு மாணவர்களுக்கு மேற்பட்டோர் தங்கள் சங்கத்தினூடாகப் புலமைப்பரிசில்களைப் பெறுகின்றனர். குறிப்பாக எமது கல்லூரிக்குப் பெருமை தேடித்தந்த மாணவி செல்வி. தமயந்தி ஸ்ரீபாலன் மூன்று பாடங்களிலும் விசேடசித்தி பெற்று மாவட்டரீதியில் இரண்டாவது இடத்தையும், தேசிய மட்டத்தில் ஐந்தாவது இடத்தையும் பெற்று பொறியியல் பீடத்திற்கு தெரிவாகி உள்ளார். இம்மாணவி கனடா பழைய மாணவர் சங்கத்தில் புலமைப்பரிசில் உதவிகளைப் பெற்று வந்துள்ளார் என்பது தங்கள் நோக்கத்திற்கும், தொடரும் சேவைக்கும் உந்துகோலாக அமையட்டும்.

எமது கல்லூரியின் நூற்றாண்டு விழாவினை கோலாகலமாகக் கொண்டாடும் சங்கமானது இதனையொட்டிய நிகழ்வுகளில் எமது கலை, கலாச்சார, பாரம்பரிய நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி கல்வி, விளையாட்டு போன்றவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென மனதார எமது நிதியம் வாழ்த்துவதுடன் அன்றையதினம் மலரவிருக்கும் "மகுட" மலரானது விருட்சம்பெற்று மலரவேண்டும் எனவும் வேண்டி இவ்விழாவினை முன்னெடுக்கும் விழாக்குழுவினர், சங்க நிர்வாகசபை உறுப்பினர்கள், மற்றும் எமது கல்லூரி பழைய மாணவர்கள் எல்லோருக்கும் எமது பாராட்டுகளைத் தெரிவிக்கின்றோம்.

பொ.கமலநாதன்
தலைவர்.

இ. செல்வநாதன்
(நகுலன்)
செயலாளர்.

**கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from President of Kokuvil Hindu College (OSA) Colombo Branch



As President of K.H.C. (O.S.A.) Colombo Branch, I am glad and proud to extend my greetings and best wishes to the organizers of our 'Alma Mater" Centenary Year Celebrations in Canada and pleased to send this message for the Centenary year magazine to be released on March 27, 2010. The function serves somewhat as a 'Retreat' where past pupils and teachers living in Canada, their families and friends meet and enjoy the day with their Chief Guest, Mr. A. Muthulingam, one of our distinguished old students who is a well known story writer in Tamil. Despite numerous setbacks in the past, our College is marching forward in the Centenary year and is also counting on the past pupils association's help.

Our Past Principal Mr. Kamalanathan retired in 2007 and the new Principal Mr. Akiladas has taken charge of our school. He is well qualified and has shown lot of interest and under his guidance our school students had shone not only in their education but also in sports, Interact (Rotary) and other extra-curricular activities in the past two years.

We invited our new Principal to Colombo last year, and he announced his plans to uplift not only the students' education but also to improve the school image by giving a face lift to the premises for the Centenary celebrations. We have collected and remitted nearly Rs. One Million for the purpose.

The Association also felicitated one of our Vice Presidents, Mr. Manickam Subramanian on January 30, 2010 at Chinmaya Mission Pragati on his 70 th Birthday from 7 pm onwards at a well gathered Felicitation dinner not only for his valuable contributions to our "Alma Mater" in the past 6 years, but also he has now launched on building a Pavilion at the eastern wing of the College play-ground estimated to cost Rs. 15 Million.

The Colombo Association has also arranged with the Postal authorities to release a Stamp and First Day Cover to commemorate the College Centenary, and this is expected to take place in July this year during the Centenary Year Celebration at the school. Another first day cover with Rs.5.00 stamp depicting S. Handy Perinbanayagam picture will also be issued on this occasion.

Let us hope that our school grows to greater heights in the years to come.

*Dr. K. Ketheeswaran JP.*
President, K.H.C. (O.S.A.) Colombo Branch.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KOKUVIL HINDU COLLEGE
## OLD STUDENTS' ASSOCIATION GERMANY e.V.

ESTD 2002

கொக்குவில் இந்துக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

**President:**
Mrs. Rasadevi Selvanayagam
0202/279178
**Vice President:**
Mr. Theverajah Jeyakumar
0208/8107866
**Vice President:**
Mr. Ponuthurai Vijayendran
0688/77458
**Secretary:**
Mr. ThevarajahThevakumaran
0231/1770238
**Asst.Secretary:**
Ms. Uthayarani **Thiyagalingam**
0259/1948198
**Treasure:**
Mrs. Kiruparathy Sivaram
0231/5331584
**Asst.Treasure:**
Mrs. Karunaranjani Sukumar
0293/2373358
**Account Controler:**
Mr. Thevaraja Srikanthan
0228/856020
**Culture:**
Mr. Velautham Gunasekaran
0231/1770196
Mr. Muthiah Yogarajah
0413/1244856
Mr. Shan Santhanathan
0293/237289
Mr. Naganathan Manoharan
0214/601241
**Other Members:**
Mr. Rasiah Vasantharasan
0202/551440
Mr. Seladurai Suththananthan
0292/1348291
Mr. Supramaniam Pakiyanathan
0231/7006287
Mrs. Rajaluzmi Raviranjan
0293/123490
Mr. Kanagaratnam Thirukkumar
0231/5378084
Mr. Rasiah Murugiah
0231/577371
Mr. Thevarajah Thevapirathapan
02321/813191

**K.H.C.O.S.A. Committee 2008/2009**



## ஆசிச்செய்தி !!

மனித வாழ்வின் மகுடமாய்த் திகழ்வது கல்வி. அறிவன் வேரை நம் அடிமனதில் ஊன்றி, நாம் தலைநிமிர்ந்து, இப்பூவுலகில் வாழ ஆதாரமாய் மிளிர்வது, நாம் கல்விகற்ற கல்லூரியும், எமக்குக் கற்பித்த ஆசிரியர்களும் என்றால் அது சாலப் பொருத்தமாகும். சேய்களாகிய நாம் புலம்பெயர்ந்து பல நாடுகளில் பரவி வாழ்கிறோம். இந்தக் காலகட்டத்தில் எமது கடமையை நன்று உணர்ந்து செயல்ப்படுவது, நாம் கற்ற கல்லூரியின் வளர்ச்சிக்கு பெரிதும் சிறப்பைக் கொடுக்கும் என்பது திண்ணம். அநதவகையில் கனடா வாழ் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் நூற்றாண்டு விழாவை சஞ்சிகையோடு பூர்த்தி செய்வதையிட்டு நாம் அகமகிழ்கின்றோம். எழுத்தறிவித்தவன் இறைவனாகும் என்னும் முதுமொழி ஓர் உயிர்ப்புடைய கருவாகும். நாம் கற்ற கல்லூரியை போற்றுவோம் உயர்வடைவோம்.

வாழ்க தமிழ்!

இராசதேவி செல்வநாயகம்

தலைவி
கொ.இ.க.ப.மா.சங்கம் – ஜேர்மனி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KOKUVIL HINDU COLLEGE OLD STUDENTS' ASSOCIATION AUSTRALIA (SYDNEY)

**President**

Mr.M.Indrakumar

**Vice Presidents**

Mrs.S.Ramanathan

Mr.P.Tharmanathan

Mr.M.Sivachandran

**Secretary**

Mr.S.Thanikairajan

**Asst.Secretary**

S.Sritharan

**Treasurer**

Mr.S.Thavapalachandran

**Asst.Treasurer**

Mr.P.Satyajith

**Committee Members**

Mr.S.Jayagaran

Mrs.J.Navaratnam

Mr.M.Thanapalasingham

Mr.K.Sathiyabalan

Mrs.V. Pahirathan

Mr.K.Muraletharan

Mr.T.Sagadewa-ACT

Mr.K.Manoharan-QLD

**Auditor**

Mr.S.Thangarajah

**Patron**

Mr.V.Ganesalingham

## Message from the President...



It is with pleasure that I send this message on the occasion of the Centenary Celebration of Kokuvil Hindu College. I am pleased to learn that Kokuvil Hindu College Old Students' Association Canada is celebrating Centenary Celebration in Canada.

Although we are living in different parts of the world we feel that we are very close to each other. Our common aim is to help our school progress in all spheres of activities. The old students' Association not only strengthens our ties with our school but also with other old students' association all over the world.

I am particularly pleased to learn that Kokuvil Hindu College Old Students' Association Canada Branch has made tremendous contribution to the development of Kokuvil Hindu College and its students over the last several years.

Our association has also recently made a contribution of AUD 2000 (two of our members contributed AUD 500 each) towards the cost of purchasing the land for the playground / Centenary Celebration.

As you may be aware, during our annual get-together "Kokuvil Theepam" held on 10th October 2009 in Sydney, our live band "Uthaya Geetham" consisting of old students and their children performed exceptionally well It has been a great joy to watch our association grow since 2007.

On behalf of our association, I congratulate everyone involved with the KHC Old Students' Association Canada and wish your association every success in the future.

Manickavasagar Indrakumar

**President**

**Kokuvil Hindu College Old Students' Association, Australia (Sydney)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**KOKUVIL HINDU COLLEGE**
**OLD STUDENTS ASSOCIATION (VICTORIA) AUSTRALIA INC**

**கொக்குவில் இந்துக் கல்லூரி**

**பழைய மாணவர் சங்கம் (விக்ரோறியா) அவுஸ்ரேலியா**

A.B.N: 35 701 259 728

Email: khcosavic@hotmail.com

**President**
Mr.R.Siriratnam
M- 0430145832

**Vice-President**
Ms.S.Sithaluxmi
M-0419386918

**Secretary**
Mr.R.Thavakumar
M-0427235380

**Asst. Secretary**
Mr.T.Nadanakumar
M-0402284259

**Treasurer**
Mr.V.Paranthaman
M-0417139629

**Asst. Treasurer**
Mr.S.Dushyanthan
M-0411598504

**Sports Secretary**
Mr.B.Thayananthan
M-0421467946

**Asst. Sports Secretary**
Mr.S.Murugananda
M-0431666306

**Committee Members**
Mr.T.Balasundaram
Mr.K.Sivasuthan
Mrs.B. Mathini



**On the 24th of August 2008, the dreams of many old students of Kokuvil Hindu College, living in Melbourne, Australia, had finally come true. It was on this day the Kokuvil Hindu College Old Students Association (Victoria) Australia Inc was inaugurated, due to the perseverance of six old students of our school. These enthusiastic past students dedicated themselves to form an association, a long felt need for many old students living in Victoria. These founding members, namely Dushyanthan, Paranthaman, Siriratnam, Srisachindran, Thavakumar and Nadanakumar, often scarified their time and money had finally achieved their ambition by forming an association for all our old students living in Victoria.**

**The committee, as a first priority, drafted a constitution for the association and got it incorporated in Victoria, thus paved a proper way of conducting themselves and the future office bearers, within an environment of equality, legality and with clear purposes.**

**We are in our second year of existence. Although our existence has only been for a short period of time, we have contributed towards the development of our school as well as helped the war affected people as much as we can.**

**Year 2010 is a special year for all old students of our school. All our members are eagerly waiting for the dawn of 2010 as we are all set to celebrate the centenary year of our school. In this centenary year, we remember all the sacrifices made by our past and present principal and teachers with gratitude. Without their dedication and commitment we would not be what we are now.**

**We remember with pride the achievements we made in sports, especially in soccer. We like to thank and remember the contributions made by those excellent players towards soccer in this special moment of celebrating our centenary year.**

**Though we live thousands of miles away from our school, our memories are always with our school .We remember vividly all the events, including the beatings that had happened during our long schooling.**

**The affection for our school by our old students is well known. The genuine efforts taken by the principals, namely Mr. Panchalingam and Mr. Mahendran, the teachers and the past students during the civil war, especially during 1987-89 and again during 1995-96, have been legendary. They virtually rebuilt sections of our school from rubble. It enabled our school to compete with other national schools in education and sports.**

**We are sure that the wish of all old students of our school in this centenary year is for our school to become number one in education and sports, initially in the region, then district and ultimately in the whole island.**

**We heart fully wish KHC OSA Canada all the best in your centenary year celebration to be held on 27th March 2010.**

***President***
**Kokuvil Hindu College Old Students Association (Victoria) Australia Inc**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்குவில் இந்துவின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் கனடா வாழ் பழைய மாணவர்களுக்கு எமது வாழ்த்துச் செய்தி.



இலங்கையின் முன்னணிக் கல்லூரிகளில் ஒன்றான கொக்குவில் இந்துக் கல்லூரி ஆரம்பிக்கப் பட்டு நூறு ஆண்டுகள் நிறைவு பெற்று விட்டன என்பது பழைய மாணவர்களாகிய எமக்கெல்லாம் பெருமையும் பூரிப்பும் தருகின்றது. உலகின் பல நாடுகளில் இதையொட்டி விழாக்கள் கொண்டாடப் படஇருக்கின்றன. இதில் கனடா வாழ் கொக்குவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்கள் முன்னணியில் நின்று விழாவை ஒழுங்கு செய்வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

எமது தேசியத்தின் முக்கிய அம்சம் கல்வியே கருந்தனம் என்ற கருதுகோளாகும். இதை முன்னிட்டு பல தமிழ் பெரியார்கள் தமிழர்கள் வாழும் பகுதி எங்கும் கல்விக்கூடங்கள் அமைப்பதில் மிகுந்த சிரமம் எடுத்துக் கொண்டு உழைத்தமையை நாம் இக்கணத்தில் நன்றியுடன் நினைவு கூர வேண்டும். அவர்களின் அரும்பணிகளாலேயே எமது கொக்குவில் இந்துக் கல்லூரி உருவானது.

கனடாவில் 1994ஆம் ஆண்டு உதயமான கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் சங்கம் கல்லூரியின் வளர்ச்சிக்கு பெரும் பணியாற்றி வருவதை யாவரும் அறிவர். அங்குள்ள இளைய தலைமுறையினரும் இதில் பங்கெடுப்பது மிகவும் வரவேற்கத் தக்கதாகும். பதினாறு ஆண்டு காலம் ஒரு அமைப்பை நடத்திச் செல்வதற்கு கனடா வாழ் எமது பழைய மாணவர்களின் ஆளுமையும் தலைமையும் பாராட்டப் படவேண்டியது. கொக்குவில் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கு உங்களது சங்கம் ஆற்றிய அளப்பரிய பணிகளின் பட்டியல் புலமைப் பரிசில்கள், ஆங்கில அறிவு அபிவிருத்தி, கட்டிட அபிவிருத்தி, காணிக் கொள்வனவு, கணனித் தொகுதிகள் என நீண்டு செல்கிறது.

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் சங்கம் (கனடா) வினது நூற்றாண்டு விழா வெற்றி பெறவும் சங்கம் தொடர்ந்து வளர்ச்சியடையவும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கு சங்கத்தின் பங்களிப்பு மேலும் சிறப்புறவும் பிரித்தானிய பழைய மாணவர்களின் சங்கத்தின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

சின்னத்துரை தெட்சணாமூர்த்தி

தலைவர்,

கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (ஐ. இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு வியாபார நிலையம் வாங்க விற்க

Century 21

"இல்லை ஓர் இல்லம் தனக்கென்று – தீராத
கவலை உமக்கெதற்கு - இங்கு
நல்லதோர் நண்பன் நானிருக்க – எனை
நாடிய உள்ளங்கள் உவகை கொள்ள – அதை
பார்த்தே என்மனம் நிறைவு கொள்ளும்"

## நம்பிக்கை, நேர்மை, நட்பான சேவைக்கு அழையுங்கள்



# சத்தி மருதப்பா

## Sathhi Maruthappah

Sales Representative

Century 21

Affiliate Realty Inc.
Brokerage

# 416-816-1500


**Convenience Store, Gas Station, Restaurant also available All over Ontario**

208 - 80 Corporate Drive,
Toronto, Ontario M1H 3G5
Bus: 416-290-1200
Fax: 416-290-1900




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னாலும் முடியும்...



**ராஜா மகேந்திரன்**

1998ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஆரம்பித்த உலகபொருளாதார வீழ்ச்சி ஆதனவியல் வியாபாரத்தையும் விட்டு வைக்கவில்லை. நெடுங்காலமாக அடுக்குமாடிகளை கட்டி மனை வியாபாரம் செய்து கொண்டிருக்கும் றைடல் 'Tridel' நிறுவனத்திற்கும் இதன் வலி பெரிதாக இருந்திருக்க வேண்டும். அவர்களுடைய மனைகளில் பல விற்பனை தேக்கநிலையை அடைந்தன. சந்தைக்கு கொண்டுவரவேண்டிய புதிய தொகுதிகள், பரணில் போடப்பட்டன. அவர்களின் விடாமுயற்சி, புதிய யுக்திகளை பாவிக்கும் அறிவுத்திறன், வியாபாரத்திறமை, காலத்திற்கேற்ப நனவாக்கும் கொள்கை இவை யாவும் வியாபாரத்திற்கு புத்துணர்ச்சியை கொடுத்து இக்கட்டான வியாபாரச் சூழலிலும் புதிய பாதையை வகுத்து மீண்டும் எழுந்தார்கள்.

எதிர்காலத்தைப்பற்றி சிறந்த முறையில் திட்டமிடுவதற்கு, இறந்த காலத்தைப்பற்றி முழுதாக அறிந்திருப்பதோடு அதனை மானசீகமாக போற்றுதல் சிறந்ததாகும்!

பூமியில் வாழ்வது இலகுவானதல்ல. ஆனால் வாழ்ந்தே தீர வேண்டும். கஷ்டங்கள், நஷ்டங்கள், வாழ்த்துக்கள், சந்தோஷங்கள், தோல்விகள், வெற்றிகள் இதுவே வாழ்க்கை. ஒவ்வொன்றும் வாழ்க்கையில் படிப்பினையை ஊட்டுவனவே. பழைய அனுபவங்கள் மிகவும் கஷ்டமான, நெருக்கடியான, மாறாத வழுவை உருவாக்கியதாக இருக்கலாம். இதிலிருந்து நாம் யார் என்பதை அறியலாம். அது சிறந்த வாய்ப்புக்களை (Opportunities) தரலாம். அதனைக் கெட்டியாகப் பிடித்தால் நல்ல பலன் பெறலாம்.

எதை நாம் நம்புகின்றோம். எது எமக்கு முக்கியம். எந்தவிதமான நம்பிக்கைகள் எம்முடைய முன்னேற்றங்களை தடுக்கின்றனவோ அவற்றை இனங்கண்டு, தனிமைப்படுத்தி முற்றாக எம் மனதிலிருந்து தூக்கியெறிவது வாழ்வின் வெற்றியின் முதல்படி.

எமக்குப் பிடித்த, விருப்பமான, சொகுசான, வசதியான வட்டத்தை விட்டு வெளியே வந்தும். தெரியாதவற்றை முயற்சி செய்து பார்த்தும், சின்னச்சின்ன விடயங்களை செய்வதன் மூலம் அதில் வெற்றி பெறுவதுடன், அனுபவமும் கிடைக்கின்றது. ஒவ்வொரு சின்னச்சின்ன வெற்றிகளும் நம்பிக்கையையும் தைரியத்தையும் வளர்க்கின்றன. இதனிலும் பெரியவிடயத்தை கையாளலாம் என்ற நம்பிக்கையை ஊட்டுகின்றது.

அமெரிக்க முன்னாள் அதிபர் ஏபிரகாம் லிங்கன் கூறியது போல் 'எமது வாழ்வின் பொறுப்பை வேறுயாரிடமும் கொடுக்கலாம். ஆனால் எமது கடமையை வேறு எவரிடமும் கொடுக்க முடியாது."

எமது வாழ்விற்கு நாமே பொறுப்பானவர்கள்.

பொதுவான சில அடையாளங்களை வாழ்வில் வெற்றி பெற்றவர்கள் எங்களிற்கு புகட்டியுள்ளார்கள்.

1. குறிப்பிட்ட நோக்கம் மனதில் தெளிவாக இருத்தல்
2. வெற்றிக்கு தகுந்த விலை கொடுத்தல்
3. நிம்மதியை உணர்தல்.

வெற்றியானது ஒன்றென்று கூறமுடியாது. சிறிய சிறிய துண்டுகளின் சேர்க்கையே வெற்றியாகும். ஒவ்வொரு நாட்களின் மணித்தியாலங்கள் எல்லாம் ஒன்றாகக் காணப்படுவதில்லை. ஏற்றங்கள், இறக்கங்கள், கவலைகள், சந்தோஷங்களின் சேர்க்கையே. பல முயற்சிகளின் தோல்வியே உண்மையான வெற்றியைத் தேடித்தரும்.

பொதுவாக சிலமுயற்சிகளில் வெற்றியும் சிலவற்றில் தோல்வியும் கிடைக்கும். தோல்விகளின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க வெற்றியை அண்மித்து விட்டோம் என்பது கண்கூடு. தோல்வியே வெற்றிக்குரிய படிக்கல்.

தோல்வியைப்பற்றி சிந்தித்து அதிகூடிய சக்தியை செலவழித்து கவலைப்படுவதனை, முதிர்ச்சி அடைந்த மனமானது அகற்றும். அந்த மனம் அச்சக்தியை நாம் தேடும் வெற்றிக்காக பயன்படுத்தும். ஆனால் இந்தத் தோல்வியில் இருந்து தகுந்த பாடத்தை மட்டும் மனதில் எடுத்து கொள்ளும்.

வெற்றியானது இலகுவாகக் கிடைக்கப்போவதில்லை. அதற்குரிய விலையை கொடுத்தே தீரவேண்டும். நாம் தேடுகின்ற வெற்றி கிடைப்பதற்கு முன்பாக அதற்குரிய ஆக்கத்தை, ஊக்கத்தை, செயலை, தொழிலை, பணத்தைக் கொடுத்தே தீரவேண்டும். தொடர்ச்சியான, உறுதியான செயல்களே வெற்றியின் படிகள். தோல்விகளே இவற்றைக் கண்டு துவண்டுவிடும்.

வெற்றியும், அதற்கு கொடுக்கும் விலையும் நேரடித் தொடர்பு கொண்டவை. ஒவ்வொரு வெற்றியையும் அது சிறிதாயினும் பெரிதாயினும் மிகக்கழிப்புடன் கொண்டாடுவதால் எமது உள்மனம் குதூகலிக்கின்றது. அவ்வாறு செய்வதால் அவ்வெற்றியின் பலன் பிரகாசிக்கும். Dale Carnegie என்ற அமெரிக்க அறிஞர் ஒருமுறை கூறும்போது, எனக்கு காலில் அணிவதற்கு பாதணி இல்லை என்று கவலையாக இருந்ததாகவும், தெருவிற்கு வந்தபோதுதான் ஒருவரிற்கு காலே இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதனை புரிந்து கொண்டேன். எங்களுக்கு மற்றவர்களைவிட எவ்வளவு அதிகமாக கிடைத்திருப்பது என்பதனைப்பற்றி மகிழ்ச்சி அடையவேண்டும்.

மிகவும் அழகான இந்த உலகத்தை பார்ப்பதற்கு கண்கள் கிடைத்துள்ளன, இனிமையான பாடல்களையும், குயிலோசையை கட்பதற்கு காதுகள் கிடைத்துள்ளன, பேசுவதற்கு வாய் கிடைத்துள்ளது, நடப்பதற்கு கால்களும், எழுதுவதற்கும் தேவையானவற்றை செய்வதற்கு கைகளும் கிடைத்துள்ளன. ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் எவ்வளவு கிடைத்துள்ளது! எங்களுக்கு கிடைத்ததை மறந்து இல்லாதவற்றிற்காக வருந்துகின்றோம். இதனால் எம்மைப்பற்றி நாமே வெட்கப்பட வேண்டும்.

எமக்கு என்ன தேவையென்பதை நாம் எழுத்துருவில் வைத்திருக்க வேண்டும். பத்துவீதத்திற்குக் குறைவான கனேடிய மக்களே தமக்குத் தேவையானவற்றை எழுதி வைத்துள்ளார்கள். இதனாலேயே பலர் தோல்வி அடைந்தவர்கள் ஆகின்றார்கள்.

எங்கு செல்வது என்பது தெரியாமல் புறப்பட்ட ஊர்தி செல்லவேண்டிய இடத்தை சென்றடையாது. கடலில் மிதக்கும் காய்ந்த மரக்கட்டைகள் அலையுடன் சேர்ந்து அலைவதனைக் காணலாம். ஒரு திசை இல்லாமல் செல்லும். இவ்வாறே குறிக்கோள் இல்லாத மனத்தின் இயல்பும்.


வாழ்வில் குறிக்கோள் முக்கியம். அத்துடன் அது எழுத்தில் இருக்க வேண்டும். அதற்குத் தொடர்ச்சியான நினைவூட்டலும் தேவை. அப்போதுதான் உறங்கு மனநிலை தொழில்புரியத் தொடங்கும். இரும்பைக் காந்தம் எவ்வாறு ஈர்க்கின்றதோ அவ்வாறே எமது குறிக்கோள்கள் ஆழ்மனத்தினால் ஈர்க்கப்படும். இதுவே எமது மனதின் அளப்பெரிய சக்தி

**'தோல்வியின் முதல்படி திட்டமிடாத வாழ்க்கை'.**

திட்டமிடாத வாழ்க்கை வாழ்பவர்கள் அதிகூடிய செலவாழிகள், பொழுதை வீணடிப்பவர்கள், அதீத தொலைக்காட்சி, சினிமா பார்ப்பவர்களாக இருப்பார்கள். அவர்கள் தேவையற்ற வாக்குவாதங்களைச் செய்வார்கள். அத்துடன் குறிப்பிட்ட நேரத்தில் தொடங்கி குறிப்பிட்ட நேரத்தில் முடிக்க வேண்டும் என்ற நேரக் கட்டுப்பாடு அற்றவர்களாகவும் இருப்பார்கள்.

வாழ்க்கையில் சில தவறுகளை திரும்பத்திரும்ப செய்து கொண்டே இருக்கின்றோம். இவ்வாறான தவறுகளை கண்டுபிடிப்பது மட்டுமல்லாமல், மீண்டும் அவை நேராமல் தடுக்கும் ஆற்றலை உருவாக்குதல் அவசியம்.

பொதுவாக எம்மைத்தவிர மற்றையவர்களையே நாம் குற்றம் சுமத்தி வாழ்கின்றோம். அம்மா, அப்பா, பாட்டன், பாட்டி, ஆசிரியர், சக மாணவர்கள், முதலாளி, தொழிலாளி, சகதொழிலாளிகளை குறைகூறுகின்றோம். எமது சுகயீனத்திற்கு உணவுகளையும், சுகாதார முறைகளையும் தவறு காண்கின்றோம். எனவே எமது வாழ்க்கையை எமது கையில் எடுப்பதுடன் மற்றவர்களை குற்றம் சொல்வதனை முதலில் தவிர்ப்பதே வெற்றிக்குரிய மனதின் இயல்பாகும்.



மற்றவர்களில் குற்றம் காண்பதை நிறுத்துவதுடன் மிகவும் முக்கியமாக எம்மை நாமே தாழ்த்திக் கொள்ளக்கூடாது. நம்மை நாமே குற்றம் சொல்வது எமக்கு எம்மீதுள்ள நம்பிக்கையை குறைத்து விடும். எம்மை நாம் நம்ப வேண்டும். எம்மில் நம்பிக்கை வந்தால் மட்டுமே எமக்கு இலகுவான பரீட்சியமான கூடாத பழக்கத்தை விட்டு வெளியே வரமுடியும்.

தொடர்ச்சியான, உறுதியான செயற்பாடே வெற்றியைத் தேடித்தரும். வெற்றிக்கு குறுகியபாதை கிடையாது என்பதனை மனதில் கொள்ள வேண்டும். சிறிய சிறிய விடயங்களை கவனமாக புரிந்து கொள்ள வேண்டும். சின்னச்சின்ன விடயங்கள் பெரிய வெற்றியைத் தருகின்றன. "ஒரு செயலை கைவிடாமல் செய்து முடிப்பவர்கள் வெற்றி பெற்றவர்கள், இடையில் கைவிடுபவர்கள் வெற்றி பெறமாட்டார்கள்'.

பெரிய பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் சேர் வின்ஸ்ரன் சேர்ச்சில் இதனையே 'Never Give up, never, never, never give up' என்று தனது முக்கிய உரை ஒன்றில் கூறியதனை அறியக்கூடியதாக உள்ளது.

வெற்றியும் சாதனையும் எமது வாழ்விற்கு முக்கியம். அதனை அடையும் நீண்ட பாதையில் எமது அன்பு, அமைதி, ஆனந்தம், இளமை, ஆரோக்கியம், நிம்மதி, குடும்பம், மனச்சாட்சி, பண்பு இவற்றை இழந்தால் திரும்பப் பெறமுடியாது. எமது வெற்றியை உலகம் கொண்டாடலாம். ஆனால் எமக்குள் ஒரு வெற்றிடம் உருவாகிவிடும். அதனை நிரப்பவே முடியாது. அது எப்பொழுதும் இருந்து கொண்டே இருக்கும்.

எமது வாழ்க்கையின் நோக்கம்: வாழ்வின் முன்னேற்றம், அனுபவத்தின் முதிர்ச்சி மற்றும் நினைத்ததை அடைதல்.

வாழ்க்கையிலும் பல இன்னல்களும் இடர்பாடுகளும் நிச்சயம் இருந்திருக்கும். அவை நேற்றையவை. அவை இறந்தகாலம். இன்று நாம் வாழ்கின்றோம். எதுவும் தானே நிகழ்வதில்லை. எந்த வெற்றியும் முன்னேற்றமும் கடுமையான உழைப்பினாலும் தியாகத்தினாலும் போராட்டத்தினாலும்தான் நிகழ்ந்திருக்கின்றன. தோல்விகளைப் படிகளாக்கி வெற்றிப்பாதையில் செல்வோம். எம்மாலும் முடியும்.

**இன்றும் நமதே. நாளையும் நமதே.**

**வெற்றி நமதே!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HOMELIFE
HIGHER STANDARDS

# A TIMELY MESSAGE TO MOVE ON...

வதிவிடம் ஒன்றை வாடகைக்கு பெறுவது வெறும் உடமை (Possession) மாத்திரம் தருவது. ஆனால் அதனை வாங்குவது உடமை (Possession) சொந்தம் (Ownership) என்பனவற்றுடன் நீண்டகால முதலிட்டு ஈவும் (Capital Gain) தரவல்லது.



- **Mortgage Arrangement**
- **Tax Consulting**
- **Financial Planning**

உங்கள் விருப்பத்திற்க்கும், வசதிக்கும்
ஏற்றமுறையில் வீடு வாங்க, விற்க ........



**KETHEES SEEVARATNAM, CGA**
Sales Representative
**416 275-5788**

Homelife GTA Realty Inc.
1711 McCown Rd, # 206,
Scarborough, ON. M1S 3Y3

**Tel: 416 321-6969**
**Fax: 416 321-6963**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Pleasant Service with
LOWEST COMMISSION
Starting from 1%

# BUYING OR SELLING?
## Meet a Realty Expert!

Why rent when you can invest
in real estate and save for your better future.

## Call me for a change
***I will save your $$$$ and earn your trust***



**Nila Ravindran**
**Sales Representative**
***For All Your Real Estate & Mortgage Needs***

**Re/Max Crossroads Realty Inc, Brokerage**
1055 McNicoll Avenue
Toronto,Ontario
M1W 3W6

**Office:** **416-491-4002**
**Fax:** **416-756-1267**
**Email:** **nila@topremax.ca**
**Web:** **www.callnila.com**

RE/MAX®

Design: J11.ca - 1-877-721-8910

# 647-836-6502

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SAFETY TRUCK
## TRAINING SCHOOL LTD.
## TRUCKING & TRAINING
## CLASS A,D & Z




**4 WILKINSON ROAD, 2ND FLOOR,
BRAMPTON, ON. L6T 4M3**

*on the road to Great Success*

**Contact : Yogan 905-793-9546**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COMMITED TO EXCEPTIONAL SERVICE



MASTERS Hall of Fame

1999-2009



Office **416-298-8200**

Cell **416-725-7284**

## Ravi Kana
**Broker**

***Ravi has built a reputation on honesty and outstanding service.***
***There is a difference between Realtors.***
***For more information about Ravi's real estate services call Ravi today.***

## GET HONEST ANSWERS TO YOUR REAL ESTATE QUESTIONS

Century 21 Percy Fulton Ltd.

**வீடு வாங்க, விற்க அழையுங்கள்!**

AIR MILES Travel and More

# Ravi Kana
Broker

The Right Choice for Success!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Niru BRAND®

All Natural Ingredients
Hand Picked Quality
Home Made Taste
Finger Licking Goodness




Meets Canadian Food Manufacturing Standards

Niru Enterprise Inc. (www.niru.com)
40 Minuk Acres, Scarborough, ON,
M1E 4Y6, Canada.
Tel: 416 750 1976 Fax: 416 750 8779
Email: info@niru.com

Niru Europe Ltd. (www.niru.co.uk)
Unit 11, Mitcham Indust . Estate
85 Streatham Rd, CR4 2AP, UK.
Tel: 0208 640 8228 Fax: 0208 640 8423
Email: admin@niru.co.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SINDI FINANCIAL

## துரித பணமாற்று சேவை

ஒரு தசாப்த கால சிறப்பு சேவை

நம்பிக்கை உத்தரவாதம்

கடுகதி சேவை

- ☑ **Major Currency Exchange Europe & Asia**
- ☑ **Faster Service**





**2425 Eglinton Ave. East, Unit #7**
**Shankar & Co. Plaza**
**(Kennedy & Eglinton)**
**Scarborough, Ontario**





**Tel: (416) 288-0277** **Fax: (416) 297-9111**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# VKT Financial.com

**TRUST - YOUR GOAL IS OUR GOAL**

**VKT Wealth Management Group Inc.**
**5780 Sheppard Ave. E.**
**Toronto, On M1B 5J6**

**Some of VKT Special Programs offered to our members:**

- CPI – Corporate Property Investment (12% & up)
- Recession Proof Investment Program
- Auto Purchase program (Luxury)
- Dept Free Education Program
- Loan Line Program (Similar to Line of Credit)
- Home Equity Advantage Plan
- Sharia Compliant [Halal] Financial Solution
- 2 Year Guaranteed Lease to Own Plan
- Custom Design Home Program



**CONTACT US TODAY!**

Phone: 416 293 [VKT0] 8580
Fax: 416 293 8501
Website: www.vktfinancial.com
E-mail:info@vktfinancial.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Kokuvil Hindu College Old Students' Association Canada (2008-2009)



**Seated (left to right):** Mrs. S. Supramaniam, Mr. M. Jeganmohan, Mr. P. Ravichandran, Mr. C. S. Shanmuganathan, Mr. V. Jeganathan, Mrs.Jeya Pararajasingham

**Standing (left to right):** Mr. S. Kuganendran, Mr. R. Logan, Mr. P. Vivek, Mr. B. Yogeswaran, Mr. S. Rasanayagam, Mr. A. Premananthan, Mr. R. Jeyanthiran, Mr. S. Nimalendran and Mr. P. Niranjan (absent)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Kokuvil Hindu College Old Students' Association Canada (2009-2010)



**Seated (left to right):** Mrs. Jeyaranee Poopalasingam, Mrs. S. Supramaniam, Mr. S. Kuganendran, Mr. C.S. Shanmuganathan, Mr. P. Ravichandran, Mr. N. Mahendran, Mrs. Jeya Pararajasingham

**Standing (left to right):** Mr. M. Jeganmohan, Mr. S. Nimalendran, Mr. A. Premananthan, Mr. S. Rasanayagam, Mr. S. Sampathkumar, Mr. N. Balakumar, Mr. T. Rabimohan, Mr. R. Uthayakumar(absent)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவிற்கு வருகை தந்திருந்த முன்னைநாள் ஆசிரியர்கள்




முன்னைநாள் அதிபர் திரு. இ. மகேந்திரன்



திரு. திருமதி. கந்தப்பிள்ளை



திரு. V. கனேசலிங்கம்



முன்னைநாள் அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம்



திரு. திருமதி. குணபாலசிங்கம்



திரு. சந்திரமௌலீசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடாவிற்கு வருகை தந்த பிரமுகர்கள்





வைத்தியக்கலாநிதி திரு. திருமதி. இராஜசந்திரன்




திரு. திருமதி. மாணிக்கம் சுப்பிரமணியம்

## எமது கல்லூரியின் தற்போதய சில தோற்றங்கள்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## T.S.S.A (J.S.S.A) தமிழ் பாடசாலைகள் விளையாட்டுச்சங்கப்போட்டிகளில் பங்குபற்றிய சில குழுவினர் :



March Past Winners □1998, 1999, 2000



March Past Winners □2006, 2007, 2008





March Past Winners □2006, 2007, 2008



Soccer Champions 2008



Soccer Champions 2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2009-2010 ஆண்டுக்கான கல்விசார் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள்


ஜனனீ. மு


கீர்த்தனா. மு


பிரவிந். த


குகானந். சு


அருணன். சு


வினீஷா. கே


ஜயசன். கே


பிறேமினி. ஜீ


ஹர்சினி. ஜீ


சஜேன். சு


பிருந்தா. ஜெ


பிரவீன். சி


அர்ச்சனா. லோ


அஸ்வின். லோ


ஆரணியா. ஆ


ஆரபி. ஆ


ஆதிரை. ஆ


அர்ஜுன். பு


சேரன். ச


பிரியாந். ந


ஜனான். நி


கனீஷா. பா


ஆதீஷ்யா. ச


ஆதீஸ்கர். ச


ஆதிகாஷ். ச


கிருசாணி. பு


பிரவீனா. பு


சாமந்தி. சௌ


சௌமியா. ஜெ


அபிஷேகா. றி


லாவண்யா. யு


சாகித்தியா. யு


பவித்திரா. ச


வித்தகன். பு


தனீஸ். த


சந்தியா. சி


சரணியா. சி


தக்ஷா. கு


ஜெனார்த்த. கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




2008 - பிரதமவிருந்தினர் திரு. செ. இரத்தினப்பிரகாசம்



2009 - பிரதமவிருந்தினர் திரு. திருமதி. தெய்வேந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையத்தில் இமையம்

# A9NEWSRADIO

**WIFI RADIO AVAILABLE WORLDWIDE**





துல்லியமான **HD** ஒலிநயம்!
இடையூறில்லாத ஒலிபரப்பு!
**FM** வானொலிகளைவிட அதிக ஒலித்தெளிவு!
24000 ற்கும் அதிகமான பிற வானொலிச்சேவைகள்!
உங்களுக்கு பிடித்த இதர தமிழ் வானொலித் தெரிவுகள்!
High Speed Internet + Wireless Router மூலம்
துல்லியமாக கேட்டு மகிழ்ந்திடுங்கள்!

**நிகழ்ச்சித்தயாரிப்பாளர்கள்**
**அறிவிப்பாளர்கள் தேவை**

- HD Quality WIFI Radio
- Interference Free
- Better than FM Radios
- Over 24000 Online Radios
- 20 Customizable Tamil Radios
- Simply Connect with a Wireless Router

**$150.00**

**MORE INFO AT 647 281 9084**

**www.a9radio.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Buy or sell your home with me and get ...

a free market evaluation of your property
Call before you list, See the Difference!!!!

**Homelife/Future**
Reality Inc., Brokerage
Bus: 905.201.9977
Fax: 905-201-9229
ratnam_2@hotmail.com
205-7 Eastvale Dr.
Markham, ON L3S 4N8

- Weekly Advertising
- Special Marketing in Place
- Public Open House
- Professional Home Staging
- Flexible Commission





**Cell: 416.897.8844**

**Sivakumar Ratnam**
Sales Representative
Email: ratnam_2@hotmail.com

* Independently Owned and Operated

நூறாண்டுகள் அளப்பெரும் கல்வி களஞ்சியமாக விளங்கி சாதனை படைத்த எமது கல்லூரி இன்னும் பல பல நூறாண்டுகள் மேலும் பெயர் விளங்கிப் பிரகாசிக்க வாழ்த்துகின்றோம்!




SELVA
KIRUBA

"எங்கள் வாழ்வும், எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு"

* திருமண அழைப்பிதழ்கள்
* விழா மலர்கள்
* சஞ்சிகைகள்
* நினைவு மலர்கள்
* வாழ்த்து மடல்கள்
* துண்டுப் பிரசுரங்கள்
* தன்னறிமுக அட்டைகள்
* பற்றுச் சீட்டுக்கள்

மற்றும் அனைத்து தமிழ், ஆங்கில அச்சு வடிவமைப்பு, அச்சமைப்பு வேலைகளை அழகுற அமைத்துக்கொள்ளலாம்.

அழையுங்கள்:
செல்வா கிருபா

**561 SEWELLS ROAD.**
**SCARBOROUGH, ONT.**
**(MORNINGSIDE & SEWELLS)**

Tel.: (416) 724-8315
Cell: (416) 816-9054
Fax: (416) 724-8553
Email: selvagraphics@hotmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VIVEKA
*Printers*

We would like to congratulate
our school Kokuvil Hindu College
on its 100 year anniversary,
and the KHCOSA on our
16th Makudam Program

1911 Kennedy Road, Suite 100
Toronto, Ontario, M1P 2L9
Tel: 416.80.PRINT (77468)
Fax: 416.335.6468
E-Mail: info@viveka.com
Web: www.viveka.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HomeLife GTA

## Realty Inc., Brokerage*

Independently owned & operated

"கனவு உங்களுடையது
பொறுப்பு எங்களுடையது"

## ஆதனம்

- வாங்க
- விற்க
- முதலிட
- ஆலோசனை களைப் பெற
- ஆதன முகவராக இணைந்து தொழில்புரிய

அழையுங்கள்

Raja Mahendran
416.315.9397
raja@mahendran.ca
www.homelifegtareality.com

**Main Office**
1711 McCowan Rd. #206,
Toronto, ON M1S 2Y3
Tel.: 416.321.6969

**Branch Office**
145 Traders Blvd # 29,
Mississauga, ON L4Z 3L3
Tel.: 905.712.2666



கனடாவின் மூத்த தமிழ் இதழ்
20 ஆவது ஆண்டில்

# விளம்பரம்™

VLAMBARAM™

1ஆம், 15ஆம் திகதிகளில் **மாதம் இருமுறை**
இலவசமாக வெளிவருகின்றது

- செய்திகள்
- ஆக்கங்கள்
- தகவல்கள்
- தொழில்நுட்பம்
- விஞ்ஞானம்
- ஆன்மீகம்
- ஆரோக்கியம்
- வியாபாரம்
- விளையாட்டு
- தமிழ் சினிமா
- உலகசினிமா
- இலக்கியம்
- கதை
- கவிதை
- கட்டுரை
- பயணங்கள்
- நகைச்சுவை

மற்றும் பற்பல

First South Asian Indoor Mall In North America

Open 7 days




All are under one roof

5215 FINCH AVE. E., #201,
Toronto, ON M1S 0C2, Canada
www.gtasquare.com

அலுவலகம்

GTA SQUARE
5215 FINCH AVE. E., #201,
Toronto, ON M1S 0C2, Canada
Tel: 416-282-8059
Fax: 416-282-4978

e-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையின் கைவண்ணத்தில்
நகரத்தின் மத்தியில் நல்லதோர் பூக்கடை

# A1 TOP QUALITY FLORIST A1

## ரொப் குவாலிற்றிப் பூக்கடை

அதி உயர் மலர் களஞ்சியம்



ரொரன்ரோவில் முதல் முதலாக ஈழத்தமிழ் மகனின் 30 வருட அனுபவத்தில் உங்கள் (இந்து, கிறீஸ்தவ) மங்களகரமான திருமண பூப்புனித நீராட்டு விழாவுக்கான மாலை, பூ மணவறை, வட்ட மணவறை, மணவறை சரம், சடைநாகம் என்பவற்றைகுறைந்த விலையில் தரமாக பெற்றிட நாடுங்கள்

PILLAI

**Tel: 416-269-5522 Fax: 416-269-9784 Cell:416-989-0207**

**2871 Lawrence Ave. E. Scarborough, On, M1P 2S8**

Between McCowan & Brimley




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுப்பதிவு

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கனடா), 1994ம் ஆண்டு சித்திரை மாதம் இருபத்திமூன்றாம் திகதி (23-04-1994) அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

சங்கத்தின் உதயத்திற்கு காரணமாயிருந்த, கருவாயிருந்த நிகழ்ச்சியும் - செயற்பாடுகளும் மிகவும் முக்கியமானவை. 1993ம் ஆண்டு மார்கழி மாதம் நடைபெற்ற இராப்போசனவிருந்தில் கலந்து கொண்ட கல்லூரியின் பழைய மாணவர்களான திருவாளர்கள் N. மகேந்திரன், V.இராஜகுலேந்திரன், C.S. சண்முகநாதன், S.அரியதாஸ், R..பரராஜசிங்கம் ஆகியோர் ஒன்றாக உணவு அருந்திக்கொண்டிருந்தவேளை "1983ம் ஆண்டிலிருந்து எமது கல்லூரி பழையமாணவர்கள் புலம்பெயர்ந்து கனடாவில் குடியேறியுள்ளனர். ஆனால் இன்று வரை எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் ஏன் உருவாக்கப்படவில்லை?" என N. மகேந்திரன் நண்பர்கள் மத்தியில் கேள்வியெழுப்பினார். அவருடன் இருந்த நண்பர்களும் அவரது கேள்விக்கு செவிசாய்த்து எமது கல்லூரித்தாய்க்கு சேவை செய்வதற்கு கனடாவில் பழைய மாணவர் சங்கம் அமைப்பது என திடசங்கற்பம் கொண்டனர். அந்த இராப்போசனவிருந்தில் கலந்து கொண்டவர்கள் அனைவரிடமும் முகவரியும், தொலைபேசி இலக்கமும் சேகரிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து நண்பர்கள் ஐவரும் பழைய மாணவர்களது விபரங்களை சேகரிக்க ஆரம்பித்தனர். இவர்கள் ஐவரும் பழைய மாணவர் சங்கத்தின் (கனடா) ஸ்தாபகர்களாக கணிக்கப்படுகின்றனர். இந்தப்பணி ஆரம்பித்தகாலத்தில் 1993ம் ஆண்டு திருமதி.சு.சுப்பிரமணியம், திரு.S.நாகலிங்கம் ஆகியோர் கனடாவுக்கு புலம்பெயர்ந்து வந்தனர். அவர்களின் வரவும், தொடர்பும் இந்த எண்ணத்தை வலுப்பெறச்செய்தது. திரு.S.நாகலிங்கம் அவர்கள் நகல்யாப்பினைத் தயாரிக்கும் பணியில் முழுமூச்சுடன் ஈடுபட்டார். சங்கத்தின் இலட்சினையை வடிவமைத்தவரும் அவரே. இவர் எமது கல்லூரியின் சிரேஷ்ட பழையமாணவரும், தாயகத்தில் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராகவும் இருந்ததுடன் தொடர்ந்து பெருஞ்சேவை செய்து வருபவர். 1994ம் ஆண்டு சித்திரை மாதம் 23ம் திகதி Eglinton-Midland சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள அபிராமி உணவகத்தின் கீழ்த்தளத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குரார்ப்பணக்கூட்டம் நடைபெறுமென ஈழநாடு பத்திரிகையில் பழையமாணவர்கள் சார்பில் திரு. N. மகேந்திரன் அவர்கள் அறிவித்தல் கொடுத்திருந்தார்.

1994ம் ஆண்டு சித்திரை மாதம் 23ம் திகதி அங்குரார்ப்பணக்கூட்டம் ஆரம்பமாகியது. பெருமளவில் பழைய மாணவர்கள் சமூகமளித்திருந்தனர். முதலாவது நிர்வாகசபைத்தெரிவு இடம்பெற்ற பொழுது திருமதி. சுகிர்தலக்ஷ்மி .சுப்பிரமணியம் தற்காலிகத்தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். புகழ்பூத்த பழைய மாணவியும், எமது கல்லூரியில் நீண்டகாலம் ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் சேவையாற்றிய அவர் ஏகமனதாக தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டார். பிரதி தலைவராக திரு. R. அரசரத்தினம் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக திரு. V. இராஜகுலேந்திரன், பிரதி செயலாளராக திரு. M. இராஜா மகேந்திரன், பொருளாராக திரு. Y. தவலிங்கம், உப-பொருளாராக திரு. N. மகேந்திரன், நிர்வாகசபை உறுப்பினர்களாக திருமதி, T. இளையதம்பி, திருமதி. ஜெயா பரராஜசிங்கம், திருமதி. ஜிவா .தெய்வேந்திரன், திருமதி. நகுலா இராஜா, திரு. S. கேதீஸ்வரன், திரு. K. T. M. விஜயகுமார், திரு. M. உமாகரன், திரு. S. நாகலிங்கம், திருமதி. நாகேஸ்வரி துரைராஜசிங்கம் ஆகியோரும் கணக்காய்வாளராக திரு. V. கந்தையாவும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர்.

அத்துடன் நகல்யாப்பு பொதுச்சபையில் சமர்ப்பிக்கப்பட்டு சபையில் கலந்தாலோசிக்கப்பட்டபின் யாப்பும், இலச்சனையும் ஏற்கப்பட்டது. யாப்புவழியில் எமது சங்கம் தொடர்ந்து இயங்கி வருகின்றது. எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் எந்த நிகழ்வுகளாக இருப்பினும் கனடிய தேசிய கீதம் இசைத்தலுடன் கனடிய தேசியக்கொடியும், கல்லூரி கீதத்துடன் பழைய மாணவர் சங்கத்தின் கொடியும் ஏற்றப்பட்டு, அகவணக்கத்துடனும் ஆரம்பிக்கப்படும்.

**பழையமாணவர் சங்கத்தின் செயற்பாடுகள் :**

கொக்குவில் இந்துக்கல்லூரியிலும், கனடாவிலும் இருக்கும் எமது சமூகத்தின் கல்வி, கலாச்சாரம், சமயம், பொருளாதாரம், சமூகவியல் ஆகியவற்றின் வளர்ச்சிக்காகப் பணிசெய்வது எமது சங்கத்தின் முக்கிய குறிக்கோள்களில் முதன்மையானதாக இருக்கின்றது. எமது பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இந்த உன்னத குறிக்கோளை அடைவதற்கான இலக்கில் திறம்பட செயற்பட்டு வருகின்றோம். வருடாவருடம் எமது செயற்பாடுகள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. எம்முடன் புதிய உறுப்பினர்கள் தொடர்ந்து இணைந்தே வருகின்றார்கள். எமது சங்கத்தின் தரத்தினைப்பாதுகாத்துப் பலப்படுத்துவதில் அவர்களது செயற்பாடுகள் சிறப்பாகவே இருக்கின்றன. எமது சங்கத்தின் உறுப்பினர்களது ஒத்துழைப்பும், பங்குகொள்ளலும் தன்னிச்சையானவை. கல்லூரியின் மீது கொண்டுள்ள பெரும்பாசத்தினாலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் தாமாகவே சங்கவளர்ச்சிக்கு உறுதுணையாகவும், உற்சாகமாகவும் உழைத்து வருகின்றார்கள்.

வருடாந்த வெளிக்கள ஒன்றுகூடல், மகுடம் கலை நிகழ்வு, மாணவர்களுக்கான கல்விசார் போட்டிப்பரீட்சைகள், விளையாட்டுப்போட்டிகளில் பங்குகொள்ளுதல், முக்கியமான கலை நிகழ்வுகளில் பங்குபற்றுதல், தாயகத்திலிருந்தும் வேறு நாடுகளிலிருந்தும், கனடாவிற்கு வருகை தரும் கல்லூரியின் ஆசிரியர்கள், பழைய மாணவர்களை அழைத்து உபசரித்தல் போன்றவை எமது சங்கத்தின் சில செயற்பாடுகளாகும். இவற்றினைவிட காலத்திற்கு காலம் தாயகத்தில் அகதிகளாகி அல்லல்படும், அவதியுறும் எமது மக்களுக்கு வேண்டிய பங்களிப்புக்களை தொடர்ந்து வழங்குவதும் எமது முக்கிய கடமையாகக்கொண்டு செயற்பட்டு வருகின்றோம்.

**வருடாந்தப்போட்டிகள் :**

தமிழ்மொழியையும், இந்துசமயத்தையும் எமது சிறார்களுக்கு கற்பிப்பது, அவற்றின் மீது அவர்களுக்கு ஈடுபாடுகொள்ளச்செய்வது எமது சங்கத்தின் முக்கிய குறிக்கோள்களில் குறிப்பிடத்தக்கதாகும். வருடாவருடம் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, பண்ணிசைப்போட்டியென நடாத்துவதன் மூலம் இளையோரிடம் புதிய ஊக்கத்தையும், உற்சாகத்தையும், ஈடுபாட்டையும் உருவாக்கி வருகின்றோம். 1995ம் ஆண்டு முதல் வருடாவருடம் இப்போட்டிகளை நடாத்தி வருகின்றோம். மாணவர்களை வயது அடிப்படையில் வயதுப்பிரிவுகளாக வகுத்து ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியே போட்டிகள் நடாத்தப்படுகின்றன. பண்ணிசை, பேச்சு, கட்டுரை, வாசிப்பு, உறுப்பெழுத்து, சொல்வதெழுதுதல், கணிதம், ஆங்கிலம் எனப்பலவகைப்போட்டிகள் நடாத்தப்படுகின்றன. மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் இப்போட்டிகளில் பங்குபற்றி வருகின்றனர், வருடாவருடம் பங்குபற்றுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. வருடாவருடம் நடைபெற்றுவரும் வெளிக்கள ஒன்றுகூடலில் வெற்றி பெற்றோர்களுக்கும், பங்குபற்றியோருக்கும் பரிசுப்பத்திரங்களும், வெற்றிக்கோப்பைகளும் பிரதம விருந்தினர்களால் வழங்கப்பட்டு வருவது வழமையாகும். இப்போட்டிகளுக்கு நடுவர்களாக பங்குகொள்வோர் எமது கல்லூரியுடன் தொடர்பு இல்லாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். பங்குபற்றிய மாணவர்களின் தரத்தினைப்பற்றி உயர்வாக அவர்கள் மதிப்பீடு செய்வதை நாம் கண்கூடாக காண்கின்றோம்.

**வெளிக்கள ஒன்றுகூடலும் - விளையாட்டுப்போட்டிகளும் :**

1994ம் ஆண்டு எமது சங்கத்தின் முதற்செயற்பாடு **"வெளிக்கள ஒன்று கூடல்"** என்ற அற்புதமான நிகழ்ச்சியாகும். பழைய மாணவர்களும் அவர்களின் வாரிசுகளும் இந்த மகிழ்ச்சியான ஒன்றுகூடலில் மிகுந்த ஆர்வத்துடன் பங்குபற்றினார்கள். சிறுவர்களுக்கான போட்டிகள் மிகுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்பைப்பெற்றன. அதே மாதிரியே இளைஞர்களுக்கான, பெரியோர்களுக்கான போட்டிகளும் நல்வரவேற்பைப்பெற்றன. இந்த வருடாந்த கல்லூரியின் குடும்ப ஒன்றுகூடலானது வருடாவருடம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இந்த ஒரு நாள் நிகழ்வு **"கொக்குவில் இந்துக்கல்லூரியில் ஒரு நாள்"** என்ற இனிய நினைவு மேலோங்கி மகிழ்ச்சி அள்ளித்தருவதைக் காணமுடிகின்றது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக முன்னாள் ஆசிரியர்கள், பழையமாணவர்களாகிய துறைசார்ந்த வல்லுனர்கள் அழைக்கப்பட்டு வருவது குறிப்படத்தக்கதாகும். வெளிக்கள ஒன்றுகூடல் ஆரம்பமாகும் பொழுது கனடிய தேசியக்கொடி, பழைய மாணவர்சங்கக்கொடி ஏற்றப்படுவதுடன் சிவப்பு-வெள்ளை நிறங்களில் அமைந்த உடையணிந்து எமது கல்லூரியின் பழையமாணவர்களின் வாரிசுகள் பிரதமவிருந்தினருக்கு அணிநடை மரியாதை செலுத்தியபின் நிகழ்வுகள் நடைபெறுவது வழமையாகும்.

**கலை நிகழ்வுகள்** :

நடப்பாண்டு நிர்வாகசபையின் முக்கிய நிறைவு நிகழ்வு **"மகுடம் கலை விழா"** வாகும். எமது பெருமதிப்புக்குரிய முன்னாள் அதிபர் அமரர் ஹண்டி பேரின்பநாயகம் அவர்களின் நூறாவது பிறந்த நாள் பங்குனி மாதம் 28ம் திகதி 1999ம் ஆண்டு. எனவே இந்த நூற்றாண்டினை **"திரு. ஹண்டி நூற்றாண்டு"** எனப் போற்றி வாழ்த்தினோம். எமது முதலாவது மகுடம் கலைவிழாவை அதிபர் அவர்களுக்கு சமர்ப்பணம் செய்து வணங்கினோம். அன்று முதல் மகுடம் கலை நிகழ்வு வருடாவருடம் மேலும் மேலும் மெருகுபெற்று சிறப்புற நடைபெற்று வருகின்றது. பல்வகைத்திறன்கள் பெற்ற எமது பழைய மாணவர்கள் பலரும், அவர்களது பிள்ளைகளும் பல்சுவை கலை நிகழ்ச்சிகளை தருவது வழமையாகிவிட்டது. நாடகம், நாட்டியம், இசை என்று பல்வகை நிகழ்ச்சிகள் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. கனடாவிலும், அமெரிக்காவிலும் வாழ்கின்ற எமது முக்கியமான – பிரபலமான பழைய மாணவர்களே இந்த நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக வருகை தந்தவர்களாவர். அவர்களது பங்கேற்பு எமக்கு மேலும் உற்சாகத்தைக்கொடுத்தது. 2000ம் ஆண்டு மகுடம் நிகழ்வின் பொழுது கனடாவில் வாழும் எமது முன்னாள் ஆசிரியப்பெருமக்களை வாழ்த்தி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. மகுடம் நிகழ்ச்சிக்கு எமது போட்டிகளுக்கு நடுவர்களாக பணிபுரிந்தவர்களையும் அழைப்பது வழமையாகும்.

எமது சங்கம் 2004ம் ஆண்டு இளையோர் அமைப்பை ஆரம்பித்து வழிநடத்தி வருகின்றது. அவர்கள் எமது துணையுடன் **"மின் சார இரவு"** என்ற கலை நிகழ்ச்சியை நடாத்தி வருகின்றார்கள். நாம் நடாத்தும் வருடாந்த நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் அவர்கள் முன்னின்று செயற்படுவது குறிப்பிடத்தக்கதுடன் எமது சங்கத்தை வருங்காலத்தில் இயக்குவதும் அவர்களாகவே இருப்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு நிகழ்வுகளிலும் 'மலர்' வெளியிடுவது வழமையாகும். இந்த மலர்களில் வாழ்த்துச்செய்திகள், கட்டுரைகள், எமது பழையமாணவர் சங்கத்தின் செயற்பாடுகள் பற்றிய படங்களும்- குறிப்புக்களும், கல்லூரியின் செயற்பாடுகள் பற்றிய படங்களும்-குறிப்புக்களும், விளம்பரங்களும் முக்கியமாக இடம்பெறுகின்றன.

**தமிழ்பாடசாலைகள் விளையாட்டுச்சங்கப்போட்டிகளில் பங்குகொள்ளல் :**

J.S.S.A என்று அழைக்கப்பட்ட யாழ். - பாடசாலைகள் விளையாட்டுச்சங்கம், T.S.S.A என்று (தமிழ் பாடசாலைகள் விளையாட்டுச்சங்கம்) அழைக்கப்படும் சங்கம் நடாத்தும் வருடாந்த விளையாட்டுப்போட்டிகளில் நாம் தவறாது பங்கு பற்றி வருகின்றோம். துடுப்பாட்டம், உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், அணிநடை ஆகிய போட்டிகளில் மிகுந்த உற்சாகத்துடன் பங்குபற்றுவது எமது வழக்கமாகும். வெற்றிகள் பல பெற்றமையை குறிப்பிடல் வேண்டும். 1998, 1999, 2000ம் ஆண்டு அணிநடையில் ஆண்கள் பிரிவு தொடர்ந்து மூன்று தடவைகள் முதலாவது இடத்தைப்பெற்று கேடயத்தை தனதாக்கிக்கொண்டது. அடுத்து 2006, 2007, 2008ம் ஆண்டு அணிநடைப்போட்டியில் ஆண்கள் பிரிவும், பெண்கள் பிரிவும் தொடர்ந்து முதலாவது இடத்தைப்பெற்று மீண்டும் கேடயத்தை தனதாக்கிக்கொண்டன. 2008ம் ஆண்டு நடைபெற்ற போட்டிகளில் சிறப்பாக விளையாடி T.S.S.A இன் சம்பியனாக கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா வந்தமை எமக்கு பெருமை சேர்க்கின்றது.

**வரவேற்று – உபசரித்தல் :**

எமது புகழ்பூத்த பழைய மாணவர்களாகிய தேவராஜா தம்பதிகளின் செல்வப்புதல்வி திருமதி. சோரூபி இராமகிருஷ்ணனும் அவரது கணவரும் எமது கல்லூரிக்கு தமது கொக்குவில் இல்லத்தை நன்கொடை செய்தது குறிப்பிடத்தக்கது. இராமகிருஷ்ணன் தம்பதிகள் கனடா வந்தபொழுது அவர்களைக்கௌரவிக்கும் முகமாக தேனீர் விருந்து கொடுத்து உபசரித்தோம். எமது முன்னாள் அதிபர்கள் திரு. அ. பஞ்சலிங்கம், திரு. இ. மகேந்திரன், முன்னாள் ஆசிரியர்களான குணபாலசிங்கம் தம்பதிகள், முன்னாள் ஆசிரியர்கள் திருமதி. சரஸ்வதி பாக்கியராஜா, திரு. M. கந்தசாமி, திருமதி. கமலாதேவி சந்திரவர், திரு. K. சந்திரமௌலீசன் ஆகியோர் கனடா வந்த பொழுது தேனீர் விருந்துபசாரம் செய்து கௌரவித்தோம். இங்கிலாந்திலிருந்து கனடா வந்திருந்த பிரித்தானிய பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. இ. இராஜமகேஸ்வரன், பிரித்தானிய பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி P. ஆறுமுகராஜா, தாயகத்திலிருந்து வருகை தந்திருந்த முன்னாள் பிரவுன்ஸ் குறூப்பின் தலைவர் திரு. வல்லிபுரம் தியாகராஜா, இலங்கை மத்திய வங்கியின் அதிகாரி திரு. வீரசிங்கம் புவனேசன் ஆகியோருக்கு தேனீர் விருந்தளித்து கௌரவித்தோம். அத்துடன் பிருத்தானிய பழைய மாணவர் சங்கத்தின் பிரதித்தலைவராக இருந்த திரு. S, கனகசுந்தரம், திரு. தயாபரன் இடைக்காடர், திரு. சிவஞானநாயகன் ஆகியோர் "மகுடம" கலை நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துயர்பகிர்வு :**

இறைபதம் அடைந்த எமது முன்னாள் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்த நாம் தவறுவதில்லை. கனடாவில் இறைபதம் அடைந்தோரின் இறுதிக்கிரியைகளில் பங்குகொள்வதும் அஞ்சலிச்செய்திகளை அனுப்புவதும், மலர்வளையங்கள் வைப்பதும் வழமையாகும். எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த உத்தமர்கள் பலரை நாம் இழந்திருக்கின்றோம். 2004ம் ஆண்டு சித்திரை மாதம் 21ம் திகதி அவுஸ்திரேலியாவில் இறைவனடி சேர்ந்த எமது மதிப்புக்குரிய முன்னாள் அதிபர் C.K. கந்தசாமி அவர்களையும் நினைவு கொண்டது குறிப்பிடத்தக்கது.

**கல்லூரிக்கான எமது சங்கத்தின் நிதி வழங்கல் :**

எமது கல்லூரிக்கு எமது பழைய மாணவர் சங்கம் பல்வேறு வழிகளில் உதவி வருகின்றது. எமது கல்லூரி நிதியுதவி கோரிய போதெல்லாம் நாம் தவறாது நிதி வழங்கியுள்ளோம். மகுடம் கலை நிகழ்வுக்கும், வெளிக்கள ஒன்றுகூடலுக்கும் நுழைவுச்சீட்டுக்கள் விற்பதன் மூலமும், போட்டிகளுக்கு கட்டணம் பெறுவதன் மூலமும் நிதி திரட்டுவது வழமையாகும். பல பழைய மாணவர்கள் பேரார்வத்துடன் நன்கொடை வழங்கும் நற்பணி மிகவும் போற்றுதற்குரியதாகும். இவ்வாறு திரட்டும் நிதிமூலமே நாம் எமது கல்லூரிக்கு உதவி வருகின்றோம்.

1997ம் ஆண்டு எமது சங்கத்தால் புலமைப்பரிசில் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்கு மூவர் கொண்ட குழுவை அமைத்து செயற்பட்டு வருகின்றோம். இத்திட்டத்தின் மூலம் க.பொ.த.ப. உயர்தர வகுப்பில் கல்விகற்கும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு வருடாவருடம் 49 மாணவர்களுக்கு புலமைப்பரிசு வழங்கி வருகின்றோம். கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியம் உருவாக்கப்பட்டு அதன் மூலம் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த நம்பிக்கை நிதியத்திற்கு எமது பழைய மாணவர்கள் பலர் மிகுந்த விருப்பத்துடன் உதவி வருவது பெருமைக்குரியதாகும். எமது கல்லூரி அதிபரால் புலமைப்பரிசுக்குரிய மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு வருகின்றார்கள். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் கற்கைநெறியில் பயிலும் எமது கல்லூரி மாணவியொருவர் கல்லூரி அதிபர் ஊடாக நிதியுதவி கோரப்பட்டது. எமது பழைய மாணவர்கள் அவர் கற்கைநெறியினைப்பூர்த்தி செய்யும் வரை நிதியுதவி செய்ய தாமாகவே முன்வந்து உதவியது குறிப்பிடத்தக்கதாகும். எமது கல்லூரிக்கு பல நூல்கள் கொண்ட பொதியொன்றை அனுப்பி வைத்திருந்தோம். மேலும் எமது சங்கம் ஆங்கிலக்கல்வியை விருத்தி செய்வதற்காக English Language Room அமைக்க எமது கல்லூரி அதிபரைகேட்டுக்கொண்டதற்கிணங்க ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடைபெறுவதாக அறிகின்றோம். 2005ம் ஆண்டு பிரித்தானிய பழைய மாணவர் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க C.K. கந்தசாமி படிப்பகத்திற்கு **20** கணினிகளும், அதற்குரிய தளபாடங்களும் எமது சங்கத்தால் கணினி ஆய்வுகூடத்திற்கு அன்பளிப்பு செய்யப்பட்டது. சுமார் **370** மாணவர்கள் **11** ஆசிரியர்கள் மூலம் அடிப்படை கல்வியைப் பெற்றுக்கொண்டிருக்கின்றனர். எமது சங்கத்தின் அன்பளிப்புக்களுக்கு எமது கல்லூரியின் அதிபர்கள் பாராட்டியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லூரிக்கு வழங்கப்பட்ட நிதி விபரங்கள் :

| | | | |
|---|---|---|---|
| 1994 – 1995 | கல்லூரிக்கு வழங்கிய வைப்புநிதி – விளையாட்டுத்துறை (விளையாட்டுக்கழகமும், பழையமாணவர்சங்கமும் இணைந்து வழங்கியது) | | $5000.00 |
| 1997 – 1998 | நன்கொடை (காணி வாங்குவதற்கு) | | $5000.00 |
| 1999 – 2000 | நன்கொடை (புலமைப்பரிசுகள்) | | $480.00 |
| 2000 – 2001 | நன்கொடை (புலமைப்பரிசுகள்) | | $810.00 |
| 2001 – 2002 | நன்கொடை (புலமைப்பரிசுகள்) | | $880.00 |
| 2002 – 2003 | நன்கொடை (புலமைப்பரிசுகள்) | | $2000.00 |
| 2002 – 2003 | நம்பிக்கை நிதிய வைப்பு - புலமைப்பரிசு | | $15000.00 |
| 2002 – 2003 | நன்கொடை (காணி வாங்குவதற்கு) | | $21568.00 |
| 2003 – 2004 | நம்பிக்கை நிதிய வைப்பு – புலமைப்பரிசு | | $7150.00 |
| 2004 – 2005 | நூற்றாண்டுவிழா அலுவலகச்செலவு | | $655.00 |
| 2004 – 2005 | கணினிகள் பராமரிப்புச்செலவுகள் | | $900.00 |
| 2007 – 2008 | கணினி, தளபாடங்கள் கொள்வனவுச்செலவு | | $15000.00 |
| 2007 – 2008 | ஆங்கிலமொழி வகுப்பு உபகரணங்கள் கொள்வனவுக்காக அனுப்பியது | | $900.00 |
| 2007 – 2008 | நம்பிக்கை நிதிய வைப்பு - 6ம் வகுப்பு புலமைப்பரிசில்கள் (1ம் ஆண்டு) | | $2600.00 |
| 2007 – 2008 | ஹண்டி பேரின்பநாயகம் கட்டிட திருத்த வேலைக்காக அனுப்பியது | | $2000.00 |
| 2008 – 2009 | மைதானத்திருத்த வேலைச்செலவுகள் | | $3540.00 |
| 2008 – 2009 | நம்பிக்கை நிதிய வைப்பு - 6ம் வகுப்பு புலமைப்பரிசுகள் (2ம் ஆண்டு) | | $1200.00 |
| 2008 – 2009 | 2010ம் நூற்றாண்டுவிழா குழு – காணிவாங்குதல் | | $12080.00 |
| 2009 – 2010 | 2010ம் நூற்றாண்டுவிழா குழு – காணிவாங்குதல் | $ 2,830.00 | |
| 7-June-2009 | திருமதி. சரஸ்வதி ஏகாம்பரம் | $ 250.00 | |
| 9-Feb-2010 | திரு. மா. ஜேயமனோகரன் | $10,000.00 | $13,080.00 |
| 2009.'.2010 | நம்பிக்கை நிதிய - 6ம், 7ம் வகுப்பு புலமைப்பரிசில் கொடுப்பனவு | | $ 850.00 |
| | | **மொத்தத் தொகை** | **$110,693.00** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாயக மக்களுக்கான பங்களிப்புகள் :**

எமது தாயகத்தில் சொல்லணாத்துன்பத்தில் இருக்கும் எமது உடன்பிறப்புக்களுக்கு- அகதிகளாய் அல்லல்படும் எமது சகோதரங்களுக்கு – ஏதிலிகளாய் யாருமே உதவாத எமது நண்பர்களுக்கு – எம்மால் முடிந்த உதவிகளைச் செய்யவேண்டியது எமது தலையாய கடமையாகும். தாய்க்கு மகன் செய்யவேண்டிய கடமைபோல் எமது தாயக மக்களிற்கு நாம் செய்ய வேண்டியது எமது கடமை! எமது இனிய பழைய மாணவர்கள் தாராளமாகவே தொடர்ந்து தனிப்பட்ட முறையிலும் பல்வேறு அமைப்புக்கள் ஊடாகச் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

| | |
|---|---|
| 1995 – 1996 நன்கொடை – தமிழர் புனர்வாழ்வுக்கழகம் | $7120.00 |
| 2000 – 2001 நன்கொடை – தமிழர் புனர்வாழ்வுக்கழகம் | $2600.00 |
| 2004 – 2005 நன்கொடை – தமிழர் புனர்வாழ்வுக்கழகம் (சுனாமி) | $2125.00 |
| 2004 – 2005 நன்கொடை – பொங்கு தமிழ் நிகழ்வு | $1000.00 |
| 2008 – 2009 நன்கொடை – அரவணைப்போம் நிகழ்ச்சி | $200.00 |
| 2008 – 2009 நன்கொடை – Care Program | $3750.00 |
| **மொத்த தொகை =>** | **$16,795.00** |

# Youth Events

| • | • Year | • Events | • Venue | • Date |
|---|---|---|---|---|
| • 1 | • 2004 | • Olli Odu Olli Saintha Iravu | • Suave Aham | • May 25th, 2005 |
| • 2 | • 2005 | • Minsara Iravu | • New Rpyal Palace | • March 10th, 2006 |
| • 3 | • 2006 | • Minsara Iravu | • Princess Banquet Hall | • December 30th ,2006 |
| • 4 | • 2007 | • Minsara Iravu | • Princess Banquet Hall | • December 28th,2007 |
| • 5 | • 2008 | • Minsara Iravu | • Cancelled | • |
| • 6 | • 2009 | • Minsara Iravu | • Cancelled | • |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Picnic

| | Year | Chief Guests | Venue | Date |
|---|---|---|---|---|
| 0 | 1994 | No chief Guest | Port Union Adams park | - |
| 2 | 1995 | Mr. & Mrs Arasaratnam | Cederbrae Park, Picnic Area A | August 20th, 1995 |
| 3 | 1996 | Mr. & Mrs N.P. Thevarajah | Adams Park, Picnic Areas B & C | July 27th, 1996 |
| 4 | 1997 | Mr. Mrs. T. Nadarajah | Kidstown (L'Amereaux Park) | July 27th, 1997 |
| 5 | 1998 | Mr. & Mrs. T. Thevakumar | Kidstown (L'Amereaux Park) | July 25th, 1998 |
| 6 | 1999 | Mr. & Mrs. T. Thavarajalingam | Kidstown (L'Amereaux Park) | July 31st, 1999 |
| | | | Cancelled due to Weather | |
| | | | Venue was changed to Neilson Park | September 04th, 1999 |
| 7 | 2000 | Mr. & Mrs. S. Nagalingam | Kidstown (L'Amereaux Park) | July 29th, 2000 |
| 8 | 2001 | Mr. & Mrs. Sritharan | Kidstown (L'Amereaux Park) | July 28th, 2001 |
| 9 | 2002 | Mr. & Mrs. G. Gunaranjan | Kidstown (L'Amereaux Park) | July 27th, 2002 |
| | | Mr. Mrs. Kandiah | | |
| 10 | 2003 | Mr. & Mrs. Ravikana | Kidstown (L'Amereaux Park) | August 02nd, 2003 |
| | | Mr. & Mrs. S. Thayalan | | |
| 11 | 2004 | Mr. & Mrs. M. Shanmuganathan | Kidstown (L'Amereaux Park) | July 24th, 2004 |
| 12 | 2005 | Mr. & Mrs. T. Vivarajah | Kidstown (L'Amereaux Park) | July 23rd, 2005 |
| 13 | 2006 | Mr. R. Mahendran | Kidstown (L'Amereaux Park) | August 02nd, 2006 |
| 14 | 2007 | Mr. & Mrs. T. Sivarupan | Kidstown (L'Amereaux Park) | July 28th, 2007 |
| 15 | 2008 | Mr. S. Ratnapragasam | Kidstown (L'Amereaux Park) | July 19th, 2008 |
| 16 | 2009 | Mr. & Mrs. Theivendram | Kidstown (L'Amereaux Park) | July 18th, 2009 |

# Makudam

| | Year | Chief Guests | Special Guests | Venue | Date |
|---|---|---|---|---|---|
| 1 | 2000 | Dr. & Mrs. S. Nageswaran | Dr. & Mrs. S. Suthahar | Atlanta Hall | February 26th, 2000 |
| | | | Mr. T. Vythilingam | | |
| 2 | 2001 | Dr. & Mrs. M. Suntharalingam | | Ruban Hall | March 31st, 2001 |
| 3 | 2002 | Dr. & Mrs. V. Balachandran | | Leah Posluns Theatre | March 20th, 2002 |
| 4 | 2003 | Dr. & Mrs. P. Balakumar | | Leah Posluns Theatre | April 05th, 2003 |
| 5 | 2004 | Dr. T. Kumarasamy | | Bond International College | March 20th, 2004 |
| 6 | 2005 | Mr. & Mrs. S. Kanagasundaram | | Cederbrae C. I | April 02nd, 2005 |
| | | (Chartered Civil Engineer) | | | |
| 7 | 2006 | Mr. Thaya Idaikkadar | | Agincourt C. I | March 25th, 2006 |
| | | (Concillor, Harrow, UK) | | | |
| 8 | 2007 | Mr & Mrs. Siva Gnananayagan | Mr. R. Mahendran | Winston Churchill C. I | April 07th, 2007 |
| | | (M.Sc, P.Eng, P.M.P, G.S.C) | (Principal Emeritus) | | |
| 9 | 2008 | Dr. & Mrs. P. Arumugarasah | | Winston Churchill C. I | April 05th, 2008 |
| 10 | 2009 | Cancelled | | Winston Churchill C. I | Aprol 04th, 2009 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாகசபை உறுப்பினர்கள்

*1994ம் ஆண்டிலிருந்து 2009ம் ஆண்டு வரை*



நிர்வாகசபை உறுப்பினர்கள் - 1994-1995



நிர்வாகசபை உறுப்பினர்கள் – 1995-1996



நிர்வாகசபை உறுப்பினர்கள் - 1996-1997



நிர்வாகசபை உறுப்பினர்கள் - 1997-1998



நிர்வாகசபை உறுப்பினர்கள் - 1998-1999



நிர்வாகசபை உறுப்பினர்கள் - 1999-2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாகசபை உறுப்பினர்கள்

*1994ம் ஆண்டிலிருந்து 2010ம் ஆண்டு வரை*



நிர்வாகசபை உறுப்பினர்கள் - 2001-2002



நிர்வாகசபை உறுப்பினர்கள் – 2002-2003



நிர்வாகசபை உறுப்பினர்கள் - 2003-2004



நிர்வாகசபை உறுப்பினர்கள் - 2004-2005



நிர்வாகசபை உறுப்பினர்கள் - 2005-2006



நிர்வாகசபை உறுப்பினர்கள் - 2006-2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாகசபை உறுப்பினர்கள்

*1994ம் ஆண்டிலிருந்து 2010ம் ஆண்டு வரை*



நிர்வாகசபை உறுப்பினர்கள் - 2007-2008



நிர்வாகசபை உறுப்பினர்கள் – 2008-2009



நிர்வாகசபை உறுப்பினர்கள் - 2009-2010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Kokuvil Hindu College O.S.A. Canada Committee Members
## From 1994 to 2010

| | 1994 - 1995 | 1995 - 1996 | 1996 - 1997 |
|---|---|---|---|
| President | Mrs. S. Supramaniam | Mrs. S. Supramaniam | Mrs. S. Supramaniam |
| Vice-President | Mr. R. Arasaratnam | Mr. N. Mahendran | Mr. S. Nalliah |
| Secretary | Mr. V. Rajakulendran | Mr. S. Kugathasan | Mr. S. Ketheeswaran |
| Asst.Secretary | Mr. Raja Mahendran | Mr. C. S. Shanmuganathan | Mrs. Jeya Pararajasingam |
| Treasurer | Mr. Y. Thavalingam | Mr. Y. Thavalingam | Mr. N. Balaakumar |
| Asst.Treassure | Mr. N. Mahendran | Mr. N. Balaakumar | Mr. Y. Thavalingam |
| Art & Culture | .... | Mrs. A. Malan | Mrs. K. Srikanthan |
| (Sports) | .... | .... | Mr. R. Jeyanthiran |
| Committee Members: | Mrs. T. Eliathamby | Mr. M. Umaharan | Mr. N. Mahendran |
| | Mrs. Jeya Pararajasingam | Mrs. N. Thurairajasingam | Mrs. M. Kugathas |
| | Mrs. N. Thurairajasingam | Mr. T. Rabimohan | Mr. M. Jeganmohan |
| | Mrs. T. Theivendran | Mr. R. Pararajasingam | Mr. N. Sekar |
| | Mrs. Nagula Rajah | Mr. R. Gunendran | Mr. T. Srirankan |
| | Mr. S. Ketheeswaran | Mr. P. Ganesharatnam | Mr. T. Subaskaran |
| | Mr. M. Vijayakumar | Mr. A. Jeyarajah | Mr. C. S. Shanmuganathan |
| | Mr. M. Umaharan | Mr. S. Ariyathas | |
| | Mr. S. Nagalingam | | |

| | 1997 - 1998 | 1998 - 1999 | 1999 - 2000 |
|---|---|---|---|
| President | Mrs. S. Supramaniam | Mr. V. Rajakulendran | Mr. V. Rajakulendran |
| Vice-President | Mr. S. Nagalingam | Mrs. S. Supramaniam | Mrs. S. Supramaniam |
| Secretary | Mr. C. S. Shanmuganathan | Mr. C. S. Shanmuganathan | Mrs. J. Pararajasingam |
| Asst.Secretary | Mr. K. Tharmalingam | Mrs. J. Pararajasingam | Mr. T. Subaskaran |
| Treasurer | Mr. T. Srirankan | Mr. M. Umaharan | Mr. Y. Thavalingam |
| Asst.Treassure | Mr. V. Rajakulendran | Mr. Y. Thavalingam | Mr. A. Jeyarajah |
| (Art & Culture) | Mrs. J. Poopalasingam | Mrs. N. Thurairajasingam | Mrs. T. Elllathampy |
| (Sports) | Mr. M. Jeganmohan (Sports) | Mr. R. Sivapalan (Sports) | Mr. P. Ravichandran |
| Committee Members: | Mr. R. Logan | Mr. A. Pusparajah | Mr. N. Supramaniam |
| | Mr. N. Supramaniam | Mr. N. Balakumar | Mr. N. Mahendran |
| | Mr. M. Umaharan | Mr.M. Raja Mahendran | Mrs. J. Poopalasingam |
| | Mr. N. Mahendran | Mr. K. Vijayarajah | Mr. R. Shanmugaratnam |
| | Mr. Shan Navaratnam | Mr.N. Mahendran | Mr. S. Sivamohan |
| | Mr. A. Nadarajah | Mrs. P. Selvarajah | Mr. S. Sriskantharajah |
| | Mr. S. Ariyathas | Mrs. J. Poopalasingam | Mr. C. Shanmuganathan |
| Auditor | Mr. V. Kandiah | Mr. K. T. M. Vijayakumar | Mr. S. Kuganendran |

| | 2000 - 2001 | 2001 - 2002 |
|---|---|---|
| President | Mr. V. Rajakulendran | Mr. S. Kugathasan |
| Vice-President | Mrs. S. Supramaniam | Mrs. S. Supramaniam |
| | ..... | Mr. V. Rajakulendran |
| Secretary | Mr. M . Umaharan | Mr. K. T. M. Vijayakumar |
| Asst.Secretary | Mrs. J. Pararajasingam | Mr. T. Sivarupan |
| Treasurer | Mr. C. S. Shanmuganathan | Mrs. Y. Thamotharan |
| Asst.Treassure | Mr. Y. Thavalingam | Mr. C. S. Shanmuganathan |
| Art & Culture | Mrs. Y. Thamotharan | Mrs. S. Kalyani |
| Sports | Mr. N. Mahendran | Mr. S. Kiruparajah |
| Committee Members: | Mr. N. Supramaniam | Mr. Y. Thavalingam |
| | Mr. S. Rajadurai | Mr. S. Rajeswaran |
| | Mr. Shan Navaratnam | Mr. T. Srirankan |
| | Mr. Shan Muthuthamby | Mr. T. Subaskaran |
| | Mrs. J. Poopalasingam | Mr. M. Umaharan |
| | Mr. T. Srirankan | Mr. N. Thurairajasingam |
| | Mr. S. Rasanayagam | |
| Auditor | Mr. V. Kandiah | Mr. V. Kandiah |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Kokuvil Hindu College O.S.A. Canada Committee Members
## From 1994 to 2010

| | 2002-2003 | 2003-2004 | 2004-2005 |
|---|---|---|---|
| President | Mr. S. Kugathasan | Mr. Y. Thavalingam | Mr. S. Kuganendran |
| Vice-President | Mrs. S. Supramaniam | Mrs. S. Supramaniam | Mrs. S. Supramaniam |
| | Mr. V. Rajakulendran | Mrs. N. Thurairajasingam | Mr. Y. Thavalingam |
| Secretary | Mr. K. T. M. Vijayakumar | Mr. K. T. M. Vijayakumar | Mr. K. T. M. Vijayakumar |
| Asst.Secretary | Mrs. S. Navaratnarajah | Mrs. S. Namahal | Mr. T. Srirankan |
| Treasurer | Mr. N. Theivanthiran | Mr. A. Jeyarajah | Mr. A. Jeyarajah |
| Asst.Treassure | Mr. Y. Thavalingam | Mr. V. Rajakulendran | Mr. R . Pararajasingam |
| Art & Culture | Mrs. J. Pararajasingam | Mrs. J. Pararajasingam | Mrs. J. Poopalasingam |
| Sports Secretary | Mr. S. Puvanendran | Mr. S. Puvanendran | Mr. M. Jeganmohan |
| Youth Affairs | Ms. M. Prashanthi | Mr. K. Sunthar | ...... |
| Committee Members: | Mr. N. Balakumar | Mr. M. Umaharan | Mr. S. Ariyathas |
| | Mr. S. Kiruparajah | Mr. C. S. Shanmuganathan | Mr. C. S. Shanmuganathan |
| | Mrs. P. Krishnamoorthy | Mr. M. Jeganmohan | Mr. N. Balakumar |
| | Mr. T. Srirankan | Mr. R. Rajahmohan | Mr. V. Rajakulendran |
| | Mr. T. Rabimohan | Mr. S. Rasanayagam | Mr. K. Yogeswaran |
| | | | Mr. K. Jeyadevan |
| Auditor | Mr. V. Kandiah | Mr. S. Kuganendran | Mr. V. Kandiah |

| | 2005-2006 | 2006-2007 | 2007-2008 |
|---|---|---|---|
| President | Mr. S. Kuganendran | Mr. M. Jeganmohan | Mr. M. Jeganmohan |
| Vice-President | Mrs. S. Supramaniam | Mrs. S.Supramaniam | Mrs. S.Supramaniam |
| | Mr. N. Mahendran | Mr. S. Kuganendran | Mr. V. Rajakulendran |
| Secretary | Mrs. R. Santhila | Mrs. S. Namagal | Mrs. S. Namagal |
| Asst.Secretary | Mr. T. Srirangan | Mr. P. Ravichandran | Mrs. J. Pararajasingam |
| Treasurer | Mrs. K. Ramamanoharry | Mrs. K. Ramamanoharry | Mr. S. Kuganendran |
| Asst.Treassure | Mr. A. Jeyarajah | Mr. K. Thevananthan | Mr. S. Nimalendran |
| Art & Culture | Mrs. J. Poopalasingam | Mrs. J. Poopalasingam | Mr. C. S. Shanmuganathan |
| Sports Secretary | Mr. S. Puvanendran | Mr. S. Kiruparajah | Mr. S. Kirupananthan |
| Youth Affairs | Ms. K. Kuhapriya | Ms. S. Thurka | Mr. A. Premananth |
| Committee Members: | Mr. M. Jeganmohan | Mr. Y. Thavalingam | Mr. P. Ravichandran |
| | Mr.T. Srikantha | Mr. C. S. Shanmuganathan | Mrs. J. Poopalasingam |
| | Mr. Malan Josap | Mr. S. Nimalendran | Mr. T. Srirangan |
| | Mr. S. Karunananthan | Mr. L. Nathunendran | Mr. K. Thevananthan |
| | Mr. K.T.M. Vijayakumar | Mr. R. Uthayakumar | Mr. S. Puvanendran |
| Auaitor | Mr.S. Ketheeswaran | Mr.S. Ketheeswaran | Mr.S. Ketheeswaran |

| | 2008-2009 | 2009-2010 |
|---|---|---|
| President | Mr. C.S. Shanmuganathan | Mr. C.S. Shanmuganathan |
| Vice-President | Mrs. S. Supramaniam | Mrs. S. Supramaniam |
| | Mr. M. Jeganmohan | Mr. N. Mahendran |
| Secretary | Mr. P. Ravichandran | Mr. P. Ravichandran |
| Asst.Secretary | Mrs. J. Pararajasingam | Mrs. J. Pararajasingam |
| Treasurer | Mr. M. V. Jegannathan | Mr. S. Kuganendran |
| Asst.Treasurer | Mr. S. Kuganendran | Mr. T. Rabimohan |
| Art & Culture | Mr. A. Premananthan | Mr. A. Premananthan |
| Sports | Mr. R. Jeyanthiran | Mr. R. Uthayakumar |
| Youth Affairs | Mr. P. Vivek | Mr. M. Jeganmohan |
| Committee | Mr. R. Logan | Mr. S. Sambathkumar |
| | Mr. S. Ninalendran | Mr. S. Ninalendran |
| | Mr. B. Yogeswaran | Mr. N. Balakumar |
| | Mr. P. Niranjan | Mrs. J. Poopalasingam |
| | Mr. S. Rasanayagam | Mr. S. Rasanayagam |
| Auditor | Mr. S. Ketheeswaran | Mr. S. Ketheeswaran |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RBC Insurance


# உங்கள் சுமூகமான எதிர்கால வாழ்க்கைக்கு நிதி மூலதனமும் காப்புறுதியும்

உங்கள் வரவு செலவிற்கேற்ப காப்புறுதி மூலதன (Investment and Insurance) தேவைகளை நம்பிக்கையுடன் பூர்த்தி செய்ய தொடர்பு கொள்ளுங்கள்

- Life Insurance
- Critical Illness
- Mortgage Insurance
- Disability Insurance
- Self Employed Health Insurance
- Travel Insurance
- RSP, RESP, Mutual Funds and
- Segregated Funds From RBC

**Specializes in Top Quality RBC Insurance Only, for Professional Service Please Call**

18வருட RBC வங்கி அனுபவத்துடன் காப்புறுதி நிதி மூலதன தேவைகளை பூர்த்தி செய்ய தொடர்பு கொள்ளுங்கள்



**Jey Ahamparam AICB, PFP**
Insurance Advisor and Investment Specialist
**RBC Insurance**
**Former Personal Banker Royal Bank**
**Scarborough Branches for many years.**
**Tel : 416.301.1733**

*For all your above insurance & Investment needs why not talk to someone who has knowledge & experience in the field over 18 years.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஆரம்பகால ஆசிரிய மணிகள்

ஆசிரியப்பணி ஒரு தெய்வீகப்பணி. ஒரு நல்லாசிரியனை சமூகம் என்றும் மறப்பதில்லை. அந்த வகையில் கொக்குவில் இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழா கொண்டாடும் இந்நல்வேளையில் பாடசாலை ஆரம்பகாலப்பகுதியில் நீண்டகால அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களாகக் கடமையாற்றி மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்ற சிலரின் வரலாற்றை மீள நோக்குவது சிறப்பானதாகும்.

**திரு. ந. செல்லப்பா** - இப்பாடசாலை நிறுவ மிக நாட்டங் கொண்டு செயற்பட்ட பெருமக்களில் ஒருவர். பாடசாலையின் முதல் ஆசிரியர், தலைமை ஆசிரியர் திரு. செல்லையா அவர்களுக்கு உறுதுணையாகவிருந்து பாடசாலையை உருவாக்கி வளர்த்தெடுப்பதில் பெரும்பங்காற்றியவர். ஆசிரியப்பணியோடு பாடசாலை அலுவலகத்தையும் ஒழுங்கமைப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தவர். இரு பாடங்களாகிய கணக்கையும் தமிழை யும் சிறந்தமுறையில் கற்பித்தவர். நல்லொழுக்கத்தை நிலைநாட்டியவர். தமது முன்னோரின் விவசாயத் தொழிலையும் கைவிடாது தனது ஓய்வு நேரத்தில் தொடர்ந்து செய்து அவற்றாலும் பயன் பெற்றவர். இங்கு ஆசிரியராக 33 ஆண்டுகாலம் சேவையாற்றி 1944 இல் ஓய்வு பெற்றார்.

**திருமதி. P. பார்கவி அம்மா** - ஆண் பெண் இருபாலாரும் கல்வி கற்று வரும் இப்பாடசாலையின் முதற்பெண் ஆசிரியையாக 1929 ஆம் ஆண்டில் இணைந்தவர். இவர் கேரள நாட்டைச் சேர்ந்த பெண்மணியாவர். இவரது தாய்மொழி மலை யாளமாக இருந்தபோதும், தமிழைத் தடங்கலின்றிப் பேசும் திறமையுள்ளவர். இவர் முக்கியமாக ஆங்கிலம், சரித்திரம் போன்ற பாடங்களைக் கற்பித்தவர். இப்பாடசாலையின் முதலாவது பல்கலைக்கழக பட்டதாரி ஆசிரியை என்ற பெருமையை பெற்றவர். பெண்பிள்ளைகளின் நடையுடை பாவனைகளையும் அவர்களின் ஒழுங்கு, ஒழுக்கம், கட்டுப்பாடு போன்றவற்றையும் இறுக்கமாக கடைப்பிடித்தவர். அவர்களுக்குக் காவல் துணையாக ஒரு வளர்ப்புத்தாயாகச் செயற்பட்டு சமூகத்தின் நன்மதிப்பை பெற்றவர். இவர் தனது பதவிக்காலமான 28 ஆண்டுகளும் கொக்குவி லிலேயே வாழ்ந்து பணிபுரிந்தவர். 1957 ஆம் ஆண்டு ஓய்வு பெற்று நாடு திரும்பிய இவர் 1975 இல் அமரத்துவம் எய்தினார்.

**திரு. T. சின்னத்தம்பி** - இவர் கொக்குவில் தலையாழியைச் சேர்ந்தவர். இப்பாடசாலையில் 35 ஆண்டுகள் கணித ஆசிரியராகப் பணியாற்றி பிள்ளைகளின் கணிதபாட அறிவு மட்டத்தை கூட்டியவர். மதிநுட்பம் படைத்தவர். பாடசாலையின் பொதுநலவேலைகளில் கரிசனையுடன் ஈடுபட்டு பாடசாலை நிர்வாகத்திடம் பல உதவிகளைப் பெறுவதற்கு ஓர் இணைப்புப் பாலமாக விளங்கியவர். தூய வெண்ணிற ஆடையும் தளர்வறியாச் சுறுசுறுப்பும், முகத்தில் நிலவிடும் புன்சிரிப்பும் இவரை இனங்காட்டும் அடையாளங்கள். இவரின் ஞாபகார்த்தமாக பாட-சாலையின் தெற்கு வளாக உபஅதிபரின் அலுவலகக் கட்டிடம் இவரது பிள்ளைகளால் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

**திரு. மு. சின்னத்தம்பி** - இவர் கொக்குவில் C.C.T.M ஆரம்பப்பாடசாலையிலிருந்து கொக்குவில் இந்து ஆங்கில பாட-சாலைக்கு நியமிக்கப்பட்டவர். இங்கு ஆசிரியராகப் பணியாற்றிய காலப்பகுதியிலேயே தனது சொந்த முயற்சியினால் இலண்டன் பல்கலைக்கழகக் கலைமாமணிப்பட்டம் பெற்று உயர்ந்தவர். பாட-சாலைக்கு அருகாமையில் வாழ்ந்தவர். பிள்ளைகளின் பெற்றோர்களையும் நன்கு அறிந்தவர். இவரின் மோதிரக் கையால் குட்டுப் பெற்ற மாணவர்கள் பலர் இன்றும் இவரை நினைவில் கொள்வர். தமிழ் இலக்கணம், இலக்கியம், பூமி சாஸ்திரம் ஆகிய பாடங்களில் உள்ள பரந்த அறிவை மாணவர்களுக்குச் சிறந்த முறையில் போதித்து தனக்கென ஒரு மாணவ பரம்பரையை உருவாக்கியவர். கல்லூரி சஞ்சிகையின் தமிழ் பகுதிக்குப் பலமுறை பதிப்பாசிரியராகவும் பணிபுரிந்துள்ளார். இவர் 40 ஆண்டுகாலம் ஆசிரியராகக் கடமையாற்றி 1970 ஆம் ஆண்டு பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

**திரு. S.C. தில்லைநாதன்** - இவர் இப்பாடசாலையின் நல்லாசிரியன் எனப்போற்றப்பட்டவர். அமைதியான சுபாவமும், மிக எளிமையான குணமும், யாவருடனும் அன்பாகப் பழகும் பண்பும் கொண்டவர். ஆசிரியர், மாணவர்களிடம் பெருமதிப்புப் பெற்றவர். இப்பாடசாலையில் 1919 ஆம் ஆண்டு ஆசிரியராக இணைந்தவர். அன்று தொட்டு பாடசாலையில் மிகப் பற்றுறுதியோடு பெற்றோர், மாணவர், பழையமாணவர் ஆகிய அனைவருடனும் ஒன்றிணைந்து பாடசாலையின் நல்லெண்ணத்தை வளர்த்தெடுப்பதில் முக்கிய பங்கு வகித்தவர். ஆங்கிலம், இலங்கை அரசியல் அமைப்பு, சரித்திரம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதில் சிறந்த ஆற்றலுடையவர். பாடங்களில் மந்தமான பிள்ளைகளைக் கண்டிக்காது, அவர்களிடம் கூடிய அக்கறை காட்டி, அரவணைத்து வளர்த்தெடுத்தவர். இப்பாடசாலையில் தொடர்ந்து 40 ஆண்டு காலம் தன்னை அர்ப்பணித்து ஆசிரியராகச் சேவையாற்றி 1959ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

**திருமதி. சுகிர்தலக்சுமி சுப்பிரமணியம்** - இவர் இப்பாடசாலையோடு 56 வருட காலத்தொடர்புடையவர். இங்கு மாணவியாகக்கற்று, ஆசிரியராக உயர்ந்து, பாடசாலையின் முதற் பெண் உதவி அதிபராகப் பதவி வகித்தவர். 1942 ஆம் ஆண்டு பெரும் போட்டிக்கு மத்தியில் அதிபர் மு. கார்த்திகேசுவினால் ஆங்கில ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்டவர். பாடசாலையின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் சளைக்காது உழைத்து அதிபர்களின் பாராட்டைப் பெற்றவர். ஆங்கிலம், இலத்தீன், தமிழ் ஆகிய பாடங்களில் ஒரு தலை சிறந்த ஆசிரியர். ஆசிரியப் பணியைத் தொடர்ந்து கொண்டே தனிப்பட்ட முறையில் கற்று இலண்டன் பல்கலைக்கழகக் கலைமாமணிப்பட்டமும் பெற்றவர். திருமதி. பார்கவியம்மாவிற்குப் பின்னர் பெண் பிள்ளைகளின் நல்ஒழுக்கத்திற்கும், நன்நடத்தைக்கும் ஒரு சிறந்த வழிகாட்டியாகச் செயற்பட்டவர். பாடசாலையின் ஒரு புகழ்பூத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியையாகச் சேவையாற்றி 1983 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். இன்று கனடாவில் வாழ்ந்து வரும் இவ் அம்மையார் பழைய மாணவர் சங்கம் கனடாக்கிளையின் முதுகெலும்பாகவிருந்து அதன் செயற்பாடுகளுக்கும் உதவி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

**திரு. A. அமிர்தலிங்கம்** - பாடசாலையுடன் நீண்டகால அனுபமுள்ள ஆசிரியர்களில் இவரும் ஒருவர். சமூகத்தாரையும் ஒன்றிணைத்து செயற்பட்டவர். தனது சக்திவன்மை முழுவதையும் பாடசாலைக்கே அர்ப்பணித்து கடுமையாக உழைத்தவர். மாணவர் விவகாரங்களில் கூடிய கவனம் எடுத்தவர். பிள்ளைகளின் பெற்றோர்களையும் நன்கு அறிந்தவர். சைவப் பாரம்பரியங்களில் வாழ்ந்தவர். இவரது இனிய இயல்புடைய குணமும், பெருந்தன்மையுமே ஆசிரிய உலகில் மேன்மையடையச் செய்தது. இவர் சிறிது காலம் பாடசாலையை விட்டு நீங்கி, அன்று கொக்குவிலில் ஆரம்பிக்கப்பட்டிருந்த காகிதத்தொழிற்சாலை ஒன்றின் நிர்வாகியாக கடமையாற்றினார். துர் அதிஷ்டவசமாக தொழிற்சாலை மூடப்படவே மீண்டும் பாடசாலையில் இணைந்து பணிபுரிந்தார். தனிப்பட்டமுறையில் கற்று இலண்டன் பல்கலைக்கழகக் கலைமாமணிப்பட்டம் பெற்றவர். இவர் போதித்த பாடங்கள் ஆங்கிலமும் இலத்தீனுமாகும். சுமார் 30 ஆண்டுகாலம் இங்கு ஆசிரியராகச் சேவையாற்றி ஓய்வு பெற்ற பின்னரும் பாட-சாலையின் செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர். கொக்குவில் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராகவும் சில வருடங்கள் பணிபுரிந்துள்ளார்.

**திரு. அ. நாகலிங்கம்** - பாடசாலையின் ஆரம்பகாலப்பகுதியிலேயே ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கியவர். இப்பாடசாலையின் செயற்பாடுகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர். கொள்கையால் பெரியவர். குணத்தால் பெரியவர். பக்தியால் பெரியவர். பண்பாட்டால் பெரியவர். ஆனால் இத்தனைக்கும் தன்னை காட்டிக்கொள்ளமாட்டார். தமிழையும் சைவத்தையும் இரு கண்களாகப் போற்றியவர். மாணவர்கள் தேவரா திருவாசகப்பாடல்களைத் தவறாகப் படித்தால் பொறுக்கமாட்டார். உடனடியாக அவர்களுக்குத் தகுந்த தண்டனை அளித்துத் தவறைத் திருத்தி வழிநடத்துவதில் முன் நின்றவர். இவர் போதித்த முக்கியபாடங்கள் கணக்கு, அட்சரகணிதம், கேத்திரகணிதம் ஆகியவையாகும். பாடசாலை அதிபர்களினது அலுவலக நம்பகமான கடமைகளை பொறுப்புணர்ச்சியுடன் ஏற்று திறம்படச் செயற்பட்டவர். பாடசாலை முழுமைக்கும் கால அட்டவணையை நுட்பமாகத் தயாரிப்பதில் இவர் ஒரு நிபுணர். தமிழிலும் ஒரு சிறந்த கல்விமான். இலக்கண மரபுப்படி பாடல்கள் இயற்றுவதில் வல்லவர். கல்லூரி கீதத்தை இயற்றியவரும் இவரே! ஆசிரியப்பணியிலிருந்து ஓய்வு பெற்றபின்னர் பாடசாலை அருகமைந்த புதுக்கோயில் கிருபாகர சிவசுப்பிரமணியப்பெருமான் மீதும் தனது குலதெய்வமான நீராவி ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகர் மீதும் பிரபந்தங்கள் பாடியுள்ளார்.

**திரு. A. கந்தசுவாமி** - கொக்குவில் வாசியான இவர் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியிலிருந்து இப்பாடசாலைக்கு 1946 ஆம் ஆண்டு இடமாற்றம் பெற்று வந்தார். இவர் அங்கு தாவரவியல் பாடஆசிரியராகப் பதவி வகித்தவர். கொக்குவில் இந்துவில் இவருக்கு வர்த்தகம், வரவு செலவுக்கணக்குமுறை, தட்டச்சுப் பதிப்பு போன்ற பாடங்கள் கொடுக்கப்பட்டன. இப்பாடங்களை திறமையாகக் கற்பிப்பதில் வல்லவர். பொருளாதாரம் இவருக்கு ஒரு கைவரப்பட்ட பாடம். பாடசாலைக் காரியாலய தட்டச்சு வேலை முழுவதையும் கையாண்டவர். இனிய இயல்புடையவர். எல்லோரது நன்மதிப்பையும் பெற்றவர். N.P.T.A சோதனை கேள்வித்தாள்கள் தட்டச்சு செய்து கொண்டிருந்த சமயம் நோய்வாய்ப்பட்டு 1964 ஆம் ஆண்டு அமரத்துவம் எய்தினார்.

**திரு. K. கந்தசுவாமி** - இவர் எமது அயல் கிராமமான கோண்டாவிலைச் சேர்ந்தவர். பாடசாலையில் ஆசிரியராக 1927ஆம் ஆண்டு இணைந்து நீண்டகாலம் பணிபுரிந்தவர். தாழ்ந்த நிலையிலிருந்த இப்பாடசாலை நாளொரு வண்ணமும் பொழுதொருமேனியுமாக வளர்ந்து வந்த அபூர்வத்தைக் கண்டு களித்த ஒருவர். தனது ஆழ்ந்த அறிவைக் கொண்டு நடுத்தர வகுப்பு மாணவர்களுக்கு பாடம் நடாத்தி அவற்றை மாணவர் மனதில் பதியச் செய்தவர். ஆங்கில ஏடான Ceylon Observer பத்திரிகையை தவறாது வாசித்துவந்த ஒருவர். இப்பத்திரிகையை பாடசாலைக்கு எடுத்து வந்து பாடப்புத்தகங்களுக்குப் புறம்பாக மாணவர்க்கு பத்திரிகை வாசிக்கும் பழக்கத்தையும் ஊக்குவித்தவர். ஓய்வு நேரத்தை பயனுள்ளதாக விவசாயத்தில் கழித்தவர். சமூகத்தின் வளர்ச்சிக்கும் தன்னை அர்ப்பணித்துச் செயற்பட்டவர். பாடசாலையின் ஒரு விசுவாசமிக்க ஆசிரியராகப் பணியாற்றி 1963 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

**திரு. E. சபாலிங்கம்** - இவர் பாடசாலையுடன் ஒரு சிறிய அளவு காலம் அதாவது 18 ஆண்டுகள் சம்பந்தப்பட்டவர். முதலில் ஆசிரியராகச் சேவையாற்றி 1960 ஆம் ஆண்டு உப அதிபரானவர். ஒரு தெளிவான புத்திமான். சாமர்த்தியசாலி. பலவித திறமையுள்ள ஒருவர். இவர் ஆசிரியர், உபஅதிபராக மட்டுமல்லாமல் விளையாட்டுத்துறையிலும் வல்லவராக விளங்கியவர். இளமை யிலிருந்தே கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் விளையாட்டுக்களிலும் நேர்மைமிக்கவராகத் திகழ்ந்தவர். வலுவுள்ள கைகளும், அகன்ற மார்பும், உறுதியான உடற்கட்டும் கொண்ட இவரது கம்பீரமான தோற்றம் இனிய பேச்சு, கம்பீரமான நடை எல்லாம் என்றும் நீங்கா நினைவுகளாக அமைபவை. பல நாடுகளிலுள்ள பாடசாலைகளுக்கும் சென்று வந்த இவர், தான் பெற்ற புதிய அனுபவங்களைக் கொண்டு இப்பாடசாலையின் சூழலையும் தக்கபடி, தக அமைத்து வளமாக்கியர். பாட-சாலையின் விளையாட்டுத்துறைக்குத் தலைமை தாங்கியவர். இவரது காலப்பகுதியில் விளையாட்டுத்துறை பெருவளர்ச்சி கண்டது. அதிபர் திரு. சி. கே. கந்தசுவாமியின் தானைத்தலைவனாகச் செயற்பட்டவர். இவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து ஒத்துழைத்ததினாலேயே பாடசாலை உயர்ச்சி பெற்றதென்றால் மிகையாகாது. இவர் இங்கிருந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். பின்னர் தான் கல்வி கற்ற யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அதிபராக சிலகாலம் கடமையாற்றி ஓய்வு பெற்றார்.

**திரு. A.R. இராசநாயம்** - இவர் பருத்தித்துறைக் ஹாட்லி கல்லூரியிலிருந்து இடமாற்றம் பெற்று 1950 ஆண்டில் இப்பாட-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலைக்கு ஆசிரியராக வந்தவர். யாழ்பாணக்கல்லூரி, வட்டுக்கோட்டையில் கல்வி கற்று, தனது மேற்படிப்பை கல்கத்தா, சிரம்போ கல்லூரியில் தொடர்ந்து, கல்கத்தா பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர். ஓர் ஆர்வமுள்ள கிறீஸ்தவ தொண்டனாக விளங்கி தனது சமயத்திற்கு சிறப்புமிக்க சேவையாற்றியவர். இவரது கிறிஸ்து மத நம்பிக்கை எமது இந்துப் பாடசாலையை எள்ளவும் பாதிக்கவில்லை. பாடசாலையில் நிகழும் அனைத்து இந்து சமய வைபவங்களிலும் தவறாது கலந்து கொள்வார். யாவருடனும் அன்பாகப் பழகி அவர்களது நன்மதிப்பை பெற்றவர். நிர்வாகத்திறமையும் தலைமை தாங்கி நடத்துவதற்கேற்ற பண்பும் பெற்று விளங்கியவர். எச்சந்தர்ப்பத்திலும் தனது கருத்தை இனி-மையாகவும், தெளிவாகவும் எடுத்தியம்பும் தன்னம்பிக்கை நிரம்பப் பெற்றவர். தன்னிடம் ஆலோசனை கேட்டுவருபவர்களை அன்புடன் ஆதரித்து, அவர்களுக்குத் தகுந்த புத்திமதி கூறி, தைரியமும் நம்பிக்கையும் ஊட்டி ஊக்குவித்தவர். ஆங்கிலத்தை சிறந்த முறையில் கற்பித்தவர். 1950 ஆம் ஆண்டில் பாடசாலையின் உபஅதிபராகப் பதவி உயர்வு பெற்றுப் பொறுப்பும் கடமையுணர்ச்சியுள்ளவராகச் சேவையாற்றியவர். அதிபர் திரு. C.K. கந்தசாமிக்கு மிகப்பெரிய உதவியாளராக, சகல காரியாலயச் செயற்பாடுகளையும் கௌரவத்துடனும் மிக இலகுவாகவும் நடாத்தியவர். ஒரு தசாப்த காலமாக 'கொக்குவில்' என்னும் பாடசாலைச் சஞ்சிகை வெளியிடும் சங்கடமான பொறுப்பை பலவித தாக்குதலுக்கு மத்தியிலும் திறம்பட நடத்தியவர். வடமாகாண ஆசிரிய சங்கத்தின் செயலாளராக இருந்த காலப்பகுதியில் N.P.T.A பரீட்சை ஆலோசனைச் சபையிலும் பலவருடங்கள் கடமையாற்றி ஆசிரிய உலகத்தில் பெரும் புகழ் பெற்றவர். 1962இல் வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் தலைமைப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டவர். இவர் இப்பாடசாலை ஆசிரிய சேவையிலிருந்து 1970 ஆம் ஆண்டு ஆவணியில் ஓய்வு பெற்று 1990 ஆனி மாதம் 6 ஆம் நாள் அமரத்துவம் எய்தினர்.

**திரு. வி. சிவசுப்பிரமணியம்** - வண்ணார் பண்ணை, கலட்டியில் வாழ்ந்து வந்த இவர் 1941 ஆம் ஆண்டிலிருந்து 25 வருடகாலம் இப்பாடசாலையில் தொடர்ந்து பணியாற்றியவர். பாட-சாலையின் முன்னேற்றத்திற்கும் மதிப்பு மிக்க சேவையளித்தவர். ஆங்கிலம், பூமிசாஸ்திரம் ஆகிய இருபாடங்களையும் கீழ்வகுப்பு மாணவர்களுக்கு சிறந்த முறையில் கற்பித்தவர். இவர் இளமை யில் பாரம் தூக்குவதை ஒரு பொழுதுபோக்குக் கலையாகப் பயின்றவர். 400 இறாத்தல் பாரமுள்ள கல் ஒன்றினை நிலத்திலிருந்து தனது நெஞ்சுவரை உயர்த்தித் தூக்குமளவுக்கு வலிமை பொருந்தியவர். உருக்கிரும்பினாலான சங்கிலிகளை 'படார்' என ஒடித்துக் காட்டியவர். அந்நாட்களில் வடமாகாணத்தில் இவர் ஒரு 'சாண்டோ' ஆகத் திகழ்ந்தவர். தனது பலத்தையும் திறமையையும் காண்பித்து பல வெகுமானப் பதக்கங்கள் பெற்றவர். கொக்குவில் இந்துவின் சாரண இயக்கத்தின் தந்தை இவர். ஓய்வு பெறும்வரை சாரண இயக்கத்திற்கு அயராது உழைத்தவர். பாடசாலைப் பாடங்களைக் கற்றலோடு நில்லாமல், ஒவ்வொரு மாணவனும் விளையாட்டு, சங்கீதம், விவாதம், சுலப-மான வாசிப்பு போன்றவற்றில் பங்கெடுத்து, தங்கள் ஞாபகசக்தியையும், உடம்பையும் தக்கவாறு பேணிக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தியவர். மேலும் ***'பலத்தில் சிங்கமாக இருந்து உங்கள் உணர்ச்சிகளை வெற்றி கொள்ளுங்கள், ஒரு பொழுதும் உணர்ச்சிக்கு அடிமையாகாதீர்கள்' 'செல்வத்தை இழந்தால் இழப்பு தோன்றுமில்லை, ஆரோக்கியத்தை இழந்தால் எல்லாவற்றையும் இழக்க நேரிடும்'. 'உனது மூக்கினால் மூச்சை செம்மையாக உள்இழுத்து வெளிவிட்டு வாழ்க்கையின் சுகதுக்கங்களை அனுபவி'*** என்பன போன்ற நல் உரைகள் கூறி மாணவர்களை உற்சாகப்படுத்திய இச்சிறந்த ஆசானை என்றென்றும் இதயத்திலிருத்திப் போற்றுவது எமது கடமையாகும். இவர் பெரும் நோய் நொடியினால் ஒருபோதும் பாதிக்கப்பட்டிருந்ததில்லை. தனது அந்திம காலம்வரை ஓரளவு நல்ல ஆரோக்கியத்துடன் வாழ்ந்து 1971 ஆம் ஆண்டு ஆடி மாதத்தில் அமரத்துவம் எய்தினார்.

இவர்களை விட மேலும் பல ஆசிரியர்கள் இங்கு சேவை செய்து அன்றும் இன்றும் மாணவர்களின் உயர்ச்சிக்கு ஏணியாகவும் பாட-சாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் இருந்துள்ளனர். இவர்கள் அனைவரது சேவைகளும் போற்றப்பட வேண்டியதாகும்.

'கொக்குவில் இந்துக் கல்லூரியின் கதை' என்ற ஆங்கில நூலைத் தழுவி பழைய மாணவன் த. செ. நடராசாவினால் எழுதப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE UNFORGETTABLE LATE MR.S.KUMARAVELU

Kokuvil Hindu College is very fortunate to have been gifted with very devoted and dedicated Principals, Teachers and Old students throughout its entire history to date. Its phenomenal rise and the eminent place it holds among the educational institutional in Jaffna can be attributed to their untiring efforts and wholehearted support.

The late Mr.Suppiah Kumaravelu was one of the old students who had the interest of Kokuvil Hindu College in his heart at all times. He was a son of Kokuvil and lived in close proximity to the college. I knew him from his childhood as we were living in houses opposite to each other. He looked upon me as his mentor and he spent most of his time in my company. He had his entire education at Kokuvil Hindu College. When he entered government service soon after Ceylon gained independence, his first appointment was to the Department for the Registration of Indian and Pakistani Residents. Later he was transferred to the Education Department where he worked (at Head office and the regional office at Jaffna) until his retirement.



*Mr.Suppiah Kumaravelu*

Mr.Kumaravelu was a very pleasant type of person, easily accessible and very helpful to those in need. Because of his amiable manners, he won the hearts of his superiors and brother officers and others he came in contact with. Equipped with these qualities, he was able to fulfill the needs of Kokuvil Hindu College in various ways – in getting vacancies in the teaching staff filled, in getting adequate furniture, science equipment, sports materials etc. and in obtaining funds from the department for additional buildings. It is an incontestable fact that to put up most of the buildings, Mr.Kumaravelu played an important part in getting the department to release the necessary funds. The school community should be grateful to him for the invaluable service rendered by him to the college.

Mr.Kumaravelu was never parochial. He was large hearted and broadminded and he never disappointed anyone who approached him for any help - to get a teaching post for his or her son or daughter, to get a transfer from a remote area to a more convenient station etc. Not only Kokuvil Hindu College but many other schools - mostly the small ones which had no resources for their development also benefitted by his benevolence.


Mr.Kumaravelu migrated to the United Kingdom in 1991 and lived with his daughter Rajani Satchchithananthan (Raji) until he passed away on 30th October 2009. May His soul rest in peace!

*S.Nagalingam*
(An old student).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருமையான பாதாளம்



அ. முத்துலிங்கம்

இம்முறை நான் அமெரிக்காவுக்கு சென்றபோது ஒரு பிரம்மாண்டமான நூலகத்துக்கு போனேன். அங்கே அபூர்வமான நூல்கள் எல்லாம் இருந்தன. எனக்குப் பிடித்த அமெரிக்க எழுத்தாளர் மார்க் ட்வெய்ன். அவர் எழுதிய அத்தனை புத்தகங்களும் இந்த நூலகத்தில் பூர்வ அட்டைகளுடன் கிடைத்தன. அமெரிக்க இலக்கியத்தின் ஆரம்பமே மார்க் ட்வெய்ன் என்று சொல்வார்கள். இவருக்கு பின்னால் வந்த அமெரிக்க எழுத்தாளர்களில் எவரும் இவரைத் தாண்டவில்லை என்பது பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்ட விசயம். இவர் எழுதிய ஹக்கிள்பெரி∴பின் நாவலில் ஓர் இடத்தில் இப்படி வரும். Don't forget to remember that you don't know anything about it. உனக்கு ஒன்றும் தெரியாது என்பதை ஞாபகத்தில் வைத்திருக்க மறக்காதே. இதைப் படித்தபோது எனக்கு சிரிப்பு வந்தது. வேறு யாரால் இப்படி எழுதமுடியும்?

சிறுவயதில் நான் போன பள்ளிக் கூடத்தில் மறதி என்ற வார்த்தைக்கே இடமில்லை. அங்கே பாடங்களை நாங்கள் மனனம் செய்ய நிர்ப்பந்திக்கப் பட்டோம். கணிதத்தில் சூத்திரங்களைப் பாடமாக்க வேண்டும். தமிழிலும் ஆங்கிலத்திலும் பாடல்களைப் பாட மாக்க வேண்டும். சரித்திரத்தில் அரசர்களின் பெயர்களையும் அவர்கள் வெட்டிய குளங்களின் பெயர்களையும் கணக்கில் வைக்க முடியாத தேதி-களையும் பாட மாக்க வேண்டும். வேதி யியல் பாடத்தில் நிறைய சமாந்திரங்கள் இருக்கும். அவற்றையெல்லாம் பாட மாக்க வேண்டும். ஆனால் மிகக் கொ-டுமையானது பூமிசாஸ்திரத்தில் நாடுகளையும் சமுத்திரங்களையும் மலைகளையும் ஆறுகளையும் பாட மாக்குவது. அதாவது வரைபடத்தில் அவை எங்கேயெங்கே இருக்கும் என்பதை மனனம் செய்வது. பூமிசாஸ்திரம் படிப்பித்த வாத்தியார் மறதியை பள்ளத்துக்கு ஒப்பிடுவார். "வீதியில் நடக்கும்போது எப்படி பள்ளத்தில் விழாமல் எச்சரிக்கையாக நடப்பீர்களோ அப்படியே உங்கள் வாழ்க்கையிலும் மறதியில் விழாமல் நீங்கள் தப்பவேண்டும்" என்று அறிவுரை கூறுவார். கூறிமுடித்த உடனேயே தன் மூக்குக்கண்ணாடியை தேடுவார்.

மறதி என்ற வார்த்தை என்னை படிப்பித்த தமிழாசிரியருக்கு பிடிக்கும். நான் ஒருமுறை கட்டுரை ஒன்றில் "ஞாபகமறதி" என்று எழுதிவிட்டேன். அவருக்கு பிடிக்கவில்லை. ஞாபகம் என்றால் நினைவில் வைப்பது. அதற்கு எதிர்ப்பதம் மறதி. அப்படியிருக்க அது என்ன ஞாபகமறதி என்று என்னிடமே கேட்டு தலையில் ஒரு குட்டு வைத்தார். இவரிடம் கற்றதைவிட வாங்கிய குட்டுகளே அதிகம். அந்தக் குட்டின் ஆழமோ என்னவோ இன்றைக்கும் அந்த நினைவு ஆழமாகப் பதிந்து விட்டது. இவர் ஓய்வு பெற்ற பிறகு ஒருநாள் இவரை வழியில் சந்தித்தேன். வற்றிவிட்ட ஆறுபோல உலர்ந்துபோய் இருந்தார். என்னுடைய பெயரைக் கேட்டார். இரண்டு தடவை சொன்னேன். அவரிடம் படித்ததையும் நினை வூட்டினேன். அவருக்கு எல்லாமே மறந்துவிட்டது. நான் விடைபெறும் போது மறுபடியும் என்னுடைய பெயரைக் கேட்டார். அவருக்கு மறதி வியாதி என்று பின்னர் கேள்விப்பட்டேன்.

எங்கள் புராணங்களிலும் மறதிக்காரர்கள் இல்லாமலில்லை. வேட்டையாடவந்த துஷ்யந்தன், காட்டிலே விளையாடிக் கொண்டிருந்த சகுந்தலையைக் கண்டு மோகித்து அவளை அங்கேயே கந்தர்வ மணம் செய்துகொள்கிறான். அடையா-ளமாக ஒரு மோதிரமும் தருகிறான். அவ்வளவு அவசரமாக மணம் செய்தவன் அவளை அரண்மனைக்கு அழைத்துப்போகவில்லை. தகுந்த மரி யாதைகள் செய்து பரிவாரங்களுடன் வந்து அழைத்துப்போவதாகச் சொல்கிறான். ஆனால் ராஜ்ஜியத்துக்கு திரும்பியதும் அவளை மறந்துவிடுகி-றான். சகுந்தலை அரண்மனைக்கு வந்து முறையிட்ட போதுகூட அவனுக்கு ஞாபகம் மீள வில்லை. பின்னர் எப்படியோ சகுந்தலையை ஏற்றுக் கொண்டான் என்று முடிகிறது கதை.

மறதி வியாதியிலிருந்து விஞ்ஞானி களும் தப்பவில்லை. கலீலியோ என்ற தலைசிறந்த விஞ்ஞானி 17ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர்தான் பூமி சூரியனைச் சுற்றுகிறது என்பதை விஞ்ஞானபூர்வமாக முதன்முதலில் நிறுவியவர். இந்தக்கூற்றுக்காக அவரு-டைய முதுமையான காலத்தில் அவர்மேல் கடவுள் நிந்தனைக் குற்றம் சுமத்தி அவரை வீட்டுக் காவலில் வைத்தார்கள். இந்தச் சமயங்களில் கலீலியோ தான் இளவயதில் எழுதிய கணித சித்தாந்தங்களை எல்லாம் பரப்பிவைத்து கூர்ந்து பார்த்துக் கொண்டே இருப்பார். அப்பொழுது "நான் கண்டுபிடித்து எழுதிவைத்த சித்தாந்தங்கள்கூட எனக்கு ஒன்றும் புரி யவில்லையே" என்று கூறி கண் கலங்குவாராம்.

சின்ன வயதில் பள்ளிக்கூடத்தில் மனனம் செய்வதில் எவ்வளவுதான் பயிற்சி பெற்றிருந்தாலும் முதுமையில் மறதி மெல்ல மெல்ல அணுகுவதை தடுக்க முடியாது. சமீபத்தில் கனடா செய்தித்தாள் ஒன்றில் வந்த தகவலை படித்தபோது நான் முன்னெப்பொழுதும் அடையாதவிதமாக அதிர்ச்சி யடைந்தேன். தன்னுடைய செயற்கைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை ஒருவர் பொது இடத்தில் மறந்து வைத்துவிட்டு போய்விட்டார். அவரைத் தேடுகிறது கனடா பொலீஸ். இந்தக் கால் பிளாஸ்டிக்கில் செய்யப்பட்ட இடது கால். அடிடாஸ் ஆண் சப்பாத்து சைஸ் எட்டு. காலின் தேய்வை வைத்து சோதித்துப் பார்த்தபோது குறைந்தது இரண்டு வருடங்களாவது இந்தக் கால் நடந்து உதவி செய்தது தெரிய வந்திருக்கிறது. ஆனால் காலின் சொந்தக்காரரைக் காணவில்லை.

மறதிக்கு பரிசு கொடுப்பதென்றால் இந்த ஒற்றைக்கால்காரரை மறக்க முடியுமா?

எனக்கு வாய்த்த ஆசிரியர்களில் ஒருவர் கேட்கும் கேள்விகளுக்கு புத்தகத்தில் இருப்பதை மனனம் செய்து அப்படியே வரிக்குவரி சொல்ல வேண்டும். பாடம் நடத்தும்போது வாத்தியார் நிற்காமல் கடகடவென்று சொல்லிக்கொண்டு வருவார். மணி அடித்ததும், தண்ணீர் கொதித்ததும் நிற்கும் கேத்தல்போல, பாடத்தை பட்டென்று நிறுத்திவிட்டு புறப்படுவார். இவருடைய பரீட்சைக்கு கண்விழித்து மனப்பாடம் செய்துவிட்டு காலையில் பரீட்சை மண்டபத்துக்கு செல்லும்போது எங்களில் சிலர் வாயையே திறக்கமாட்டோம். படித்து சேகரித்தவை வெளியே விழுந்து விடுமோ என்ற பயம். பரீட்சையில் பாடல் வரிகள் மறந்துபோய்விடும் கணித சூத்திரங்கள் நாக்கு நுனியில் நிற்கும், வெளியே வராது. தேதிகள் எல்லாம் முன்னுக்கு பின்னாக மாறி விடும். அந்தக் காலங்களில் ஞாபகசக்தி சூரர்களைப் பார்த்து நான் பொறாமைப் படுவதுண்டு. அதிலே ஒருத்தன் சந்திர லேகா படத்தின் வசனங்களை சீன் சீனாக ஒப்பிக்கும் திறமை படைத்தவன்.

எங்களுடன் அன்னலட்சுமி என்ற பெண்ணும் படித்தாள். கர்வமானவள். மெல்லிய மீசையுண்டு. முழங்கை வரைக்கும் தங்க காப்புகள் குலுங்கும். அரைத்தாவணி உடுத்தி நீண்ட பின்னல் செய்து தவறாமல் ஒரேயொரு மல்லிகைப்பூவை அதில் செருகி வைத்திருப்பாள். வீட்டிலே சங்கீதம் கற்றதால் பள்ளிக்கூடத்தில் அவளுக்கு நல்ல மதிப்பு. நடு மேடையில் உட்கார்ந்து காப்புகளால் பாரம்கூடிய கையால் வலது துடையை பெரிதாக சத்தம்வரத் தட்டி பாடுவதை நான் பார்த்திருக்கிறேன். பள்ளிக்கூடத்தில் நடக்கும் விழாக்களில் எந்த நாள், எந்த நேரம், எந்த காற்று வேகம், எந்த வெப்பம், எந்த ஈரப்பதன் என்றாலும் கடவுள் வாழ்த்து பாடுவது அவள்தான். அவள் வாயினால் பாடுவதுபோல இருக்காது. முழுமுகமும் அசைந்து தசைகள் சுருங்கி அவள் வாயில் முடிந்து அதற்குள்ளிருந்து சொற்கள் வெளிவரும். ஒருமுறை "வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்" என்று தொடங்கியவள் "பூக்கொண்டு, பூக்கொண்டு" என்று அதே இடத்தில் நின்றுவிட்டாள். தலைமையாசிரியர் ஒவ்வொரு சொல்லாகச் சொல்லிக் கொடுத்து ஒருவாறு அன்று பாடலை முடித்தாள்.

சில வருடங்களுக்கு முன்னர் அப்படியான ஓர் ஆபத்து என்னையும் நோக்கி வந்தது.

நான் படித்த பள்ளிக்கூடத்தில் ஒவ்வொரு நாளும் காலையில் தேகப்பியாச வகுப்பு நடக்கும். முதல் வேலையாக நேர்க்கோட்டில் நின்று நாங்கள் எண்ணிக்கொண்டே வருவோம். அதாவது one, two, three என்ற ஒழுங்கில். இந்த நம்பர்கள் சொல்வதற்கும், தேகப்பியாசத்திற்கும் என்ன தொடர்பு என்று நாங்கள் ஒருவரும் கேட்கத் துணியவில்லை. அந்த மர்மம் அன்றைக்கும் துலங்கவில்லை. இன்றைக்கும் விடுபடவில்லை. அருமைநாயகம் என்ற மாணவனுக்கு sixteen சொல்லவராது. "சிக்கிட்டீன்" என்றே சொல்வான். அந்த வகுப்பு முடியும்வரை எங்களையெல்லாம் சிரிப்பூமூட்ட இது ஒன்றே போதும். வரிசையில் நிற்கும்போது எப்படியோ அவனுக்கு அந்த நம்பர்தான் கிடைக்கும் அவனும் சிக்கிட்டீன் என்றே சொல்வான். போகப்போக அவன் வரிசை யில் நிற்கும் முன்பு தனக்கு முன் எத்தனை பேர் நிற்கிறார்கள் என்று எண்ணி 13வது இடத்திலோ 18வது இடத்திலோ போய் தந்திரமாக நின்றுகொள்வான். அந்த யுக்தியும் பலிக்கவில்லை. வாத்தியார் பார்த்துவிட்டு உயரப்படிதான் நிற்க வேண்டும் என்று ஆட்களை இடம் மாற்றுவார். உயரமான பத்மநாபன் முதலிலும், படிப்படியாகக் குறைந்து கடைசியில் ஜெகராசசிங்கமும் நிற்க வேண்டும் என்று சொல்வார். கலைந்து மறுபடியும் வரிசையில் நிற்போம். அருமைநாயகம் மீண்டும் சிக்கிட்டீன் ஆகிவிடுவான்.

இந்தச் சம்பவத்துக்கு பிறகு அவன் பெயரே எல்லோருக்கும் மறந்துவிட்டது. சிக்கிட்டீன் என்றால்தான் தெரியும். அவனும் சிக்கிட்டீன் என்று கூப்பிட்டால் பதில் சொல்லப் பழகியிருந்தான். வீட்டிலும் அவனை அப்படி அழைப்பதாக செய்திகள் வந்தன. ஒருநாள் வகுப்பில் ஆசிரியர்கூட சிக்கிட்டீன் என்று அவனைக் கூப்பிட்டது எங்களுக்கு முழு வெற்றி.

பலவருடங்கள் கழித்து கொழும்பில் அவனை ஒருநாள் சந்தித்தேன். மனைவியுடன் மிருகக்காட்சிசாலை பார்க்க வந்திருந்தான். அவள் வட்டமான தாலியும், சருகை வைத்து மொடமொடக்கும் சேலையும் அணிந்திருந்தாள். ஒரு திருமண வீட்டுக்கு போவதற்கு வெளிக்கிட்டு பாதியில் மனதை மாற்றி மிருகங்களைப் பார்க்க வந்ததுபோல பட்டது. பதினாறு சொல்லத் தெரியா விட்டால் என்ன பெரிய நட்டம். அவன் மனைவி பேரழகி.

அவள் ஆவலுடன் மிருகங்களைப் பார்த்தாள். சற்றும் குறையாத அதே ஆவலுடன் மிருகங்களும் அவளைப் பார்த்தன. மனைவிக்கு என்னை அறிமுகம் செய்துவைத்தான். நானும் அப்படியே அவனை என் மனைவிக்கு அறிமுகம் செய்யலாம் என்று நினைத்தேன். எவ்வளவு யோசித்தும் சிக்கிட்டீன் என்ற பெயர்தான் எனக்கு ஞாபகம் வந்தது. மனைவியிடம் எப்படி சிக்கிட்டீன் என்று அறிமுகப்படுத்துவது. ஆனால் அவனுக்கு எப்படியோ என் சங்கடம் விளங்கிவிட்டது. முந்திக் கொண்டு "அருமைநாயகம்" என்றான்.

ஓர் அருமையான பாதாளத்திலிருந்து அன்று நான் காப்பாற்றப்பட்டேன்.

**END**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Mortgage solutions to suit your needs.



Sri T. Sridharan, AMP
Mortgage Development Manager

I'll help you find the mortgage suited to your individual needs. Call me today and let's get started.

416-953-3297
tharma.sridharan@scotiabank.com

Scotiabank®

® Registered trademark of The Bank of Nova Scotia.




# BREAD MASTER BAKERY & CATERING

**TAKE - OUT AND CATERING FOR ANY OCCASIONS**




10வது வருட பூர்த்தியை முன்னிட்டு வாடிக்கையாளர்களுக்கு **BREAD MASTER** சிறப்பு விலையில் வழங்குகிறது.

சகலவிதமான பாண், பணிஸ் மற்றும் பிட்டு, இடியப்பம், கொத்து ரொட்டி, நூடில்ஸ், தோசை, அப்பம், சோறு கறி, வடை, றோல்ஸ், பற்றிஸ் வகைகள் அனைத்தும் சிறப்பு விலையில் சுடச்சுடக் கிடைக்கும்.



திருமணம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்தநாள் வைபவம், ஒன்று கூடல்கள், அந்தியேட்டிக் கிரியைகள் மற்றும் எந்த வைபவங்களானாலும் சுத்தமான முறையில் கேற்றறிங் செய்து தரப்படும்

**OPEN 7 DAYS A WEEK!** 7.00 A.M - 9.00 P.M

**31 TAPSCOTT ROAD, UNIT #B3**
LOWER LEVEL, MALVERN TOWN CENTRE - SCARBOROUGH
**TEL: (416) 299-5083**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞாபகம் வருதே!!! ஞாபகம் வருதே!!!



ஐந்தாம் வகுப்பு. அதுதான் நான் கொக்குவில் இந்துக் கல்லூரியில் காலடி வைத்த முதல் வகுப்பு. பலா மரத்தின் கீழ் தேவாரம், நாகராஜா மாஸ்டரிடம் கணக்குப்பாடம், இன்ரேவல் விட்டால் ஆறு குளம் மேடு. மதியம் இடைவேளைக்கு அதிவேகமாக வீடு சென்று திரும்பி கிளித்தட்டு விளையாட்டு. பாடசாலை முடிந்ததும் ஒலிக்கும் கல்லூரி கீதம், மாலை வீடு திரும்புமுன் நடைபெறும் சாரணியப்பயிற்சி, உயர்ந்த மனிதனைப்போல் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் அந்த அழகிய பழைய மூன்று மாடிக்கட்டிடம், அதன் முன்னே பரந்து விரிந்து கிடக்கும் விளையாட்டு மைதானம், பௌதீக ஆய்வு கூடத்தில் காண்பிக்கப்படும் ஊமைப் படக்காட்சி, இல்லங்களிற்கு இடையே வருடா வருடம் நடைபெற்றுவரும் இல்ல விளையாட்டு போட்டிகள், கலை கலாச்சாரத்தை மேம்படுத்த நடைபெற்று வரும் நடன, சங்கீத, பேச்சுப் போட்டிகள். வகுப்பு வகுப்பாக நடைபெற்று வரும் நவராத்திரி பூசைகள், இராப்போசன ஒன்றுகூடல்கள். இவை அனைத்திற்கும் மேலாக அன்பாகவும், அதட்டலாகவும் கல்வியையும், நல் ஒழுக்கத்தையும் கற்றுத்தந்த ஆசிரியர்கள். பண்பாகவும் பாசமாகவும் பழகிய நண்பர்கள். மறக்க முடியவில்லையே!!! என் மனதில் இருந்து அகலாத அந்த நினைவலைகள். நாடு விட்டு நாடு வந்து இரண்டு தசாப்தங்களாகியது என்னவோ உண்மைதான். ஆனாலும் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் கல்லூரியை இன்னும் நேசிப்பதும் உண்மைதான்.

வெளிநாடுகளில் வாழ்க்கையை நடாத்திக் கொண்டிருக்கும் எம் மக்கள் ஒரு கணப்பொழுதைக் கூட ஒதுக்க முடியாதவர்களாக காலத்தின் தேவை கருதி வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். காலையில் வேலை சென்று மாலையில் வீடு திரும்பும் மனைவியும், மாலையில் வேலை சென்று அதிகாலையில் வீடு திரும்பும் கணவனும் இவ்வாறாக வெளிநாடுகளில் பல இக்கட்டான சூழ் நிலையிலும் கூட கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் பல்வேறுபட்ட நாடுகளில் பழைய மாணவர் சங்கக்கிளைகளை உருவாக்கி கல்லூரியின் தேவைகளை மனதிற் கொண்டு ஒன்றுபட்டு பல செயல் திட்டங்களுக்கு பல்வேறு வழிகளிலும் உதவி வருவது வரவேற்கத்தக்கதும், பாராட்டுக்கு உரியதும் ஆகும்.

எமது கல்லூரியின் இவ்வருட நூற்றாண்டு விழா மிகச்சிறப்பாகவும், பெருவிழாவாகவும் நடைபெற இருப்பது எமது கல்லூரியின் அனைத்து அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள், மற்றும் நலன் விரும்பிகள் அனைவரதும் கூட்டு முயற்சிதான் என்பதே உண்மை. கனடாவில் எம்மவர் பலரை பல கலை நிகழ்ச்சிகள் பல்வேறுபட்ட கொண்டாட்டங்களில் சந்திக்கும்போது கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடந்த பல மகிழ்ச்சியான, சுவாரஸ்யமான கதைகளையே பேசிக் கொள்வார்கள். அவர்கள் மீண்டும் மீண்டும் சந்திக்கும் வாய்ப்பு எங்களுக்கு கிட்டும் போதும் கதைத்த அதே பழைய கதைகளைத்தான் ஞாபகம் வைத்துக் கொண்டு இருப்பார்கள். ஆனால் அதிலும் ஒரு இன்பம் தான்.

இன்றைய இந்த நூற்றாண்டினை பூர்த்தி காணும் எமது கல்லூரிக்கு எம் பழைய மாணவர்கள் கல்லூரியை மறவாது எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு பல பங்களிப்புகளை செய்து தங்களது நன்றிக் கடனை ஆற்றிக் கொண்டிருக்கும் அனைவரும் தொடர்ந்தும் ஆற்றுவார்கள் என்பதில் ஐயமில்லை.
**(அனைவரின் மனதிலும் கல்லூரியின் ஞாபகம் இருக்கும் வரை)**

**"ஞாபகம் வருதே ஞாபகம் வருதே கொக்குவில் இந்துக் கல்லூரியில் கற்ற ஞாபகம் வருதே."**

சாந்திலா ரவிச்சந்திரன்
பழைய மாணவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ. த. சக மாணவர் 1962–1963
## கொக்குவில் இந்துக் கல்லூரி
### ரொரண்ரோ – கனடா
# G.C.E. Class of 1962-1963
## Kokuvil Hindu College
### Toronto - Canada

கொக்குவில் இந்துக் கல்லூரி பல அறிஞர்களையும் வல்லுனர்களையும் உலகிற்களித்த பெருமை மிக்க கல்லூரியாகும். 1910ம் ஆண்டு ஆரம்பித்த இக்கல்லூரியில் ஐம்பது தொடங்கி அறுபதுகள் வரை கல்வி பயின்ற "62–63 சக மாணவர்கள்" ஆகிய எங்களின் எண்ணலைகளின் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் பெருமையடைகின்றோம்.

கொக்குவில், கோண்டாவில், தாவடி, இணுவில், திருநெல்வேலி மற்றும் பல இடங்களில் வாழும் மக்களுக்கு யாழ்நகரின் அண்மையில் பெண் ஆண் என்ற வேறுபாடின்றி கல்வி புகட்டும் ஒரு கல்வி நிறுவனம் கொக்குவில் இந்துக் கல்லூரியாகும். திரு ஹன்டி பேரின்பநாயகம் அதிபராகவும் திரு. C.K.கந்தசாமி (முதல் விஞ்ஞான ஆசிரியர்) உப அதிபராகவும் கடமை தொடங்கிய காலத்தில் நாமும் எமது கல்வியை ஆரம்பித்தோம். 1950க்கு முன் அதிபராக இருந்த திரு. V. நாகலிங்கம் அவர்களின் திட்டங்களின் வழியாக 1950ம் ஆண்டு Linga-Light களியாட்ட விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. அக்களியாட்டத்தில் எமது மனதில் நீங்காத நினைவாக இருப்பது Merry-go-round என்னும் சக்கர ஓட்டமேயாகும். இக் களியாட்டத்தின் மூலம் சேர்ந்த நிதி கல்லூரி அபிவிருத்திக்கு நன்கு பயன்பட்டது.

மதுரை தீயினால் அழிவுபட்டதுபோல ஐம்பதுகளின் ஆரம்ப ஆண்டுகளில் எமது கல்லூரியின் ஓலையால் வேய்ந்த நீள் மண்டபங்கள் இரண்டு முறை தீயினால் அழிவுற்றது. இதனால் நாங்கள் மரநிழலில் கல்வி கற்ற ஞாபகம் இன்னும் எம் மனதில் பசுமையாகப் பதிந்துள்ளது. எரிந்த சாம்பலில் இருந்து உயிர்த்தெழும் Phoenix பறவைபோல எமது கல்லூரி மேலும் வளர்ச்சி பெற்றது. இவ் வளர்ச்சியை வேண்டி திரு ஹண்டி பேரின்பநாயகம் தலைமையில் ஆசிரியர்களும் நலன் விரும்பிகளும் சேர்ந்து உலகளாவிய அளவில் பெரு நிதியை திரட்டினார்கள்.

ஔவை கூறிய "பிச்சை புகினும் கற்கை நன்றே" என்பதற்கிணங்க பல இன்னல்களுக்கு மத்தியில் கல்வி புகட்டுவதே பெரு நோக்கமாக கொண்ட எமது கல்லூரியின் பணி பாராட்டுக்குரியது.

எமது காலத்தில் முதலாவது மூன்றடுக்கு நீள் மாடி கட்டப்படும் வேளையில் மாணவர்களாகிய நாங்களும் கிராம மக்களும் வரிசையாக நின்று concrete கலவையை தூக்கித் கொடுத்த ஞாபகம் நீங்காத நினைவாக மனதில் உள்ளது. இத்துடன் பாடசாலையின் தேவைகளை சிரமதான முறையில் ஒவ்வொரு வார இறுதியிலும் நாம் ஆற்றியுள்ளோம்.

அறுபதுகளில் பஞ்சு வெடித்துப் பறப்பதுபோல 62–63 சக மாணவர்கள் ஆகிய நாங்கள் உலகின் பலபாகங்களுக்கும் பிரிந்தேகினோம். வாழ்க்கை என்னும் கல்லூரியில் பாடம் கற்று இறுதியில் கனடா நன்நாட்டிற்கு வரும் பெரும் பேறு பெற்றோம். அறுபதுகளில் பிரிந்த நாங்கள் தொண்நூறுகளில் மீண்டும் ஒன்று சேர்ந்தோம். ஆண்டுக்கு ஆண்டு ஒன்று கூடல்களின் மூலம் எமது உறவை வலுப்படுத்தி வருகின்றோம். இத்துடன் நின்று விடாமல் மற்றைய நாடுகளில் உள்ள எமது உறவுகளுடன் தொடர்பு கொண்டு "62–63 சக மாணவர்" அமைப்பை இலங்கை, இங்கிலாந்து, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, டென்மார்க், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகள் வரை விரிவு படுத்தியுள்ளோம்.

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கனடா) ஆரம்பித்த காலம் தொடக்கம் 62–63 சக மாணவர் ஆகிய நாங்களும் அதில் அங்கத்தவர்களாக இருந்து வருகின்றோம். சங்கம் எடுக்கும் முயற்சிகட்கு எமது பங்குகளை மிகவும் ஆர்வத்துடன் செய்து வருகின்றோம்.

கனடா பழைய மாணவர் சங்கம் கல்லூரிக்கு பாரிய நிதி உதவி செய்வதுடன் அதன் முன்னேற்றத்திற்கு ஆவன செய்வதை இட்டு மிகவும் பெருமையடைகின்றோம். பழைய மாணவர் சங்கம் மேலும் வளர்ந்து கனடா முழுவதும் உள்ள எல்லா பழைய மாணவர்களையும் இணைத்து முன்னேற எமது வாழ்த்துக்கள்.

பணிவன்புடன்
க.பொ.த. 62–63 சகமாணவர்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S&S

ENGRAVERS

SPECIALIZED IN METAL,
PLASTIC & WOOD ENGRAVING




* வெற்றிக் கேடயங்கள்
* பெயர்க் கோர்வைகள்
* வாழ்த்து மடல்கள்

அனைத்தும்
உங்கள்
தேவைக்கேற்ப
குறைந்த விலையில்...
நிறைந்த தரத்தில்...

Tel.: 416-335-6819
Cell: 416-875-3500
Fax: 416-609-0272
285 Progress Ave. Unit #8
Scarborough, ON M1P 2Z3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சலரோகம் - Diabetes

**Dr. T.Chandira Mogan**
McAF,DrAC,PhD, MD, MBBS.



**1. *சலரோகம் என்றால் என்ன?***

உடலின் தசையி சுரப்பியினால் (Pancreas-β-Cell) சுரக்கப்படும் ஹோமோன் இன்சுலின் (Insulin) ஆகும். இது உடலின் உயிர்க்கலங்களுக்கு தேவையான இரத்தத்திலுள்ள குளுக்கோசினை அவ் உயிர்க் கலங்களுக்குள் உட்செலுத்துவதற்கு உதவி செய்கின்றது. இன்சுலின் தொழிற்பாடு குறைவதனாலோ அல்லது தசையி சுரப்பியினால் குறைவாக சுரப்பதனாலோ அல்லது வேறு ஏதும் காரணங்களினால் இரத்தத்திலுள்ள குளுக்கோசின் அளவு கூடி இறுதியில் சிறுநீருடன் வெளிச் செல்வதே சலரோகம் ஆகும்.

**2. *சலரோகம் எத்தனை வகைப்படும்?***

(i) Type -I- Diabetes - இன்சுலினில் தங்கி உள்ள சலரோகம்.
(ii) Type -II- Diabetes - இன்சுலினில் தங்கி இராத சலரோகம்.
(iii) Gestational Diabetes - கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஏற்படும் சலரோகம்.

**3. *Type -I- Diabetes - இன்சுலினில் தங்கி உள்ள சலரோகம் என்றால் என்ன?***

இந்த வகையான சலரோகத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் தசையி சுரப்பியானது மிகக் குறைந்தளவு அல்லது முற்றாகவே இன்சுலினைச் சுரப்பதில்லை. இதன் காரணமாக நோயாளி இன்சுலினை ஊசிமூலம் எடுக்கவேண்டி வரும். இது பொதுவாக குழந்தை பிறக்கும்போதே அல்லது சிறு வயதிலிருந்து இந்தவகையான சலரோகம் ஏற்படுகின்றது. வயது வந்தவர்களுக்கு இந்த வகையான சலரோகம் வருவது மிகக்குறைவு.

**4. Type -II- Diabetes- இன்சுலினில் தங்கி இராத சலரோகம் என்றால் என்ன?**

இது பொதுவாக வயது வந்தவர்களைத் தாக்கும் (90% - 35 வயதுக்குமேல்) சலரோகமாகும். இந்த வகையான சலரோக நோயாளிகளின் இன்சுலின் சுரப்பானது குறைவடைவதனாலும், அல்லது சுரக்கப்பட்ட இன்சுலின் பூரணமாக செயற்பட முடியாமற் போவதனாலும் (Insulin Resistance) ஏற்படுகின்றது. இவர்கள் சலரோக மாத்திரைகளை பாவிக்க வேண்டி வரும். கடுமையான நாட்பட்ட நோயாளிகள் சில சமயங்களில் ஊசிமூலம் இன்சுலின் ஏற்ற வேண்டி வரலாம்.

**5. *Gestational Diabetes- கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஏற்படும் சலரோகம் என்றால் என்ன?***

முன்பு ஒருபோதும் சலரோகம் இல்லாத பெண்களுக்கு கர்ப்பம் தரிக்கும் காலங்களில் மட்டும் சலரோகம் ஏற்படுவதாகும். இது குழந்தை பிறந்தவுடன் நின்றுவிடலாம் அல்லது வாழ்நாள் பூராகவும் தொடரலாம். இது பொதுவாக கர்ப்பம் தரித்து 24-28 வாரங்களில் ஏற்படும் சந்தர்ப்பம் அதிகம். 3-5% சதவீதமான கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இது ஏற்படுகின்றது.

**6. சலரோகம் வருவதற்கான காரணங்கள் என்ன?**

(a) பரம்பரை – பெற்றோர்களுக்கு இருந்தால் அவர்களின் பிள்ளைகளுக்கும் வரும் சந்தர்ப்பம் அதிகம்.
(b) ஆரோக்கியத்துக்குக் கேடான உணவுப் பழக்க வழக்க முறைகள்.
(c) அதிகரித்த உடற் பருமன் - Obesity.
(d) போசாக்குக் குறைபாடு – Chromium, B&D Vitamins, Vanadium, Zinc, Magnesium.
(e) கடுமையான கவலை, மனத்தாக்கம் - Emotional Stress Condition.
(f) உடற்பயிற்சி அற்ற சோம்பலான வாழ்க்கை – Sedentary Life.
(g) புகைபிடித்தல், மதுபானம் அருந்துதல்.
(h) சில ஆங்கில மருந்துகளின் நாட்பட்ட பாவனையின் பக்கவிளைவு – Steroids, Thiazide Drugs.
(i) அதிகரித்த இரத்த அழுத்தம், இருதய நோய், கொலஸ்ரோல் போன்ற நோய்களின் நாட்பட்ட தாக்கம்.
(j) சிலவகை வைரஸ், பற்றீரியாக்களினால் எற்படும் தொற்று நோய்களின் தாக்கம் - Coxsackie – B – Virus, Rubella, Pancreatitis, Auto Immune disease.
(k) உடலில் ஏற்படும் சில கட்டிகளின் ( Tumour ) தாக்கம்.
(l) பிறந்த குழந்தைகளுக்கு போதுமான அளவு தாய்ப்பால் கொடுக்காவிட்டால் அவர்களின் எதிர்காலத்தில் சலரோகம் வரலாம்.
(m) ஹோமோன் சம்பந்தமான உடல் நோய்கள் - Cushing's Syndrome, Polycystic Ovary Syndrome, Metabolic Syndrome.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7. சலரோகம் வருவதற்கான குணங்குறிகள் என்ன?**

(a) அடிக்கடி சிறுநீர் வருதல்.
(b) அதிக பசி, அதிக தாகம், அதிக களைப்பு, சோம்பலாகக் காணப்படல்.
(c) கண்பார்வை மங்குதல், தலைசுற்றுதல்.
(d) உடலில் காயங்கள் ஏற்படும்போது குணமடையத் தாமதித்தல்.
(e) பங்கசு போன்ற தோல்நோய்கள் ஏற்படுதல் - Yeast Infection, Vaginal Thrush.
(f) திடீர் உடல்நிறைக் குறைவு அல்லது திடீர் உடல்நிறை அதிகரித்தல்.
(g) கை, கால் விறைப்பு ஏற்படல்.

**8. சலரோக நோயினால் ஏற்படும் நாட்பட்ட பின்விளைவுகள் என்ன?**

(a) கண்பார்வைக் குறைவு – Blindness.
(b) மூளை மற்றும் நரம்பு மண்டலங்களின் பாதிப்பு – Neuropathy
(c) மாரடைப்பு, பாரிசவாதம் - Heart attack, Stroke.
(d) சிறுநீரக செயலிழப்பு – Kidney Failure.
(e) மலட்டுத்தன்மை (Infertility), ஆண்ணுறுப்பின் வீரியமின்மை ( Erectile dysfunction –ED)
(f) காயங்கள் குணமடையத் தாமதித்தலும், அங்க இழப்பும் - Amputation.

சலரோகமானது உடலின் அனைத்து உயிர்க் கலங்களையும், அங்கங்களையும் பாதித்தாலும்கூட மேற்கூறப்பட்ட பாதிப்புகள் ஏற்படும்போதுதான் அது வெளித்தெரிகின்றது.

**9. சலரோக நோயினை உறுதிப்படுத்துவதற்குரிய பரிசோதனைகள் என்ன?**

(a) Fasting blood Sugar – 7.0 mmol /liter க்கு மேலாக இருந்தால்
(b) Random Blood Sugar – 11.1 mmol/liter ற்கு மேலாக இருந்து அதிகமாக சிறுநீர் கழித்தல், அதிக தாகம், அதிகபசி, அதிக களைப்பு, திடீர் உடல்நிறைக் குறைவு போன்ற குணங்குறிகள் இருந்தால்.
(c) HbA1C – 7% அல்லது 0.07 ற்கு அதிகமாக இருந்தால்.

**10. HbA1C பரிசோதனை என்றால் என்ன?**

இது நோயாளியின் கடந்த மூன்று மாதங்களில் இரத்தத்திலுள்ள ஈமோகுளோபினுடன் ஒட்டியுள்ள குளுக்கோசுவின் அளவினை அளந்து அதற்கு பொருத்தமான மருந்தின் அளவினையும், உணவுக் கட்டுப்பாட்டு முறையினையும் தீர்மானிக்க முடியும் (Assessing Overall Diabetic Control).

**11. ACR பரிசோதனை என்றால் என்ன?**

இது சிறுநீரிலுள்ள Albumin/Creatinine ratio வினைக் குறிக்கின்றது. இது சலரோக நோயாளியின் சிறுநீரகத்தின் செயற்பாட்டினை அளக்கும் பரிசோதனையாகும். மூன்றிலிரண்டு பங்கு சிறுநீரக செயலிழப்பு ஏற்பட்ட பின்னரே இரத்தத்திலுள்ள Creatinine அளவு கூடுகின்றது. எனவேதான் இந்தப் பரிசோதனையானது சிறுநீரகச் செயலிழப்பின் ஆரம்ப நிலையிலேயே கண்டுபிடித்து விடுவதனால் இது ஒரு சலரோக நோயாளருக்கு அதிசிறந்த பரிசோதனையாகும். இப்பரிசோதனையின் முடிவு ஆண் - 2.5 mg/mmol , பெண் - 3.5 mg/mmol என்ற அளவிற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

**12. சலரோக நோயாளருக்கு உரிய உணவு முறைகள் என்ன?**

(a) நார்ச்சத்துள்ள மரக்கறி, இலைக்கறி, தவிட்டுப்பிடிப்பான அரிசி Oat bran, சலாட்வகைகள்.
(b) புரதம் நிறைந்த Legumes, Barley, Nuts, Seeds, Peas, Buckwheat, கடலை வகைகள், எள்ளு, குரக்கன், வரகு மற்றும் அளவான கோழி, மீன், Turkey என்பன.
(c) மாமிசத்தில் மீன் அதிசிறந்தது. அதிலும் Salmon, Mackerel, Cod, Tuna, Herring, Halibut, Sardines, Trout, Anchovies போன்ற மீன் வகைகளில் அதிகளவு "Omega-3" இருப்பதனால் சலரோகம், இதயநோய், மூட்டுவாதம் போன்ற அனைத்து நோய்களுக்கும் பொருத்தமான உணவாகும். மரக்கறி உண்ணும் நோயாளர்கள் Flaxseeds, Walnut ஆகியவற்றை உட்கொள்ளலாம். **Flaxseedsல்** தான் "Omega-3" அதிகமாக உள்ளது.
(d) "Chromium" நிறைந்த romaine lettuce, தவிட்டுப்பிடிப்பான அரிசிவகைகள், சோயாபுரதம், சிவந்த வெங்காயம், உள்ளி, காளான்கள் (Mushroom), Broccoli, தக்காளிப்பழம், உருளைக்கிழங்கு, ஈரல், Yeast ஆகியன சலரோகத்திற்கு நல்லது. **Romaine lettuce** ல் தான் அதிகளவு Chromium உள்ளது.
(e) உருளைக்கிழங்கு, பீற்றூட், வத்தாளைக்கிழங்கு (sweet potatoes) ஆகியவற்றை தோலுடன் உண்ணவேண்டும். ஆனாலும் இதில் கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் கிழங்கில் தோலுடன்கூடிய ½ செ.மீ தடிப்புள்ள பகுதியையே உட்கொள்ள வேண்டும். இக்கிழங்கு வகைகளை முழுமையாக உண்ணுதல் கூடாது. மாப்பொருள் உணவுகளுக்குப் பதிலாக மேற்கூறிய கிழங்கு வகைகளை உண்ணலாம்.
(f) தினமும் அளவான சிவப்பு, நீல நிறங்களைக் கொண்ட பழங்களான Blue Berries, Red Grapes, Black Berries, Red Cherries, Red Onions, Plums, Orange, கத்தரிக்காய் ஆகியவற்றில் "Anthocyanins" அதிகமாக உள்ளதினால் இது இரத்தத்திலுள்ள சீனியினை வெகுவாகக் குறைப்பதோடு, கண்பார்வையையும் பாதுகாக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(g) இயன்றவரை பச்சை மரக்கறிவகைகளை கரட் (தோலுடன்), செலறி, Broccoli, Cucumber, Red bell pepper, Chili Pepper, தக்காளி, கோவா, romaine lettuce, Swiss chard, Mustard Green, Kale, Asparagus, Cauliflower (முட்டைகோஸ்), Bokchoy, Zucchini, Water Cress, Brussels sprouts போன்றவற்றை பச்சையாக உண்ண வேண்டும். இவற்றுடன் எலிமிச்சம்பழச்சாற்றினை (Vit-C) சேர்த்து உட்கொண்டால் இவற்றிலுள்ள இரும்புச்சத்து போன்ற உணவுக்கூறுகள் இலகுவாகவும், முழுமையாகவும் இரத்தத்தினால் அகத்துறிஞ்ச முடியும். Ketchup, Sauce, Dressing ஆகியவற்றை சேர்த்து உண்ணுதல் கூடாது.

(h) இறைச்சி, மீன், மரக்கறி வகைகளை ஒருபோதும் பொரித்து உண்ணக்கூடாது. அதற்கு பதிலாக Barbecue (Grill) அல்லது Bake அல்லது steam பண்ணி சாப்பிடவும்.

(i) உணவு தயாரிப்பதற்கு "Pure Extra Virgin Olive Oil" பாவிப்பது நல்லது. Non Stick Pan ல் பூசினால் போதும்.

(j) தினமும் 10 - 15 பருப்பு Almonds அல்லது Walnut சாப்பிடுதல் வேண்டும். இதனை காலை, மதியம், இரவு என தலா ஐந்து பருப்புகளை எடுப்பது நல்லது.

(k) Soya beans, Green beans, Black beans, Kidney Beans, Red beans, Navy beans, French lentil போன்ற புரதம் மிகுந்த போசாக்குள்ள கடலை வகைகளை நன்றாகத் தண்ணீரில் நனைந்தபின் ஈரமான துணியினால் கட்டி இரண்டு நாட்களுக்கு வைத்து சிறுமுளை ஏற்பட்டபின் அதனை லேசாக அவித்து சாப்பிடும்போது வழமையான கடலை வகைகளை சாப்பிடும் போது ஏற்படும் வாய்வுக் கோளாறு, சமிபாட்டுக் கோளாறு ஏற்படாது. போசாக்கு மிகுந்ததாகவும் இருக்கும். இதில் Green beans, Black Beans,Whole lentil (பாதியாக உடையாத தோலுடன் கூடிய முழுமையான பருப்பு) அதிக போசாக்கு நிறைந்தவையாகும்.

(l) மைசூர்ப் பருப்பு, பயறு, உழுந்து, கடலை வகைகள் பாதியாக உடைக்காமல் முழுமையான பருப்பாக வாங்கி சில மணித்தியாலங்கள் நீரில் ஊறவைத்து பின் அதனை சமைத்துச் சாப்பிட்டால் அதிகளவு நார்ச்சத்தும் (Fiber), புரதம் போன்ற அனைத்து உணவுக் கூறுகளையும் வீணாக்காமல் சாப்பிட முடியும். நார்ச்சத்தானது சலரோகம், கொலஸ்ரோல், மலச்சிக்கல், பெருங்குடல் புற்றுநோய் (Colorectal Cancer) ஆகிய நோய்களுக்கு மிக முக்கியமான உணவுக்கூறாகும்.

(m) தினமும் பச்சையாக கறுத்தஎள்ளு (sesame) சாப்பிடுதல் சலரோகம், கொலஸ்ரோல், மூட்டுவாதம், குடல் புற்றுநோய்கள், Osteoporosis, migraine Headache, Post menopausal Syndrome (பெண்களுக்கு நிரந்தரமாக மாதவிடாய் நின்றபின் உடலில் ஏற்படும் நோய்கள்) போன்ற நோயாளருக்கு மிகவும் நல்லது. இதில் அதிகளவு Copper, Manganese, Tryptophan, Zinc, magnesium, Calcium, Iron, Fiber உள்ளன. சலரோக நோயானது Manganese, magnesium, Zinc ஆகியவற்றின் குறைபாட்டினாலும் வரும் என்பது குறிப்பிடத்தக்கது.

(n) கறுவாப்பட்டை (Cinnamon), சிறுகுறிஞ்சா இலை, நாவல்கொட்டைப்பவுடர், சிவப்புவெங்காயம், உள்ளி, வெந்தயம், பாவற்காய் (Bitter Melon), Chinese Green Tea, அறுகம்புல் சாறு, நெல்லிக்காய் வத்தல், கறுத்தஎள்ளு (100 கிராம்) போன்றவற்றில் ஏதாவது இரண்டினை தினமும் சாப்பிடுவதன் மூலமும், கடலுராஞ்சிப் பட்டை, நாவற்பட்டை, கொன்றைப் பட்டை, ஆவாரம்பட்டை, அத்திப்பட்டை, மருதம்பட்டை, சரசக்கொன்றைப்பட்டை, ஆகியவற்றை தினமும் அவித்துக் குடிப்பதன் மூலமும் இரத்தத்திலுள்ள சீனியின் அளவை வெகுவாகக் குறைக்க முடியும்.

**(o)** தினமும் நான்கு உள்ளிப் பல்லினை வேப்பெண்ணையில் ஊறவைத்து (24மணித்தியாலத்துக்கு மேல்) காலையும், மாலையும் சாப்பிடல் வேண்டும்.

(p) தினமும் Pure Extra Virgin Olive Oil, உள்ளி, சிவப்பு வெங்காயம், சோயா புரோட்டின், Almond, Walnut, Guggulipid(Guggul), Chinese Green Tea, Omega - 3 - Fish Oil, Vit-B3(Niacin), Vit-B5 (Pantothenic acid), Vit-E, Vit-C, காளான் (reishi), Policosanol, Red Yeast rice, Chromium, கறுவாபட்டை ஆகியன வற்றினை சாப்பிடுவதன் மூலமம், உடற்பயிற்சி செய்வதன் மூலமும் இரத்தத்திலுள்ள Bad Cholesterol (LDL) ஐ குறைத்து, Good Cholesterol (HDL) ஐ கூட்டுவதுடன் சீனியின் அளவினை வெகுவாகக் குறைக்க உதவி செய்கின்றது.

(q) பால் உணவுவகைகளில் பால் (1%), Non-fat Plain Yogurt (பழங்கள், சீனி சேர்க்கப்படாத), Soy Yogurt ஆகியவற்றை எடுத்தல் வேண்டும்

**(r)** சகல நோய்களையும் குணப்படுத்தக் கூடிய சர்வரோக நிவாரணியான 23 வகையான ஆயுர்வேத மருந்துகள் கலந்த கனடாவில் தயாரிக்கப்படும் **"Intra பானம்"** தினமும் அருந்துதல் நல்லது.

## 13. *சலரோக நோயாளிகளுக்கு தேவையான விற்றமின்கள், உணவுக்கூறுகள் என்ன?*

(a) Alpha lipoic acid - இரத்தத்தில் உள்ள சீனியின் அளவைக் குறைத்து நரம்பு மண்டலத்தின் பாதிப்பினை வெகுவாகக் குறைக்கிறது.

(b) Chromium picolinate - இரத்தத்திலுள்ள சீனி, கொலஸ்ரோல் ஆகியவற்றின் அளவைக் குறைத்தும், உடலின் ஊளைச் சதையினை குறைத்தும் உடலை மெலிதாக வைத்திருக்க உதவுகிறது.

(c) உள்ளி (Garlic) - இரத்தத்திலுள்ள சீனி, கொலஸ்ரோல், வாய்வுக் கோளாறினைக் குறைப்பதோடு உடலின் நோயெதிர்ப்புச் சக்தியினையும், இரத்த ஓட்டத்தினையும் அதிகரிக்கச் செய்கிறது.

(d) Vit-B Complex, Folic acid, Vit- B12, Omega -3, Vit- D3 – சலரோகத்தினால் வரும் நரம்புத்தளர்ச்சி, நரம்பு மண்டலங்களின் பாதிப்பினை (கை, கால் விறைப்பு - Numbness, Tingling Pain) வெகுவாகக் குறைக்கிறது.

(e) Magnesium - இது சலரோக நோயாளரின் இரத்தத்தில் மிகவும் குறைவாகவே காணப்படும். இது உடலின் அனைத்து நொதியங்களின் (Enzymes) செயற்பாட்டுக்கு துணைசெய்வதோடு, இதயத்திற்குச் செல்லும் இரத்தத்தின் அளவினை அதிகரித்து மாரடைப்பு, இரத்த அழுத்தம் வராமல் தடுக்கிறது. இன்சுலின் செயற்பாட்டினை அதிகரிக்கச் செய்து இரத்தத்திலுள்ள சீனியின் அளவினைக் குறைத்து கண்ணில் ஏற்படும் பாதிப்பினைத் தடுக்கின்றது.

(f) Vit-A & Caroteniods – குறிப்பாக கண்ணுக்கு மிகவும் நல்லது.

(g) Vit-C & Bioflavonoids – சலரோகத்தினால் ஏற்படும் நாட்பட்ட பாதிப்பினையும், காயங்களையும் விரைவாக குணமடையத் தூண்டும்.

(h) Essential fatty acids (fish oil), Evening Primrose oil(GLA) - இதில் DHA (Docosahexanoic acid), EPA (Eicosapentaenoic acid) கட்டாயமாக இருத்தல் வேண்டும். இது இன்சுலினின் செயற்பாட்டுக்கும், நரம்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டலத்தின் ஆரோக்கியத்துக்கும் நல்லது. மேலும் கொலஸ்ரோலின் அளவினைக் குறைத்து மாரடைப்பு, மூட்டுவாதம் (arthritis) வராமல் தடுப்பதுடன், ஞாபகசக்தியை (Memory Power) அதிகரிக்க உதவும்.

(i) Co-Enzyme-Q10 (Co – Q10):- உடலின் அனைத்து அங்கங்களின் இரத்த ஓட்டத்தினை அதிகரித்து சீனி, கொலஸ்ரோல் ஆகியவற்றின் அளவினைக் குறைக்கின்றது. மாரடைப்பு (Heart Attack), இதயசெயலிழப்பு(Congestive Heart Failure), இதயநோய் (Angina, Arrhythmia), இதயவால்வு நோய்(Mitral Valve Prolaps) வராமல் தடுக்கின்றது.

(j) Vit-E - இரத்தத்திலுள்ள சீனி, கொலஸ்ரோலினைக் குறைக்கிறது. இது ஒரு Powerful Antioxidant ஆகும்.

(k) Biotin, Inositol, Vanadium - இன்சுலின் செயற்பாட்டினை அதிகரித்து சீனியின் அளவினைக் குறைக்கிறது.

(l) Zinc - கண்பார்வையை கூர்மையாக வைத்திருக்க உதவுகின்றது. இதன் குறைபாடும் சலரோகத்திற்குக் காரணமாகின்றது.

(m) சலரோக நோயாளருக்கு கண்பார்வை இழப்பு (Macular degeneration) என்பது முக்கியமான பிரச்சினையாகும். இதனைத் தவிர்ப்பதற்கு Lutein, Bill berry, Ginkgo biloba, Zinc, Omaga-3 – Fish Oil (DHA),Vit – E, Vit - A ஆகியவற்றை உட்கொள்ளல் வேண்டும்.

(n) மலட்டுத்தன்மை (Infertility), ஆணுறுப்பின் வீரியமின்மை (Erectile dysfunction), விரைவான விந்து வெளியேற்றம் (Premature Ejaculation) ஆகியவற்றைத் தவிர்ப்பதற்கு Selenium, Vit-C & Bioflavnoids, Vit-E, Zinc, Vit - B-Complex, Vit- A, Omega -3- Fish Oil ஆகியவற்றை உட்கொள்ளுதல் வேண்டும். மேலும் Cholesterol யும், சீனியையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல் வேண்டும். அதிகரித்த கொலஸ்ரோலுக்கும், சீனிக்கும், மேற்கூறப்பட்ட நோய்களுக்கும் மிகநெருங்கிய தொடர்புண்டு.

(o) Multi Vitamin – For Overall Health.

## 14. *சலரோக நோயாளிகள் கவனிக்க வேண்டியவை.*

(1) தினமும் உடற்பயிற்ச்சி செய்தல் வேண்டும். 30 நிமிடங்கள் நடந்தால் போதுமானது.

(2) வருடத்துக்கு ஒரு முறையாவது Dietician னை சந்தித்து உணவுக் கட்டுப்பாட்டு முறையினை விளக்கமாகக் கேட்டறிந்து அதன்படி உணவு எடுத்தல் வேண்டும்.

(3) தினமும் காலை எழுந்தவுடன் Fasting Blood Sugar ஐ 'glucometer' மூலம் அளந்து ஒரு கொப்பியில் திகதி வாரியாக எழுதி அதனை வைத்தியரிடம் செல்லும்போது காண்பிக்க வேண்டும்.

(4) மூன்று மாதத்திற்கு ஒரு தடவை இரத்தத்தினையும், ஆறு மாதத்திற்கு ஒரு தடவை சிறுநீர்ப் பரிசோதனையும் செய்தல் வேண்டும்.

(5) ஒரு நாளைக்கு சிறு சிறு பகுதிகளாக 6 தடவை பிரித்து உணவினைச் சாப்பிட்டு வந்தால் திடீர் சீனியின் உயர்வினைத் தடுக்க முடியும். (மூன்று முக்கிய உணவு-Main Meals, மூன்று சிற்றுண்டிகளும் - Snacks)

(6) பழங்கள் சாப்பிடும் போது முழுமையாக "நார்ச்சத்துடன்" சாப்பிட வேண்டும். அதுவும் சிறு சிறு துண்டுகளாக 6 தடவை பிரித்துச் சாப்பிடுவது நல்லது. பழச்சாறு ஒருபோதும் குடிக்கக் கூடாது ஏனெனில் இது இரத்தத்தில் சீனியின் அளவில் திடீர் அதிகரிப்பை ஏற்படுத்தும்.

(7) புகைத்தல், மதுபானம் அருந்துதலை அறவே விடுவதன் மூலம் இரத்தத்தில் உள்ள சீனியின் அளவினை பூரணமான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க உதவி செய்யும். விரும்பினால் Red Wine ஆண்கள் 4 அவுன்ஸ்சும், பெண்கள் 3 அவுன்ஸ்சும் எடுக்கலாம்.

(8) இனிப்புப் பண்டம், சீனி, சர்க்கரை, கற்கண்டு, Jam, Honey, Chocolates, Sweets, Cake, Soft Drinks, Cola, Pepsi, Fruit Juice, Pop corn, தவிடு நீக்கிய தானியங்கள் (Refined Grains), White Bread, பழவத்தல்கள் (Dried fruits) ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். பட்டினி விரதம் இருக்கக் கூடாது.

(9) உணவுப் பொருட்களை வாங்கும்போது அவற்றில் உள்ள Food Label ல் நிரம்பிய கொழுப்பமிலம் (Saturated Fat) Triglyceride, Trans Fat மிகக்குறைவாக உள்ள பொருட்களையே வாங்குதல் வேண்டும்.

(10) "புதுச் செருப்பு கடிக்கும்" என்று சொல்வது போல் புதிதாக பாதணிகள் வாங்கி அணியும்போது பாதத்தில் காயங்கள் ஏற்படாத வகையில் காலுக்கு பொருத்தமான அளவில் பாதணியை அணிதல் வேண்டும். குறிப்பாக காலில் ஏதாவது புண்கள், கொப்பளங்கள் ஏற்பட்டால் உடன் தகுந்த வைத்திய சிகிச்சை அளித்தல் வேண்டும்.

(11) தினமும் Baby Aspirin ஐ தவறாமல் உட்கொள்ளல் வேண்டும்.

சலரோகத்தின் கட்டுப்பாடு என்பது நோயாளியின் முழுமையான ஒத்துழைப்பிலேயே தங்கி உள்ளது. வைத்தியர் ஒரு வழிகாட்டியாகத்தான் இருக்க முடியும். உடற்பயிற்ச்சி, ஒழுங்காக வைத்தியரின் ஆலோசனையுடன் நேரம் தவறாமல் மருந்தெடுத்தாலும்கூட விருப்பத்திற்கு ஏற்ப அளவிற்கு மீறிய அளவில் உணவு அருந்துதல் கூடாது. நோயாளிக்கு உணவுக் கட்டுப்பாடு (Balanced Diet)என்பது மிகவும் முக்கியமானது. போதுமான தூக்கம், சுத்தமான நீர், காற்று, கிடைப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழும் மனம், எதுக்கெடுத்தாலும் கோபப்படாத குணம், முடியுமானால் ஒழுங்கான யோகாசனம், தியானம் (meditation), மனதுக்கிசைவான இசைகேட்டல், ஆன்மீகத்துறையில் ஈடுபடல் அத்துடன் இயற்கையோடு இணைந்து முன்னெச்சரிக்கையோடு தவிர்க்கவேண்டியதைத் தவிர்த்து, ஏற்கவேண்டியதை ஏற்று மனதுக்கும், உடலுக்கும், உணர்விற்கும் அடிமையாகாமல் அவற்றை நமக்கு அடிமையாக்கிக் கொண்டால் **நாம் என்றும் பதினாறு வயதினிலேதான்!**

**"Diabetes is a dangerous Disease but easy to control......"**


வாழ்க்கை முறைமையை **(Life Style)** மாற்றுவது என்பது லேசான விஷயமல்ல, முயன்றால் முடியும். முடிவு கிடைத்தால் சலரோகத்திலிருந்து விடிவு கிடைக்கும். எது எப்படி இருந்தாலும் இறுதியாக நான் சொல்ல விரும்புவது **"Prevention is better than Cure"** என்பதேயாகும்.

மேலதிக ஆலோசனைக்கு **T.P : 416-702-5416**

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ALL YOU CAN EAT WEEKEND BUFFET

KIDS EAT FREE EVERYDAY FROM 3PM - 8PM


WE ALSO DO LARGE GROUP PARTIES

TAKE OUT & CATERING

ALL DAY BREAKFAST



OWNER/ OPERATOR: THAVARAJAKULASINGAM



GOLDEN GRIDDLE®


FAMILY RESTAURANTS

**GOLDEN GRIDDLE**
**FAMILY RESTAURANTS**
**1110 FINCH AVE .WEST UNIT 45**
**TORONTO, ON. M3J 2T2**
**TEL: (416) 663-5140**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவருடம் ஒரு விஞ்ஞான நிகழ்வு



சிவ. ஞானநாயகன்

சித்திரையில் பிறக்கும் எமது புதுவருடத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் என்ன தொடர்பு? இதை அறிய, முதலில் பூமியைப் பற்றி எமக்கு தெரிந்த சிலவற்றைப் பார்ப்போம். பூமியில் நேரம், திகதி என்பன இடத்திற்கு இடம் வேறுபடும். இதை கணிப்பதற்கு விஞ்ஞானம் பூமியில் கற்பனைக் கோடுகளை வரைந்து அதனை அகலக்கோடுகள் (Latitude) மற்றும் நெடுங்கோடுகள் (Longitude) என அழைத்தது. அகலக்கோடுகள் பூமத்திய-ரேகையை (Equatior) 0 பாகையாக ஆரம்பித்து வடதுருவம் மற்றும் தென்துருவம் நோக்கி அதிகரித்துக் கொண்டு 90 பாகை வரை செல்லும். இதேபோல் நெடுங்கோடுகள் இங்கிலாந்திலுள்ள கிரீன்விச் (Greenwich) நகரில் ஊடாக செல்லும் நெடுங்கோட்டை 0 பாகையாக ஆரம்பித்து கிழக்கு மற்றும் மேற்குப் பக்கமாக அதிகரித்து கொண்டு 180 பாகைவரை செல்லும். ஒவ்வொரு 15 பாகை நெடுங்கோட்டிற்கும் ஒரு மணித்தியால நேரவித்தியாசப்படி பூமியில் நேரஅளவு கணிக்கப்பட்டு உள்ளது.

இப்போது எமது பூமியைவிட்டு அண்டவெளிக்கு நாம் போவோம். இதற்கு முதலில் சில கலைச்சொற்கள் பற்றி நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

**தளம் (*Plane*)**: இது ஒரு தட்டையான மேற்பரப்பு. இது இருபரிமாணங்களைக் கொண்டது. (Two Dimensional Surface)

**பூமி சூரியனை சுற்றும்பாதை (*Ecliptic*)**: இது பூமி சூரியனை சுற்றிவரும் நீள்வட்டமான பாதை. இதனூடாக செல்லும் தளத்தை 'பூமியின் பாதை தளம்' (Plane of the Ecliptic) என அழைப்போம்.


**பூமத்தியரேகையினூடான தளம்:** இது பூமத்தியரேகையினூடாக செல்லும் தளமாகும். இதை Plane of Equator என அழைப்போம். இது பூமியை சரிபாதியாக வெட்டுகிறது.

**கோடு (*Line*)**: சாதாரணமாக இரண்டு தளங்கள் ஒருகோட்டில் சந்திக்கும். நீங்கள் இருக்கும் அறையின் மூலையைப் பாருங்கள். ஒருபக்கச்சுவர் ஒரு தளத்தைக் குறிக்கும். மற்றைய பக்கச் சுவர் இன்னொரு தளத்தைக் குறிக்கும். இங்கு இரு சுவர்களும் (தளங்களும்) சந்திக்கும் மூலை ஒரு கோடு (Line) ஆகும். இங்கு இரண்டு தளங்களும் ஒன்றை ஒன்று 90 பாகையில் ஒரு கோட்டில் சந்திக்கின்றன.

அண்டவெளியிலுள்ள நட்சத்திரங்களை யும் கிரகங்களையும் அடையாளம் காணுவதற்கும் அவை இருக்கும் இடங்களை குறிப்பதற்கும் பூமியிலுள்ளது போல் ஒரு அகலக்கோடு மற்றும் நெடுங்கோடு முறை தேவைப்பட்டது. இதற்காக அண்டவெளி ஒரு கற்பனை கோளமாக எடுக்கப்படுகிறது. 'இது அண்டவெளி கோளம்' (Celestial Sphere) என்று அழைக்கப்படுகிறது. பூமத்திய-ரேகையினூடாக செல்லும் தளத்தை இவ் அண்டவெளி கோளத்தை ஊடறுக்குமாறு நீட்டினால் அது இந்த அண்டவெளி கோளத்தை வெட்டும் கோடு அண்டவெளி மத்தியரேகை (Celestial Equator) எனப்படும். இவ் அண்டவெளி மத்திய-ரேகையை 0 பாகையாக ஆரம்பித்து அண்டவெளி கோளத்தின் வடமுனையையும் தென்முனையையும் நோக்கி அதிகரித்துக் கொண்டு 90 பாகைவரை அண்டவெளி அகலக் கோடுகள் (Declination) வரையப்பட்டன.

பூமியின் பாதையின் தளமும் பூமத்திய-ரேகைக்கூடான தளமும் ஒன்றை ஒன்று 23½ பாகையில் ஒரு நேர்கோட்டில் வெட்டுகின்றன. இந்த நேர்கோடு அண்டவெளி கோளத்தை ஊடறுக்குமாறு வடக்கு பக்கமாக நீட்டப்பட்டது. இது அண்டவெளி மத்தியரேகையை சந்திக்கும் இடத்தில் வரையப்பட்ட நெடுங்கோடே அண்டவெளி நெடுங்கோட்டின் (Celestial Longitude) 0 பாகையாக கொள்ளப்பட்டது. இந்நெடுங் கோட்டிலிருந்து கிழக்குபக்கமாக ஆரம்பித்து ஒவ்வொரு 30 பாகைக்கும் நெடுங்கோடுகள் வரையப்பட்டன.


பூமியிலுள்ள கற்பனை நெடுங்கோடுகள் அவைபோகும் ஊர்களை வைத்து அடையாளம் காணப்பட்டன.




Celestial Sphere



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Thamil New Year Day**

(உதாரணமாக 0 பாகை நெடுங்கோடு கிரீன்விச் நகரினூடாக செல்கிறது) இவ் அண்டவெளி நெடுங்கோடுகளை எவ்வாறு அடையாளம் காணுவது? இந்நெடுங்கோடுகளை அடையாளம் காண உதவுவதற்காக பூமியின் பாதை தளம் அண்டவெளி கோளத்தை ஊடறுக்குமாறு நீட்டப்பட்டது. இத்தளத்திற்கு 8 பாகை மேலும் 8 பாகை கீழுமாக உள்ள பகுதியில் (16 பாகை Belt) இருந்த நட்சத்திரக் கூட்டங்களின் (Constellations) வடிவத்தை வைத்து இவ் அண்டவெளி நெடுங்கோடுகளுக்கு பெயரிடப்பட்டது.

0 பாகையாக எடுக்கப்பட்ட நெடுங்கோடு ஆரம்பித்த இடத்திலிருந்த நட்சத்திரக் கூட்டம் ஆட்டின் கொம்பு போல் இருந்ததால் அது மேடம் (Aries) என அழைக்கப்படுகிறது. இதிலிருந்து ஒவ்வொரு 30 பாகையினூடாக செல்லும் அண்டவெளி நெடுங்கோடுகள் (Celestial Longitude) அது செல்லும் நட்சத்திர கூட்டத்தின் வடிவத்திற்கு ஏற்ப பெயர் இடப்பட்டு இடபம் (Taurus) மிதுனம் (Gemini) என 360 பாகை வரையும் 12 நட்சத்திர கூட்டங்களின் பெயரில் அழைக்கப்படுகிறது.

0 பாகை அண்டவெளி நெடுங்கோடும் 0 பாகை அண்டவெளி மத்திய ரேகையும் வெட்டும் இடம் வானசாஸ்திர கணிப்பிற்கு மிகவும் முக்கியமான இடமாகும். இதனால் இப்புள்ளி மேடராசி ஆரம்பத்திலுள்ள "முதலாவது புள்ளி" First Point of Aries என அழைக்கப்படுகிறது.

என்ன, புதுவருடம் என ஆரம்பித்து அண்டவெளியிலுள்ள முதலாவது புள்ளி பற்றிக் கூறுகிறேன் என்று சிந்திக்கிறீர்களா? பூமியிலிருந்து பார்க்கும்போது சூரியன் இந்த வானசாஸ்திர கணிப்புகளுக்கு மிக முக்கியமான "முதலாவது புள்ளி"க்கு வரும் நாளே எமது புது வருடப்பிறப்பாகும்.

மற்றைய மதங்களோ பண்பாடுகளோ பூமியில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை முன்னிட்டு வருடப்பிறப்பை கணிக்கும் போது எமது பண்பாட்டில் நம் மூதாதையர்கள் ஒரு விஞ்ஞான நிகழ்விற்கு முக்கியத்துவம் கொடுத்து வருடப்பிறப்பை கணித்துள்ளார்கள். இம்முறையில் கணிக்கப்படும் வருடப்பிறப்பு எந்த மதம் சார்பற்றதும் எந்தப் பண்பாட்டிற்கும் உகந்ததும் மட்டுமல்லாமல் பிரபஞ்சத்திலுள்ள மற்றைய உலக தொடர்புகளுக்கும் கூடப் பாவிக்கக் கூடியது என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
## 2010ம் ஆண்டின் முக்கிய நிகழ்வுகள்

**பொதுக் கூட்டம்**

**இடம்:-** ஸ்ரீ சந்திர மௌலீஸ்வரர் ஆலய மண்டபம்

3011, மார்க்கம் வீதி, அறை 62&63

**காலம்** மே-08-2010 (சனிக்கிழமை)

**நேரம்** மாலை **4:00** மணி

**Annual General Meeting**

**Place:-** Sri Chandra Mouwleeswarer Temple

3011, Markham Road, Unit 62&63

**Date: -** May 08. 2010 (Saturday)

**Time: - 4.00** PM

**அனைத்து அங்கத்தவர்களையும் வரவேற்கின்றோம்.**

**ALL MEMBERS ARE WELCOME**

---

**பண்ணிசைப் போட்டி**

**இடம்:-** St. Stephen's Presbyterian Church

3817, லோறன்ஸ் அவனியூ East

**காலம்:-** யூலை-03-2010 (சனிக் கிழமை)

**நேரம்:-** காலை 8.00 மணி

**Pannissai Competition**

**Place:-** St. Stephen's Presbyterian Church

3817, Lawrence Ave East

**Date :-** July-03-2010 (Saturday)

**Time:-** 8.00 AM

**பண்ணிசை**, பேச்சு, வாசிப்பு, கட்டுரை, சொல்வதெழுதுதல், எழுத்துக் கூட்டிச் சொல்லுதல், உறுப்பெழுத்து, கணிதம், ஆங்கிலம் ஆகிய போட்டிகள் நடைபெறும்.

***"அங்கத்தவர்களின் வாரிசுகளை கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்".***

---

**வெளிக்கள ஒன்றுகூடல் (Picnic)**

**இடம்:-** கிட்ஸ் ரவுண் லமறூ பாக்

3159, பேச்மவுண்ட் வீதி, ஸ்காபுறோ

**காலம்:-** 19-07-2008 (சனிக் கிழமை)

**நேரம்:-** காலை 8.00 மணி

**Place :-** Kids Town L' Amoreaux Park

3159, Birchmount Road,
Scarborough.

**Date:-** 19-07-2008 Saturday

**Time:-** 8.00AM

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் / All Are Welcome**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NUTECHWORLD LTD

NUTECHWORLD

## Sales -Service - Repairs

**Computers - Laptops, Desktop**

**Virus, Adware, Spyware Removal**

**Upgrades**

**Printers, Copiers, Scanners**

**Networking -Wired, Wireless**

**Databackup & Recovery**

**Home Theatre system - installation**

**Video Surveillance system**

எமது கல்லூரியின் நூற்றாண்டு நிறைவடையும்
இவ்வேளையில் பழைய மாணவர்களாகிய நாம்
எம் கல்லூரி மென்மேலும் புகளுடனும்
நிறைவுடனும் வளர வாழ்த்துகின்றோம்.

**Niranjan Panchalingam** Bsc Eng. (U.K) **& Nagularaj Nadarajah** MCSE, CISCO

# Tel: 416 335 5222

3341 Markham Road, Unit B114.
Scarborough -Ont (Markam / Steels) M1X 0A5
info@nutechworld.com

---

# Sai Swaralaya

**School of Carnatic Music**

**VOCAL, VEENA, PANNISAI & BAJAN**
**(Theory & Practical)**

யாழ் பல்கலைக்கழக சங்கீத விரிவுரையாளராகவும் இலங்கை
ஒலிபரப்பு கூட்டுத்தாபனம், தொலைக்காட்சி கலைஞராகவும், பல நாடுகளிலும் இசை நிகழ்ச்சிகளை வழங்கிய
இசைக்கலைமாணி பிரஷாந்தி நிரஞ்சன் (Bachelor of Music)

## Tel 416 299 1514



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2009ம் ஆண்டு நடைபெற்ற கல்விசார் போட்டிகளில் விருது பெற்ற மாணவர்கள்

## பண்ணிசை

**6 வயதுக்கு உட்பட்டோர்:-**

ஆண்கள்
1ம் இடம் த.தனீஸ்
2ம் இடம் பு.அர்ஜுன்

**9 வயதுக்கு உட்பட்டோர்:-**

பெண்கள்
1ம் இடம் ஜெ.சௌமியா
2ம் இடம் பு.கிருஷானி
3ம் இடம் கு.தக்ஷா

**12 வயதுக்கு உட்பட்டோர்:-**

பெண்கள்
1ம் இடம் யு.லாவண்யா
2ம் இடம் றி.அபிஷேகா
3ம் இடம் லோ.அர்ச்சனா

ஆண்கள்
1ம் இடம் லோ.ஆஸ்வின்
2ம் இடம் சு.சஜேன்
3ம் இடம் பு.வித்தகன்

**15 வயதுக்கு உட்பட்டோர்:-**

பெண்கள்
1ம் இடம் ச.ஆதீஷியா
2ம் இடம் பு.பிரவீனா
3ம் இடம் ஜீ.பிறேமினி

ஆண்கள்
1ம் இடம் ந.பிரியாந்
2ம் இடம் சு.அருணன்
3ம் இடம் சு.குகானந்

## பேச்சு

**6 வயதுக்கு உட்பட்டோர்:-**

ஆண்கள்
1ம் இடம் த.தனீஸ்

**9 வயதுக்கு உட்பட்டோர்:-**

ஆண்கள்
1ம் இடம் கே.ஜயசன்

பெண்கள்
1ம் இடம் பு.கிருஷானி

**12 வயதுக்கு உட்பட்டோர்:-**

ஆண்கள்
1ம் இடம் சு.சஜேன்
2ம் இடம் ச.ஆதிகாஷ்

பெண்கள்
1ம் இடம் லோ.அர்ச்சனா

**15 வயதுக்கு உட்பட்டோர்:-**

ஆண்கள்
1ம் இடம் சு.அருணன்
2ம் இடம் ந.பிரியாந்

பெண்கள்
1ம் இடம் ச.ஆதீஷியா
2ம் இடம் கே.வினீஷா

## உறுப்பெழுத்து

**9 வயதுக்கு உட்பட்டோர்:-**

ஆண்கள்
1ம் இடம் கே.ஜயசன்

பெண்கள்
1ம் இடம் ஆ.ஆரபி
2ம் இடம் ஜீ.ஹர்ஷினி
3ம் இடம் பா.கனீஷா

**12 வயதுக்கு உட்பட்டோர்:-**

ஆண்கள்
1ம் இடம் ச.ஆதீஸ்கர்
2ம் இடம் சு.சஜேன்
3ம் இடம் கு.ஜனார்த்

பெண்கள்
1ம் இடம் லோ.அர்ச்சனா
2ம் இடம் சி.சரண்யா
3ம் இடம் யு.லாவண்யா

**15 வயதுக்கு உட்பட்டோர்:-**

ஆண்கள்
1ம் இடம் சு.குகானந்
2ம் இடம் சு.அருணன்
3ம் இடம் ந.பிரியாந்

பெண்கள்
1ம் இடம் ச.ஆதீஷியா
2ம் இடம் ஆ.ஆதிரை
3ம் இடம் மு.கீர்த்தனா

## வாசிப்பு

**9 வயதுக்கு உட்பட்டோர்:-**

ஆண்கள்
1ம் இடம் கே.ஜயசன்

பெண்கள்
1ம் இடம் ஆ.ஆரபி
2ம் இடம் பா.கனீஷா
3ம் இடம் ஜீ.ஹர்ஷினி

**12 வயதுக்கு உட்பட்டோர்:-**

ஆண்கள்
1ம் இடம் சு.சஜேன்
2ம் இடம் ச.ஆதீஸ்கர்
3ம் இடம் பு.வித்தகன்

பெண்கள்
1ம் இடம் யூ.லாவன்யா

**15 வயதுக்கு உட்பட்டோர்:-**

ஆண்கள்
1ம் இடம் சு.அருணன்
2ம் இடம் ந.பிரியாந்
3ம் இடம் சு.குகானந்

பெண்கள்
1ம் இடம் ச.ஆதீஷியா
2ம் இடம் ஆ.ஆதிரை
3ம் இடம் ஜீ.பிறேமினி

**18 வயதுக்கு உட்பட்டோர்:-**

பெண்கள்
1ம் இடம் சி.சந்தியா

## சொல்வது எழுதுதல்

**9 வயதுக்கு உட்பட்டோர்:-**

ஆண்கள்
1ம் இடம் கே.ஜயசன்

பெண்கள்
1ம் இடம் பா.கனீஷா
2ம் இடம் ஆ.ஆரபி
3ம் இடம் யு.சாகித்தியா

**12 வயதுக்கு உட்பட்டோர்:-**

ஆண்கள்
1ம் இடம் ச.ஆதீஸ்கர்
1ம் இடம் சு.சஜேன்
3ம் இடம் பு.வித்தகன்

பெண்கள்
1ம் இடம் லோ.அர்ச்சனா

**15 வயதுக்கு உட்பட்டோர்:-**

ஆண்கள்
1ம் இடம் சு.அருணன்
2ம் இடம் சு.குகானந்
3ம் இடம் ந.பிரியாந்

பெண்கள்
1ம் இடம் ஜெ.பிருந்தா
2ம்இடம் ச.ஆதீஷியா
3ம் இடம் ஆ.ஆதிரை

**18 வயதுக்கு உட்பட்டோர்:-**

பெண்கள்
1ம் இடம் சி.சந்தியா

## கணிதம்

**தரம் 3**

1ம் இடம் ஆ.ஆரபி
2ம் இடம் பு.கிருஷானி
2ம் இடம் மு.ஜனனி

**தரம் 4**

1ம் இடம் ச.பவித்திரா
2ம் இடம் றி.அபிஷேகா

**தரம் 5**


1ம் இடம் லோ.அஸ்வின்
2ம் இடம் நி.ஜனான்
2ம் இடம் சு.சஜேன்

**தரம் 6**

1ம் இடம் சு.அருணன்
1ம் இடம் ஆ.ஆரணியா
3ம் இடம் சி.பிரவீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2009ம் ஆண்டு நடைபெற்ற கல்விசார் போட்டிகளில் விருது பெற்ற மாணவர்கள்

### கணிதம்

**தரம் 7**

1ம் இடம் ஜெ.பிருந்தா
2ம் இடம் ந.பிரியாந்
3ம் இடம் ச.சாமந்தி

**தரம் 8**

1ம் இடம் ஆ.ஆதிரை
2ம் இடம் ஜீ.பிறேமினி
3ம் இடம் ச.ஆதீஷியா

**தரம் 9**

1ம் இடம் ச.சேரன்
2ம் இடம் கே.வினீஷா
3ம் இடம் சி.சந்தியா

### ஆங்கிலம்

**தரம் 3**

1ம் இடம் கே.ஜயசன்
1ம் இடம் ஆ.ஆரபி
3ம் இடம் பு.கிருஷானி
3ம் இடம் கு.தக்ஷா
3ம் இடம் ஜீ.ஹர்ஷினி
3ம் இடம் மு.ஜனனி

**தரம் 4**

1ம் இடம் றி.அபிஷேகா
2ம் இடம் ச.பவித்திரா
3ம் இடம் ஜெ.சௌமியா

### ஆங்கிலம்

**தரம் 5**

1ம் இடம் பு.வித்தகன்
1ம் இடம் லோ.அஸ்வின்
1ம் இடம் சி.சரண்யா

**தரம் 6**

1ம் இடம் சு.அருணன்
1ம் இடம் ஆ.ஆரண்யா
3ம் இடம் சி.பிரவீன்

**தரம் 7**

1ம் இடம் ஜெ.பிருந்தா
1ம் இடம் த.பிரவிந்
3ம் இடம் ச.சாமந்தி

**தரம் 8**

1ம் இடம் ஜீ.பிறேமினி
2ம் இடம் ஆ.ஆதிரை
3ம் இடம் மு.கீர்த்தனா

**தரம் 9**

1ம் இடம் ச.சேரன்
1ம் இடம் சி.சந்தியா
3ம் இடம் கே.வினீஷர்

## FIRST ELEVEN SOCCER TEAM – 1975 – THE UNBETEN TEAM
## J.S.S.A Champions – 1975




Left to Right

Standing ;- N.Selvanathan, N.Sivanantharajah, N.Theivantharan, N.Ravimohan, N.Ravichandran, --------------, N.Balakumar, G.Prabaharan, R.Ratnasoothy, A.Kailaswaran.

Sitting :- Mr.V.Bavasingam, Mr.A.Panchalingam (V.Principal), K.Sivarajah, A.Balasupramaniam (c) S.Thiruketheeswaran, Mr.M.Mahadeva (Principal), Mr.R.Mahendran, Mr.V.Ganashalingam (P.O.G), T.Thevaruban, A.Prabaharan (Goal Keeper)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# K.H.C.O.S.A – CANADA

## Life Membership from 2003 to 2010

| No | Last Name | First Name | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2003/2010 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Vallipuram | Raveendran | 150 | | | | | | | |
| 2 | Raja | Mahendran | | 150 | | | | | | |
| 3 | Yogaraja | Thavalingam | | 150 | | | | | | |
| 4 | Thavaraja | Ragu | | 150 | | | | | | |
| 5 | Manickanadarasa | Jaganmohan | | | 150 | | | | | |
| 6 | Namasivayam | Mahendran | | | 150 | | | | | |
| 7 | Ahampharam | Jeyarajah | | | 150 | | | | | |
| 8 | Arasaratnam | Chandrakumar | | | 150 | | | | | |
| 9 | Seevaratnam | Ketheeswaran | | | | 150 | | | | |
| 10 | Thevarajah | Rabimohan | | | | 150 | | | | |
| 11 | Muthaiah | Paranthillairajah | | | | 150 | | | | |
| 12 | Sockalingam | Yogalingham | | | | 150 | | | | |
| 13 | Thirunavukarasu | Thirukumar | | | | 150 | | | | |
| 14 | Kulanayagam | Ramamanohari | | | | 150 | | | | |
| 15 | Balasingham | Yogaswaran | | | | 150 | | | | |
| 16 | Sinnathurai | Kuganendran | | | | 150 | | | | |
| 17 | Ponnampalam | Savuntharajan | | | | 150 | | | | |
| 18 | Ramasamy | Ratnakumarasingam | | | | | 150 | | | |
| 19 | Nagalingam | Balakumar | | | | | 150 | | | |
| 20 | Kanthasamy | Thavananthen | | | | | 150 | | | |
| 21 | Wignarajan | Pathmini | | | | | 150 | | | |
| 22 | Kathivel | Sivadevi | ***** | | | | 150 | | | |
| 23 | Supramaniam | Manivannan | | | | | 150 | | | |
| 24 | Selvanayagam | Sritharan | | | | | 150 | | | |
| 25 | Sathiyaseelan | Suganthan | | | | | 150 | | | |
| 26 | Ratnagopalapillai | Uthayakumar | | | | | 150 | | | |
| 27 | Shanmuganathen | Saravanapavan | | | | | 150 | | | |
| 28 | Navaratnam | Wimal | | | | | 150 | | | |
| 29 | Ramasmy | Logan | | | | | 150 | | | |
| 30 | Thirunavukarasu | Thevakumar | | | | | 150 | | | |
| 31 | Vallipuram | Jaganathen | | | | | | 150 | | |
| 32 | Anantharajah | Premananthen | | | | | | 150 | | |
| 33 | Ravichandran | Shanthila | | | | | | 150 | | |
| 34 | Thiruvilankam | Sreetharan | | | | | | 150 | | |
| 35 | A.K | Tharmendran | | | | | | | 150 | |
| | **TOTAL** | | **150** | **450** | **600** | **1350** | **1950** | **600** | **150** | **$5,250** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# KOKUVIL HINDU COLLEGE OLD STUDENTS' ASSOCIATION - CANADA

## Contributors for Land Purchase Dontion as at 15th February 2010

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 7-Mar-09 | 1666 | A | Seelan | | | $ | 100 |
| 10-Mar-09 | 1668 | K | Balaranjini | | | $ | 75 |
| 10-Mar-09 | 1669 | S | Namagal | | | $ | 100 |
| 13-Mar-09 | 1672 | A | Jeyarajah | | | $ | 500 |
| 19-Mar-09 | 1675 | Kugathasan | Ranchi | | | $ | 100 |
| 22-Mar-09 | 1677 | M | Umakaran | | | $ | 100 |
| 22-Mar-09 | 1679 | T | Rabimohan | | | $ | 550 |
| 22-Mar-09 | 1680 | S | Ariyathas | | | $ | 100 |
| 29-Mar-09 | 1683 | R | Jeyanthiran | | | $ | 100 |
| 29-Mar-09 | 1684 | R | Logan | | | $ | 500 |
| 29-Mar-09 | 1685 | V | Pathmini | | | $ | 100 |
| 29-Mar-09 | 1686 | Rajah | Mahendran | | | $ | 500 |
| 29-Mar-09 | 1687 | Sathiyapama | Mahendran | | | $ | 500 |
| 29-Mar-09 | 1688 | Rajah | Pararajasingam | | | $ | 500 |
| 30-Mar-09 | 1689 | C.S. | Shanmuganathan | | | $ | 100 |
| 29-Mar-09 | 1693 | Thambipillai | Ponnampalam | Rs | 50000 | $ | 550 |
| 7-Mar-09 | 1753 | Ragu | Thevarajah | | | $ | 600 |
| 7-Mar-09 | 1754 | Sukanya | Thevarajah | | | $ | 600 |
| 7-Mar-09 | 1755 | Roshan | Thevarajah | | | $ | 600 |
| 7-Mar-09 | 1757 | Jeyadavi | Kuganendran | | | $ | 580 |
| 13-Mar-09 | 1758 | Vaitheeswaran | Kathiravelu | | | $ | 600 |
| 14-Mar-09 | 1759 | Sasitheran | Supramaniam | | | $ | 600 |
| 15-Mar-09 | 1760 | Arunthevi | Shanmuganathan | | | $ | 25 |
| 15-Mar-09 | 1761 | M.V. | Jeganathan | | | $ | 25 |
| 15-Mar-09 | 1762 | | Jeyaweerasingam | | | $ | 25 |
| 15-Mar-09 | 1763 | S | Kumaresan | | | $ | 50 |
| 15-Mar-09 | 1764 | | K.P | | | $ | 50 |
| 15-Mar-09 | 1765 | | Pare | | | $ | 50 |
| 15-Mar-09 | 1766 | S | Paramesan | | | $ | 25 |
| 15-Mar-09 | 1767 | | Parajalingam | | | $ | 50 |
| 15-Mar-09 | 1768 | | Shanmu | | | $ | 25 |
| 15-Mar-09 | 1769 | Rani. Bala | Simiyanenthen | | | $ | 200 |
| 15-Mar-09 | 1770 | K | Sithemparanathen | | | $ | 25 |
| 15-Mar-09 | 1771 | A.K | Tharmenthiran | | | $ | 100 |
| 15-Mar-09 | 1772 | A.N | Thiventhiran | | | $ | 100 |
| 15-Mar-09 | 1773 | | K.W | | | $ | 25 |
| 15-Mar-09 | 1774 | M.V. | Shanmuganathen | | | $ | 50 |
| 29-Mar-09 | 1776 | Chanthirika | Nagendran | | | $ | 600 |
| 30-Apr-09 | 1779 | Sreetharan | Mathini | | | $ | 680 |
| 30-Apr-09 | 1780 | A.R. | Arasaratnam | | | $ | 500 |
| 30-Apr-09 | 1781 | Supramaniyam | Suthaker | | | $ | 600 |
| 30-Apr-09 | 1782 | Sivanathen | Sukesini | | | $ | 600 |
| 7-Jun-09 | | Saraswathy | Ahamparam | Rs | 25000 | $ | 250 |
| 28-Jun-09 | 1599 | Suppaya | Nagalingam | | | $ | 500 |
| 4-Jul-09 | 1785 | Ravichandran | Santhila | | | $ | 100 |
| 4-Jul-06 | 1786 | Nadarajah | Raviharan | | | $ | 100 |
| 29-Aug-09 | 1788 | Balasubramaniam | Sulojana | | | $ | 100 |
| 29-Aug-09 | 1790 | Thambirajah | Bashkaran | | | $ | 50 |
| 9-Feb-10 | | Jeyamanoharan | Manikanadarajah | Rs | 1000000 | $ | 10,000 |
| **15-Feb-10** | | **TOTAL LAND PURCHASE DONATION** | | | | **$** | **22,960** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது இதயத்திலிருந்து ......

எமது பழைய மாணவர் சங்கம் கனடா கிளையினால் நடாத்தப்படும் நூற்றாண்டு விழாவிற்கும், **"மகுடம் 2010"**ற்கும் வருகைதந்து சிறப்பித்த பிரதமவிருந்தினர்கள் திரு.திருமதி.அ.முத்துலிங்கம் அவர்களுக்கும், திரு.திருமதி. படிகலிங்கம் ஞானேந்திரன் அவர்களுக்கும்

- இவ் விழாக்களை கண்டுகளிக்க வந்திருக்கும் இரசிகப் பெருமக்கள் அனைவருக்கும்
- எப்பொழுதும் எமக்கு ஆதரவும், ஊக்கமும் தரும் எம் கல்லூரியின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் யாவருக்கும்
- ஆசிச்செய்தியை தந்துதவிய அனைவருக்கும்
- நிகழ்ச்சிகளைச் சிறப்புடன் நடாத்த ஆதரவு தந்துதவிய வர்த்தக மற்றும் தனியார் நிறுவனங்களுக்கும்
- இம்மலருக்குப் பயன்தரும் கட்டுரைகள், விளம்பரங்கள் தந்துதவியவர்களுக்கும்
- நூற்றாண்டு விழாவையும், கலைவிழாவையும் சிறப்பிக்க பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளை வழங்கிச் சிறப்பித்த கலைஞர்களுக்கும், தொண்டர்களுக்கும்
- அழகுற வண்ணப் புகைப்படங்கள், காணொளி நாடாப்படம் (வீடியோ) ஆகியவற்றை எடுத்துதவிய கலைஞர்களுக்கும், ஒலி, ஒளி, மேடை அமைப்பாளர்களுக்கும்
- சிற்றுண்டி, தேநீர், மற்றும் குளிர்பானங்கள் தந்து உதவியவர்களுக்கும்
- இரு நிகழ்ச்சிகளையும் மக்களிடம் கொண்டு சென்ற பத்திரிகைகள், வானொலி நிலையங்கள், தொலைக்காட்சி நிலையத்தினருக்கும்
- இம்மலரை அச்சிடுவதற்கு அச்சமைப்புச் செய்தவர்களுக்கும், அழகிய மலராக சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய அச்சகத்தினருக்கும்
- இனிய இவ்விரு நிகழ்ச்சிகளையும் சிறப்பாக நடாத்த மண்டபங்களைத் தந்து உதவியவர்களுக்கும்

**எமது சங்கம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

கொ.இ.க.ப.மா.சங்கம் கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RBC Royal Bank

## WE CAN BUILD THE MORTGAGE THAT FITS YOUR NEEDS



## SUGAN SATHIASEELAN, AMP

Mortgage Specialist

**Direct : 416-271-7584**

***WITH CHOICE, CONVENIENCE & COUNSEL***


**Tel : 416-412-6974 Fax : 905-201-6609**

**Steeles & Markham Branch, 6021 Steeles Ave. East, Toronto, ON M1V 5P7**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EYE EXAM


# OPTIMART



Bright Optical Opticians

Meet the optician and receive your glasses within an hour

Served By Licensed Opticians





Eye Glasses, Contact Lenses
We have excellent prices on colour contact lenses to change the colour of your eyes

(416) 266-3389
3150 Eglinton Ave.
(Markham & Eglinton)
Scarborough, ON M1J 2H2


(416) 690-4649
294 Main St. (At Danforth)
Professional Building
Toronto, ON M4C 4X5




Office Hours:
Mon-Fri: 10am - 8pm
Sat: 10am-5pm
Sun: Closed




**3351 Markham Road**
**(Markham & Steeles)**
**Toronto, ON M1X 0A6**
**419-297-9903**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BUYING/SELLING HOUSE

# 416.PUNCH ME




**PUNCH**
SOCKALINGAM
Broker

**SHIAMALA**
RATNASABAPATHI
Sales Representative

## 416.786.2463

**Century 21**
**Affiliate Realty Inc. Brokerage***

208-80 Corporate Dr.
Scarborough, ON. M1H 3G5
Direct : 416. 786.2463
Tel : 416.290.1200

* Independently Owned And Operated. Not indented to solicit properties currently listed for sale or buyers under contract.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "Foundation for Your Financial Freedom"

## Excellent Rates For All Your Insurance Needs!

**PERMANENT INSURANCE** - PAY ONLY 10, 15 OR 20 YEARS AND YOU WILL BE COVERED FOR YOUR WHOLE LIFE OR 100% PREMIUM WILL BE REFUNDED WITH INTEREST

**TERM INSURANCE** - PICK YOUR TERM COVERAGES UP TO AGE 85

**CRITICAL ILLNESS** - 100% MONEY BACK OR COVERAGE UP TO THE AGE OF 100

**MORTGAGE INSURANCE** - PICK A TERM TO COVER YOUR MORTGAGE NEEDS

**NON-MEDICAL INSURANCE** - GET A COVERAGE WITHOUT MEDICAL TEST FOR ANY AGE

**GROUP INSURANCE** - FOR COMPANIES OR SELF EMPLOYEES

RRSP & Investments - RESP (Education Savings Plan) - Final Expense Products - Accidental Death & Dismemberment - Disability Insurance - Drug, Dental & Medical Plan - Travel Insurance

***PRE ARRANGEMENT WITH FUNERAL HOMES***

**PROTECTION AND INVESTMENT POLICIES**

**ENSURE THAT YOUR FAMILY HAS MONEY TO RELY ON WHEN YOU PASS AWAY CHOOSE A PLAN WHICH FITS YOUR BUDGET**

## Vany Jeganmohan

Insurance Advisor

**Cell: (416) 670-7436**



Fax: (416) 293- 9409, Email: vany@megafinancial.ca PH 28 - 4168 Finch Ave. E, Scarborough, ON M1S 5H6

MEGA Financial Group

RBC | UL Mutual | IA Industrial Alliance Insurance and Financial Services Inc. | Assumption Life Financial Services | Canada Life | Unity Life of Canada



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org